# உரிமையுரை.

——oo——

இந்நூலிற் கூறப்படும் பெருமைகள் பெரும்பாலும் வேளாளரைச் சுட்டுவதாலும், அவர்கட்கு ஞானாசிரியர், சைவாசாரியர்களாகவேயிருத்தலாலும், இந்நூலாசிரியரும் சைவ அபிடேகத்தர் மரபுடையராகையாலும், இந் நூலுரிமை பெறுதற்குடையாரும் அவ்வாறிருப்பின் பெரிதும் பொருந்துமென நினைந்து, பிறப்பாலும், இருப்பாலும் அவ்வண்ணமே பொருந்திய வள்ளலாகிய **திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீன அதிபதிகளான ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கட்கு** உரிமையாக்கினேன்.

இலக்கண விளக்க பரம்பரை,

திருவாரூர் சோமசுந்தர தேசிகன்.

உ

சிவமயம்.

# சோழமண்டல சதகம்.

———oo———

## பதிப்புரை.

"The name CHOLA is given to a people, as well as to a Dynasty of rulers, not only in ordinary parlance but also in literature, or as ago can take us. Who the people were, and where they came from, it seems well nigh impossible to determine at present. That they were in the country that they occupied in historical times very much earliar than the begining of History for South India did not admit of any doubt whatever." [S. Krishnasamy Iyengar's *Ancient India* ]

"சோழரென்ற பெயர் ஜனங்கட்கும், அரசருள் ஒரு வம்சத்தினருக்கும் ஜனங்களால் இடப்பட்டழைக்கப்படுவதோடு, நூல்களிலுங் கூறப்படுவதாகும். இவர்களைப்பற்றிய முன்னூலாவது, தேச வழக்குகளாவது எவ்வளவு புராதனத்தைக் கொடுக்கக்கூடுமோ அவ்வளவு தூரமும் அவ்வளவு தொன்று தொட்டுக் கேட்கப்படுகிறது. இவர்கள் யார்? எங்கிருந்து வந்தனர்? என்று இப்பொழுது நிர்ணயிப்பது அசாத்தியம். ஆயினும், அவர்கள் தென்னிந்தியாவின் சரித்திர மாரம்பிப்பதற்கு வெகுகால முன்னரே இங்கிருந்தனரென்பதில் ஆக்ஷேபனையேயில்லை" என்பர் சரிதர்.

பூர்வ காலத்தே தக்ஷிணதேசமானது கன்னியாகுமரிக்குத் தெற்கு நாற்பத்தொன்பதின் காவததூரம் நாடாயிருந்ததென்று சரிதத்தின்வாயிலாக அறிகிறோம். விந்திய பர்வதத்திற்குத் தெற்கேயுள்ள நிலப்பரப்பு சேர, சோழ, பாண்டியவரசர்களால் ஆளப்பட்டுவந்தது. ஒரோர்காலத்து ஒவ்வொரு இராச்சியம் அதிகப் பரந்தாயும், ஒவ்வொரு அரசாட்சியில் கொஞ்சம் சுருங்கியதாயும் இருந்ததுமுண்டு, ஆயினும், வெகு புராதன காலமென்று

சொல்லப்படும் அசோகனது காலத்திலேகூட இவ்விராச்சியங் கள் தனி இராச்சியங்களாகவிருந்தனவென்று அவனது சாசனங்க ளால் அறிகின்றோம். இவ்வாறு சிறந்து படைத்து ஆண்டுவந்த மன்னர் பலர் சரித்திரங்கள் சங்க நூல்களால் அறியப்படுதலால் இவை இராச்சியங்கள் என்ற பெயரையே உடையனவாயிருந்தன. ஆயினும், பின்னர் கி. பி 9, 10-வது நூற்றாண்டுகளில் இவைகள் மண்டலங்கள் ஆயினவென்பது சாசனங்களால் அறியப்படுகின்றது. இக்காலத்தான், தொண்டைமண்டலம், சோழமண்டலம், பாண் டிமண்டலமென வகுக்கப்பட்டதும் ஆகும். இவ்வாறு வகுக் கப்பட்டபோதும், வகுக்கப்படுவதற்கு முன்னரும், அதாவது:— ஆதிகாலந்தொட்டே இந்நிலப்பரப்பு வேளாளராலேயே ஆளப் பட்டுவந்தது என்று அறியக் கிடக்கின்றது. அதற்குரிய ஆதாரங் களாவன:— தொல்காப்பியம் பொருளதிகாரம் இருபத்தொன்ப தாவது சூத்திரத்தே 'மேலோர் முறைமை நால்வர்க்கு முரித் தே' என்பதற்குக் கண்டவுரையில் நால்வருக்குமென்பது அந்த ணர், அரசர் இருவகை வேளாளரென்றும், வணிகர் என்று கூறாது இருவகை வேளாளரென்று கூறுவது குற்றமாகாதோவெ னின் 'உயர்ந்த வேளாளர் பகைவயிற் பிரிவுபற்றிப் பொருள் முடித்தலும், உழுதுண்பார் வாணிகத்தாற் பொருள் முடித்த லுங் கருதி' எனப்படுதலும் விளங்கும். அடுத்த மன்னர் பாங் கிற் பின்னோராகும்' என்னுஞ் சூத்திரத்துக்குக் கண்டவுரையில் 'அரசனைச் சார்ந்து வாழும் பகுதியராகி சிற்றல் காரணமாக பின்னோரெனப்பட்ட வேளாளர் வரையறையின்றி வேந்தனேவிய இறவெல்லாவற்றினும் பிரிதற் காக்கமுடையாராய்' என்றும் 'மன்னர் பின்னோர் என்ற பன்மையான் முடியுடையோரும், முடி யில்லாதோரும், உழுவித்துண்போரும், உழுதுண்போரும் என மன்னரும், வேளாளரும்' பலரென்றார். அரசருந் திறைவான பகைவயிலு காவிகொத்தன்மேலுஞ் சந்து செய்வித்தன்மேலும் பொருள் வருவாயிலேதுவாம். அவருள் உழுவித்துண்போர் மண் டல மாக்களுந் தண்டத்தலைவருமாய்ச் சோழநாட்டுப் பிடவூரும், அழுந்தூரும், நாங்கூரும், ஆலஞ்சேரியும், பெருஞ்சிக்கலும், வல்ல மும், கிழாரும் முதலிய பதியிற் றோன்றிய வேளெனவுரிமை யெய்தினோரும், பாண்டிநாட்டுக் காவிதிப்பட்டமெய்தினோரும், குறுமுடிப்பிறந்தோர் முதலியோருமாய் முடியுடை வேந்தர்க்கு மகட்கொடைக்குரிய வேளாளராம். 'இருங்கோவேண்மான் செ ழுங்குடிப் பிடவூ' ரெனவும், 'ஆலஞ்சேரி மைந்தனாருண்சேணி யிலாப்போனே' எனவும் சான்றோர் செய்யுட்செய்தார். உதார ணமாக உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி நாங்கூர்வேள்மகளை யும், கரிகாலன் அழுந்தூர் வேள்மகளையும் மணந்தனனென அறி

யப்பட்டிருக்கிறது. ஆகையால், வேந்தரும், வேளாளரும் ஒரே வகையினரென்பது தெளிவாகின்றது. அன்றியும், இவர்கட்கு வேதமோதல் முதலியனவுமுண்டென்பது அகத்திய சூத்திரமொன்றால் [illegible] தமிழ் [illegible] அந்தணர், அரசர், வணிகர்க்கு முயர்ந்த வேளாளருக்குரிய [illegible] கூறப்பட்டுள்ளன. ஆகையால், இவர்களது பழமை மிக்க புராதன மென்பதாகும். எவ்வாறெனில்,

உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து. 104-ம

என்ற திருக்குறள் வாசகப்படி உழவுத் தொழிலையுடைய வேளாளரே கொடைக்குப் பாத்தியமுடையவராவர். இவ்வாறின்றி,

தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். 62-4 அன்றே!

இவையன்றி ஆறுடைய [illegible] திருஆக்கூர்த் திருப்பதிகத்தில் 'வேளாளரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்குந் தாளாளர்' என்றது. [illegible] மேலும் வேளாளருக்குப் பிறப்பிடமானது சோழநாடே யாம் என்பது இந்நாட்டையாண்ட சோழர் பெருந்தகையொருவன் வடக்கிலுள்ள காவேரித் [illegible] நாட்டில் அழைத்துச் சோழியர் பலரைக் குடியேற்றினரென்று, (சரித்திரமும் ஒப்புக்கொண்டிருக்கிறது) செய்தியையே இச்சதகம் 23-வது செய்யுளில் 'தொண்டை நாட்டில் நற்குடியாயக் குடியமைத்ததுவும்' என்றும், 'பாண்டி நன்னாட்டில் சோழ வேந்தர்கள் பலரைக் குடியேறச் செய்தான் பாண்டிய [illegible]' 92-வது செய்யுளிலுங் கூறப்படுகிறது. தொண்டைநாடு சென்ற வேளாளரே அரசரோடு சமத்துவமுடையோராகி, முதல் வருவதுகொண்டு, முதன்மையாரெனவும் [illegible] இனர். அன்றி முதல் உடைமைபற்றி முதலியாரென்பது பொருந்தும். தொண்டைநாட்டை ஆண்டவர்கள் சோழரென்ற பெயரோடேயே மிகுதியுள்ளாரென அந்நாட்டுச் சாசனங்களால் அறியலாகும். ஆகவே, தமிழ்நாடு முழுதும் காணப்படும் வேளாளர் எல்லோரும் ஒரே வகுப்பினரென்பது அவர்களுள் சம்பந்தமோ ஜனத்துக்கருகம் முதலியனகொண்டும் ஒருவாறு துணிதல் கூடும். இவர்கள் இப்பொழுது பிள்ளை, முதலியார், செட்டியார் என்று பல பட்டப்பெயர்களையுடையராயினும், எல்லோரும் ஒரே வகுப்பினர்தான் என்று எண்ண இடமுண்டாகிறது.

இவ்வாறு பெருமையோடு வாழ்ந்த வேளாளர்களது கீர்த்திச்செயல்கள் பலவுளவாயினும், அவற்றுள் கம்பர் கூறிய எல்லை

க்குட்பட்ட சோழ நாட்டினரது அருஞ்செயல்கள் சிலவற்றை இச்சதகத்திலே ஆசிரியர் பொதிந்துவைத்திருக்கின்றனரென்பது "உம்பர் மகிழ் சூதமாமுனி சுந்தரமூர்த்தியுபமன்னியர் சங்கத்துளோர் உயர்கம்பர் பொய்யாமொழிப் புலவரவ்வையாருரைத்திடுங் கீர்த்திமுறையே, இப்புவியின் மிக்கான சோழமண்டல சதகமாயிரமுகத்துரைத்தோம்" என்பதால் இனிது விளங்கும். நமது ஆசிரியர் காலத்து வழங்கியுள்ள அநேக கதைகளும் பாடல்களும் இப்பொழுது கேட்பதற்கே கூடவில்லையென்றால் இனி என்னவாகுமோ?

இந்நூலாசிரியர் பெயர் ஆத்மநாத தேசிகர். இவரது தந்தையார் பெயர் விளங்கவில்லையாயினும், இவர் சிறந்த வித்வானாக இருந்தாரென்பது திண்ணம். இவர் பரம்பரைச் சைவ ஆசாரியர் வம்சத்திலுதித்து திருத்துறைப்பூண்டிக்கு வடக்கிலுள்ள வேளூர் என்ற ஊரில் வசித்து வந்ததால் வேளூர் ஆத்மநாத தேசிகரென்றே சொல்லப்படுவர். சிறப்புப்பாயிரத்தில் காளை ஆத்மநாதன் என்பதால் இவர் காளையார் அல்லது நந்திகேசுர கோத்திரமுடையாரென் றறியப்படுகிறோம், அவரது தாயாதி வருக்கத்துளோரும் இருக்கின்றனர். இவருக்குப் பௌத்திரரொருவர் 'முத்தையா' வென்றிருந்து வெகுநாட்களுக்கு முன்னமே காலஞ்சென்றுவிட்டதால், இவரது பாரியையும் திருவாரூரிலேயே வசித்து சிலவாண்டுகளுக்கு முன்னர் சிவபதமடைந்தாள்.

நமதாசிரியர்காலம் 1650-1728க்கும் இடைப்பட்ட காலமாகும். தஞ்சை சமஸ்தானத்தை முதலிற்பிடித்த மகாராஷ்டிர வம்சத்து ஏகோஜி மன்னர் காலஞ்சென்றபின், சகஜி மகாராஜா 1686-ல் பட்டத்துக்கு வந்து 1710-வரை அரசாண்டார். பிறகு இவரது இருசகோதரர்களும் அரசாட்சி செய்தனர். இம்மன்னன் கவிவாணர்களைப் பெரிதும் பேணி வந்தானென்பது இவரால் செய்யப்பட்ட இச்சதகமும், தண்டலையார் சதகமும், இன்னும் சில நூல்களும் அரங்கேற்றப்பட்டதோடு ஒப்பிலாமணிதேசிகர் செய்த சிவரகசியம் மூன்றாவது அம்சம், கும்பகோண ஸ்தலபுராணம் முதலியவைகள் அரங்கேற்றப்பட்டிருக்கின்றது கொண்டு அறியலாகும். ஜானகிபரிணயம், சிருங்கார திலகம், பரிபாஷாவிருத்தி வியாக்கியானம் என்ற வியாகரணம், ஷட்தர்சனி சித்தாந்தம் என்ற நூல்களையியற்றிய ராமபத்திர தீக்ஷிதரைப் பெரிதும் மதித்து வந்ததோடு ஆனந்தராயரே மந்திரித்துவமுடையராய் காரியங்களை நிர்வகித்து வந்தார் என்று இவர்களது நூல்களால் வெளியாகின்றது. அன்றியும் அரசன் அநேக சிவாலயங்களைச் ஜீர்ணோத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் முதலியன

செய்ததாகக் கல்வெட்டுக்களா லறியப்படுகின்றது. அவற்றுளொன்று:—“ கலியுக ஆதியான நாள்முதல் சென்ற வருஷம் 4818 சாலிவாகன சகாப்தம் 1681, இதன்மேல் செல்லாநின்ற ஏவிளம்பி வருஷ சித்திரைமீ 15உ பூர்வபக்ஷத் திரயோதசியும், உத்தரநக்ஷத்திரமும், சுக்கிரவாரமுங் (கூடிய சுபதினத்தில்) தியாகராச சுவாமியார், வன்மீகநாதசுவாமியார், ([illegible]) [illegible] லிங்கம் திருக்கோவில் அட்டபந்தன[illegible] போனதைப் பண்ணுவித்த பலன் மகா மண்டலேசுவரரான ராஜமானியராச ஸ்ரீ பிரதாபஸிங் மகாராஜா சாயபு (புத்திரர்) துளஜா மஹாராஜா, சரபோஜி மகாராஜா தர்மம்.” இவ்வாறு அரசரால் மதிக்கப்பட்ட இவர் தம் நூலை அரங்கேற்றியதற்கு இராஜசன்மானமாகப் பகல் தீவட்டி போட உத்தரவு வேண்டியதாயும், அவ்வாறே அரசன் உத்தரவு அளித்ததாகவும் கதை வழங்குகிறது. இவர் இந்நூலை வேளூருக்கு வெகு சமீபமாகவுள்ள சித்தாய்மூர் என்னுமூருக்கு அதிபனான அருணாசலவேள் வேண்டச்செய்தனரென்றும், அவ்வேள் இவருக்கு வேண்டிய மரியாதைசெய்தானென்றும் சதகம் 100-வது செய்யுளாலும், பிறசெய்யுள்களாலும் அறியப்படுகின்றது. ஆசிரியர்காலத்து வழங்கிய கதைகள் இக்காலத்துக் கேட்கப்படுவதே அரிதாகுமாயின் இன்னுங்காலஞ் செல்லச்செல்ல எவ்வாறாகுமோ அறியேன்.

இவ்வரிய நூலை யான் அச்சிடுதற்குச் சிறிதும் ஆற்றலுடையே னல்லேன் என்பது, இதற்காகப் பிரதி தேடிப்போனபோது சித்தாய்மூரில் இப்பொழுது அதிபதியாயிருக்கும் இராமநாதப் பிள்ளை குமாரரான சபாபதிப் பிள்ளை யவர்கள் இந்நூலை அச்சிடுவதற்காக மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் திருநாகைக் காரோண புராணம் பாடுகையில் காண்பித்ததாயும், அவர்கள் காலத்திலேயே இது அச்சேறவில்லையென்றும், பின்னரும் 10-வருடங்கட்குமுன், அவ்வூரிலுள்ள சிதம்பரம் பிள்ளையென்பவர், அக்காலத்துக்கும்பகோணத்திருந்த ஒரு மகாவித்துவானிடம் பிரதிகள் கொண்டுபோய்க் கொடுத்ததாயும், பதிப்பிப்பதாகச் சொல்லி காலஹரணம் செய்துவிட்டாரென்றும், பின்னரும் குடவாசலிலிருந்து வித்துவானென்றுவந்த ஒருவர் ஏடுகளை எடுத்துச்சென்றனரேயன்றி பின் யாதுமறியேன் என்றுஞ் சொல்லியதுவே போதியதாம். ஆயினும், எல்லாம் வல்ல இறைவனது கிருபையால் அடியேனிடம் அச்சமயம் ஓரிடத்திருந்துவந்த ஓர் கடிதத்தைக் காட்ட, கொஞ்சம் நம்பிக்கை பிறந்து தம்மிடமிருந்த ஒரே பிரதியையும் உதவிச் சில அரிய செய்திகளையும் தெரிவித்தனர். பல வித்துவான்கள் தங்களிடம் ஏடுகளிருப்பதாகச் சொல்லிச் சமீபித்தபோது

வையிரித்தனர். சிலர் எழுதிய கடிதங்கட்கு மௌனவிடை பகர்ந்தனர். ஆயினும், என்தருமை நண்பர் தஞ்சை கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ த. உலகநாதபிள்ளையவர்களும் பெரிதுந் தம் பிரதியைக் கொடுத்து முன்னமே உதவினார். ஸ்ரீ கைலாசம் பத்திராதிபராகிய ஸ்ரீ தியாகராஜ ... பிரதியொன்று தந்தனர். இவைகளையும், மற்றும் பல பிரதிகளையுங்கொண்டு ஒத்துநோக்கி எழுதிமுடித்தேன். சங்கப்பாட்டுக்கள் இப்படி அடையாளமிட்டு அச்சிட்டிருக்கிறது. இதனைப் பரிசோதிக்கும்போது, நாகைவன்பாடி வித்துவான் ஸ்ரீமத் ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்களும், ஸ்ரீமத் ஐ. சாமிநாத முதலியாரவர்களும், ஸ்ரீ உலகநாதபிள்ளையவர்களும், கருவை யாழ்ப்பாணம் ஸ்ரீமத் சொக்கலிங்கத்தம்பிரான் அவர்களும், ஆங்காங்கு திருத்தங்களைச் செய்துதவியதற்கு என்றும் கடப்பாடுடையேன். “சொல்லை நிறுத்தல் கவிதைக்கு நெறியாகும்” அடிப்படை நூலாசிரியனுக்குச் சிறிதும் பொருத்தமுடையதல்லவெனும் வேதமுனிவரே கூறியிருக்கையால் ‘இலக்கணக்கவிதை சொல்லும் பயன் மேவிலர்’ என்றபடி பெரியோர்கள் அடிமையுற்ற சொல்லைப்பட்ட வரம்பைப் பிழைகளைப் பொருட்படுத்தாது விடுத்தருளவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகின்றேன். இதனிற் சொல்லப்பட்ட கதைகளை வேறுவித நூல்களிலிருப்பின் நண்பர்கள் தயைகூர்ந்து தெரிவிப்பார்களாயின், அவர்களது பெயரோடு அடுத்த பதிப்பில் வெளியிடவிருக்கின்றேன்.

இந்நூலைச் சிந்தையிலெண்ண அடிக்கடி ஊக்கியும், மற்றுஞ் சொல்லுதற்கில்லாத அநேக நன்மைகளையுஞ்செய்த ஒரு நண்பருக்கு என்னது மனப்பூர்வமான வந்தனத்தைத் தெரிவிப்பதோடு, இம்முயற்சியான நற்காரியங்களில் பிரவிர்த்திக்கும்படி அருள் ஸ்ரீ தியாகப்பெருமானை மனமொழி மெய்களால் முக்காலும் வணங்குகின்றேன்.

திருவாரூர்,
9—3—16.

இலக்கண விளக்க பரம்பரை,
சோமசுந்தர தேசிகன்.

Dr. U. V. S. IYER LIBRARY MADRAS-90

# INTRODUCTION.

---

In this land of ours, it is the habit of many people to speak proudly of their families, of their ancestry, of their ancient customs and of their past glory. I am one of those people, and as such, may be excused for writing this short preface. The Cholamandala Sathakam speaks of the greatness ot my community. Thirteen saints, many philanthropists, velir, kizhar, udayar, cholas, cholias, ministers, viceroys, heads of civil and military authority, and great poets mentioned in this work are my own castemen. Need I express the joy I feel whenever I read of my noble ancestors ? The Cholia Velala who made great the land they lived in, and who were made great by the land they lived in, are not like ordinary folks. The study of their institutions wiil amply repay the labour spent on it by the antiquarian or the economist. The early social organisation of the community of Velalas is admirable. Unfortunately we, the Velalas of to-day, have not been able to preserve those wonderful social structures. The Velalas had their life made of loyalty and their body made of obedience to constituted authorities. Truth was all they cared for. Their actions were all benefactions. They cultivated the soil, turned the crude gifts of nature into finished articles of manufacture. They carried on a wide and enterprising trade by land and by sea. Their form of Government was just and good. The ideal of their life was righteousness, the aim of their life, divine wisdom.

Cholamandala Sathakam was written by Athmanatha Desikar of Velur. The editor Mr. S. Somasundara Desikar of Tiruvarur, has taken very great trouble to collect the valuable and extremely interesting notes he has added to the work. The incidents mentioned in the work took place centuries ago

and their accounts coming down through tradition have been, inevitably, varied and modified in different parts of the Tamil country. There are a so various readings of the text extant. It is no easy work to collect, arrange, and weigh the various readings before publishing Happily for me, some of the work of considering the readings devolved on me also. The work is a little one, unable to deal fully with the lives of the persons mentioned in it. But it is a tiny seed containing in itself the huge banyan. May the Velir flourish, may the fame of the Nangur Kizhan, my own progenitors endure for ever.

Dharmasamvardhani Vilas, Tranquebar, 5 3—16. — P. A. MUTHUTHANDAVARAYA PILLAI.

உ

சிவமயம்.

# பாடப்பட்டோர்

## வரலாறு.

1-வது செய்யுள். விநாயக்கடவுள் காவிரி பெருகச் செய்த கதையைக் கூறுவது:—இந்திரன் சூரபன்மனால் துரத்தப்பட்ட போது, இப்பூவுலகில் சீகாழி என்னும் க்ஷேத்திரத்தையடைந்து திருநந்தவனமியற்றி சிவபெருமானைப் பூஜித்துவருங்கால் மழையின் வளப்பங்குறைய எக்காலத்தும் யாதொருகாரியமும் தன்னை வேண்டுபவர் இடையூறு எய்தாது பெறும்படி அநுக்கிரகிக்கவல்ல விநாயகப்பெருமானை நாரதமுனிவரது உபதேசப்படி வேண்ட அவர் அகஸ்தியரது கமண்டலத்திலுள்ள காவிரிப்பாவையைக் கவிழ்க்க நதியாகப்பெருகியோட இந்திரனது திருநந்தவனங்கள் செழித்து வன்பூத்தழைந்து வளரக் கிருபை செய்தார்.

2-வது செய்யுள். முருகப்பிரான்மேற்று:—பிரமனுடைய புத்திரரான காசிபர் தவமியற்றுங்காலை, மாயையென்பாள் அவர்பக்கல் சென்று நிற்ப, நிஷ்டைதெளிந்து மாயையைப்பார்த்த காசிபர் அவளுடன்கூடி சூரபன்மன் முதலான அனேக பிள்ளைகளைப் பெற்றனர். பிற்றைநாளில் சூரபன்மனும் அவனது சகோதரர்களும் தெற்கில் சமுத்திரமத்தியில் நாடமைத்துக்கொண்டு தேவர்களைச் சிறையிட்டு உபத்திரவஞ்செய்ய, அதனையாற்றாது சிவபெருமானிடத்தில் முறையிட்டகாலத்து, அவரிடத்தினின்றும் ஆறு பொறிகளுண்டாயின. அவைகளைச் சரவணப் பொய்கையிலிட வளர்ந்து வருநாளில் அம்பிகையால் அவை யொருங்கே

எடுக்கப்பட, அவை ஒருடற்பெறலாயின. அதுவே ஷண்முகக் கடவுளாயிற்று. ஆறுமுகன் பின்னர் இமயவெற்பிலுள்ள கந்தமாதனத்திற்றங்கி வருநாளில் சிவபெருமானது கட்டளைப்படி அவரது சக்திபெற்று சூரபன்மனை வதஞ்செய்தாரென்ப. கந்தமாதனத்துக்கிணையாக திருவேரகம் என்னும் சுவாமிமலையைக்கூறுவர். முருகவேளது ஆறுபடை வீடுகளிலிது மூன்றாவது. கந்தபுராணம் முருகனது திருவிளையாடல்களை விரித்துக்கூறும். திருவேரகத்துக்கு அந்தாதி பிள்ளைத்தமிழ் முதலியவைகளிருக்கின்றன.

கும்பகோணம் ரயில்வே ஸ்டேஷனுக்கு 4-மைல் தூரத்திலுள்ளது.

3-வது செய்யுள். சிதம்பரத்தைப்பற்றியது:—இத்தல மகிமையையும், நடராஜப்பெருமானது பெருமையையும் தமிழுலக மாத்திரமின்றி ஏனையோரும் அறியாததன்று.

4-வது செய்யுள். திருவாரூரைப்பற்றியது:—விராட்புருடனுக்கு மாத்திரமன்றி, புவிமடந்தைக்கு மூலாதாரமாகக்கொண்ட க்ஷேத்திரமாகும். வாசிஷ்டலைங்க புராணத்தே, அதனாசிரியர் இதனையும் யகவான்புரத்தையும் சிறக்க இது மேக்குறவன்றே அதனைவிட்டு இதனை மேவினன். 'அமலனும் விழைவால்' என்றார். 'பூவசஞ்செய்து விண்ணாடு புணர்பகை போக்கியவோர் கோவசஞ்செய வளரா ரூர்த்தியாகர்' என்றார் திருவாரூர் ஒரு துறைக்கோவையாசிரியர். இதனிற் கூறப்பட்ட கோமுசுகுந்தனும், இவன் தேவர்களை வருத்திய அசுரர்களை வென்றதன்காரணமாக, தேவேந்திரன் சிலவற்றை நீக்கி வேண்டியவற்றைக் கேட்கப் பணித்தபோது, முசுகுந்தன் தியாகப்பெருமானை வேண்ட, தான் ஆன்மலாபப் பேற்றுக்காகத் திருமாலிடமிருந்து பெற்றுப்பூஜித்த முகூர்த்தத்தைக் கொடுக்க மனம் பொறாது, அதுபோன்று ஆறு முகூர்த்தங்களைத் தந்து, உண்மை முகூர்த்தத்தைக் கடைசியாகப் பெற்று, தனது இராஜதானியான திருவாரூரிலே தாபித்தனன். அன்றியும், கபில பரந்தாமனைக் குணவனுடைய தவம் புரிந்ததாலும்.

இச்செய்யுளிற்கண்ட 'அந்நாட்டமிழ்க்குத் தூது சென்ற'தாவது. சிவபெருமான் தனதுருவத்தைக் கண்ணாடியிற் பார்த்தபோது பிரதி பலித்த உருவைச் சுந்தரமே வாவென்றழைக்க, அச்சாயை உருப்பெற்று வந்ததே சுந்தரனாயிற்று. பின்னர் தேவர்கள் மேருவை மத்தாகவும், வாசுகியைக் கயிறாகவும் பூட்டி, அமிர்தம் வேண்டிக் கடலைக் கடைந்த காலத்து, வாசுகியினின்றும் விஷம் கடலிற் சிந்த, அது பொங்கி எழுவது கண்ட தேவர்கள் சிவபிரானிடத்து முறையிட்டபோது, அவ்வாலத்தை எடுத்துவரும்படி சுந்தரருக்குக் கட்டளையிட்டார். அக்காரணம்பற்றி ஆலாலசுந்தரர் என்னும் பெயருடையராய், சிவபெருமானது அணுக்கத் தொண்டராய் அமர்ந்துவருநாளில், ஓர்நாள் திருநந்தவனத்தில் மலர் கொய்கையில் அவண் அதே காரியத்தின் பொருட்டுச் சென்றிருந்த தேவியினது சேடியராகிய கமலினி, அநிந்திதையென்பாரைக்கண்டு காமுற, அதனையறிந்த ஈசன் இவர்களை ஊழினை யனுபவித்துவரக் கட்டளையிட்டார். கட்டளைப்படி சுந்தரர் அயோனிஜராய் திருவெண்ணைநல்லூர் சேர்ந்து, வளர்ந்துவருநாளில் சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப்பட்டு, திருவாரூரே தமக்கு வாசஸ்தானமாகக்கொண்டு, சிவபெருமானுக்குமுன் அணுக்கத்தொண்டராயிருந்தமைபற்றியும், தூது சென்றமைபற்றியும் தம்பிரான் றோழனெனும் பெயர்பெற்று வசித்துவருநாளில், கமலினியார் பரவையார் என்னும் நாமத்தோடு திருவாரூரில் ஈசனுக்குத் தொண்டு செய்துவருவாளை ஒருநாள் கண்டு மோகமுற, அன்றுமுதல் அவளைச்சேர்ந்து அவளோடு வசித்துவந்தார். அவள்பொருட்டுத் தான், அக்காலத்து குண்டையூர் என்னுமூரில் வசித்த குண்டையூர்க்கிழாரிடம் நெல் வேண்ட, அவர் நெற்சேர்களைக் காட்டி, வேண்டிய அளவு எடுத்துப் போகும்படி சொன்னார். இக்கதைதான் 32-வது செய்யுளில் கூறப்பட்டிருக்கிறது. அவர் கொடுத்த நெல்லை எடுத்துப்போக ஆட்களில்லாது பக்கத்தேயுள்ள திருக்கோளிலியென்னும் சிவதலத்தையடைந்து, சிவபெருமானை 'நீள நினைந்தடியேன்' எனுந் திருப்பதிகமோத, அவனதருளால் பூதகணங்கள் நெல்லைத் திருவாரூர் முழுவதும் நிரப்பின. அதுகண்ட பரவை

யார், அவரவர்களது வீட்டினெல்லை வரையிலுள்ள நெல்லையவரவர்களே உபயோகப்படுத்திக்கொள்ளலாமென முரசறைவித்தான் என்பது 3-வது செய்யுளில் விளக்கப்பட்டது. இவ்வாறு வாழ்ந்துவருநாளில் வடக்கிலுள்ள சிவதலங்களை தெரிசிப்பானெண்ணிச் சென்ற சுந்தரர், திருவொற்றியூரின்கண்ணே சிவபிரானுக்குத்தொண்டுசெய்துவந்த அநிந்திதையான சங்கிலியாரைக்கண்டு அவளோடு கூடிச் சுகித்து வாழவெண்ணி, அவளைவிட்டுப் பிரிவதில்லையென ஒற்றியூரறிய ஆணையிட்டுத் தந்தவர் தியாகேசப்பெருமானது நினைவுண்டாகவே, அவளை விட்டுப் பிரிந்துவருகையில் இரண்டு கண்களும் தெரியாதவராய், திருமுல்லைவாயிலிற் றண்டமொன்று பெற்று, அதனைத்தாசையால் வரும்போது திருக்கச்சியேகம்பத்தானருளால் இடக்கண் பெற்று, திருவாரூரையடைந்து பரவையுண்மண்டலியமர்ந்த பெருமானை வேண்டியுங் கண்பெறாது திருமூலட்டானரை வேண்டி இருகண்ணும் பெற்று பரவையார் வாசற்செல்ல அவரூடிக் கதவடைத்தனர். தியாகப்பெருமானது சந்நிதி சென்று இறைஞ்சலும், பெருமான் அடியவன்பொருட்டு பரவையாரிடம் சென்று கூறினராக. முதற்கண் அறியாத பரவையார் தடுத்தலும், மறுமுறையும் தூதுபோக விடுத்தனர் சுந்தரர். இரண்டன்முறை சென்ற காலத்து, பரவையாரது திருவுள்ளத்தில் வந்த பெரியார் இவரென்று தோன்றச்செய்து சந்திசெய்துவித்தனர். இதுவே இங்கு கூறப்பட்ட தூதாம்.

ஆனாரிலையே யயனுந் திருமாலுந் தேடிக்
காணாதடி முடியைக் காண்பதற்கு—மேனாள்
இரவுதிரு வாரூரி லெந்தைபிரான் சென்ற
பரவை திருவாயிற் படி.

என்றார் காளமேகப்புலவர்.

**5-வது செய்யுள். ஸ்ரீரங்கத்தைப்பற்றியது.** பிரமன் மகாவிஷ்ணுவைக் குறித்துத் தவம் பண்ணும்போது, மகாவிஷ்ணு கூர்மாவதாரத்தோடு தோன்றி, பிரணவத்தையும், அஷ்டாக்ஷ

ரத்தையும் உச்சரிக்கும்படி அருளினர். அஃதைப்போல, பிரமன் செய்துவருங்காலத்து, கார்வண்ணன் இனிய கோவிற்றேன்ற, அதனுழைச் சென்று, மாயனைப் பாடியாடி என்றும் இது போலிருக்கவேண்டிப் பழையபடி சிருட்டித்தொழிலை நடத்தினான். இங்ஙனமாக, இட்சுவாகு தேவலோகம் சென்று மணிவண்ணனைப் பெற்று அயோத்தியில் ஸ்தாபித்தான். அவனை உள்ளிட்டாரும் பூஜை நடத்திவந்தனர்.

தர்மப் பிரமனென்னுஞ் சோழன் அம்மணிவண்ணப்பெருமானை சோழநாட்டிற் றாபிக்கவேண்ணி. கோர தவம்புரிய பெருமானது அனுக்கிரகத்தால் அது கிட்டுமென அறிந்தான். இங்ஙனமாக, ஸ்ரீராமபிரான் பிறந்து, இராவண சம்மாரம் நடாத்தியருளித் திரும்ப அயோத்திபுக்கு அசுவமேதயியற்றுகையிற் சென்றிருந்த தர்மப்பிரமன் நாம் நினைத்த காரியம் கைகூடுமென்றெண்ணி, முன்னரே வந்து நகரை யலங்கரித்தானாக. அங்கிருந்த அரங்கநாதப்பெருமானை விபீஷணன் தம் மாண்மார்த்தமாகப்பெற்றுவரும்போது, ஸ்ரீரங்கத்துச் சந்திரபுஷ்கரணியடியில் வைத்து அன்று காலத்தை நடாத்த, சோழர் பெருந்தகை. அவரை அங்ஙனே வைத்து மற்றும் ஒன்பது நாள் விழாக்கொண்டாடினான். பின்னர், விபீஷணர் பெருமானை எடுத்துச்செல்ல எவ்வாறு முயன்றும் பயன்படாதது கண்டு அவ்விடமே தாபித்துச் சென்றனன்.

இங்குத்தான் ஸ்ரீராமானுஜாச்சாரியார் தமது இளம்பிராயத்தைக் கழித்தனர்.

கல்வியிற் பெரியாராய கம்பர் இராமாவதாரமரங்கேற்றியது மிங்கேயேயாகும்.

6-வது செய்யுள். பிரமனது பாதத்திலுதித்ததாகப் புராணங்கள் கூறும் சூத்திர வருணத்தோருள், சூத்திரர் சற்சூத்திரர், அசற்சூத்திரர் என இரு திறப்படுவரெனவும், அவருள் சற்சூத்திரர் சிவபெருமானிடத்துப் பக்தியும், அடியார்களிட

த்த அன்பு, தயை முதலியன உடையவர்களாய், நற்குணங்கள் வாய்ந்தவராவரென்பதை சைவாகமங்கள் கூறும்.

7, 8-வது செய்யுள்கள். சோழியரையும், காவிரியையும் புகழ்வது.

9-வது செய்யுள். காவிரியின் விசேடத்தைக் கூறுவது :— காவிரியின்பாற் சென்று கங்கை தனது கன்மங்தொலையப் பெற்றுளென்று காவிரி மகாத்மியம் கூறும், திருஐயாற்று க்ஷேத்திரத்தில் ஒருவன் தனது பிதாவினது என்பைப்போட அவை புஷ்பங்களாயினவென்றும், தென்திருமுல்லைவாயிலில் ஒருவன் தனது பிதாவினது என்பை காவிரியிலிட அவை அரதனங்களாயினவென்றும் அக்தந்தத் தலபுராணங்கள் கூறும்.

10-வது செய்யுள். சோழமண்டலத்தெல்லை கூறுவது:— கம்பர்காலத்துச் சோழநாடு இருந்த பரப்பைக் கூறுகிறது. கிழக்கில் வங்களாக்குடாக்கடலும், தெற்கில் வெள்ளாறும், மேற்கில் கருவூரையடுத்த கோட்டைக்கரையும், வடபால் மஞ்சக்குப்பம் ஜில்லாவிற் செல்லும் வெள்ளாறும் எல்லைப்புறமாகவிருந்தன. சோழநாடு எப்போதும் இதுவே எல்லையாகவுடையதன்றென்பதை பதிப்புரையிற் கூறப்பட்டிருக்கிறது.

11-வது செய்யுள். இச்செய்யுளில் பாடல் பெற்ற சிவதலங்கள் இத்துணையாகுமென்று குறிக்கப்படுகிறது.

12-வது செய்யுள். தில்லைவாழ்முனிவராவோர் ஸ்ரீநடராஜப்பெருமானுக்குத் தொண்டுபுரியும் அந்தணர்களாவர். ஓர் காலத்து பிரமாவானவர் கங்காதீரத்திலுள்ள அந்தர்வேதியிலே ஒரு யாகம் செய்யத் தொடங்கி அதற்குச் சிதம்பரத்தையடைந்து வியாக்கிரபாத முனிவரது உத்தரவு பெற்று, அந்தணர்களையழைத்துச் சென்றவர்களை, இரணியவன்மவரசர் முனிவரது உத்திரவுப்படி வேதியர்களை அழைத்துவந்து பார்க்கையில் ஒருவர் குறைய, அரசன் மனந்திகைத்து நிற்ப, அடியார்க்கெளியனை சிவபெருமான் இவ்வந்தணர்களெல்லோரும் எமக்கொப்

பாவர். ஆகையான் எம்மையும் ஒருவராக எண்ணுக என்ற அசரீரி கேட்டு மன்னன் ஆனந்தமடைந்தனனெனப் புராணங் கூறும்.

புகலிப்பெருமான் சரிதம் 35-வது செய்யுளின் கீழ்க்காண்க.

**சண்டேசர்** :—கந்தமாதனத்துற்ற முருகப்பிரான் சூரபன்மனைச் சங்கரிக்கவெண்ணிச் செல்லுங்காற்றங்கிய தலமான திருச்சேய்ஞலூரின்கண்ணே அந்தணர் குலத்திலுதித்த எச்சதத்தன் இளையனாய, விசாரசர்மரென்பார் அவ்வூர் ஆமேய்ப்பானொருவன் பசுக்களை ஒறுப்பது கண்டு பொறாதவராய், அத்தொழிலைத் தாமே பூண்டு போற்றிவருங்காலத்து, பசுக்கள் கொழுத்து வளர்வனவாயின. இங்ஙனமிருக்குழி, நாயனாருக்கு பக்குவ காலஞ் சமீபித்தலும், அவர் சிவபூசை செய்வானெண்ணி மண்ணியாற்றிலே மணலைக்கூட்டி, அதனையே இலிங்கமாகத் தாபித்து, மஞ்சனமாட்டி பூசை செய்வாராயினார். அக்காலத்து பாலாக்களிடம் சென்று, ஒரு கால்வீதம் பாலேந்த அவை பாலைப்பொழிய அவற்றினைக் குடத்திற் கொண்டும், மற்றும் மலர்கள் முதலிய கொண்டும் தினந்தோறும் பூசையியற்றிவந்தார். இதனையறிந்த அவ்வூர் அந்தணர்கள் எச்சதத்தரைக் கோபித்து, அவரை அவ்வூர்ச் சபையாரிடம் அழைத்துவரலும், அவையினர் எச்சதத்தரைக் கடிந்துகொண்டார்கள். எச்சதத்தர் மறுதினம் பதிற்சொல்லுவதாகச் சென்று, மறுநாள் ஒரு மரத்தின் மறைவிலிருந்து நடப்பதைக் கண்டவர், மனந்தாளாதவராய் மைந்தனிடஞ் சென்று, பாற்குடத்தை யெத்த, அதுகண்ட விசாரசர்மர் சிவாபராதம் செய்பவர் தமது பிதாவென்றும் துணிந்திலராய், அருகிருந்த மழுவினாலெறிய காலிழந்தார் எச்சதத்தர். இவரது பக்தி வைராக்கியத்துக்கு மெச்சிய சிவபெருமான் ரிஷபாரூடராய்க் காட்சிதந்து, சண்டேசன் எனும் பதமுந்தந்து எச்சதத்தருக்கும் முக்தி கொடுத்தருளினார்.

**பூசலார்நாயனார்** :—தொண்டைநாட்டிலே நின்றவூர் என்னுமூரிலே நிதியற்ற ஒரு ஏழைப்பிராமணர் சிவனடியார்க்கே தொண்டுபுரியுந்திறத்தின் மிக்காராய் வாழ்ந்துவந்தனர். நடா

ஐப்பெருமானுக்கு ஆலயமெடுக்கவெண்ணி, ஓர் நல்ல சுபமுகூர்த்தத்தில் தன் மனமே தானமாகக்கொண்டு, ஆலயத்திருப்பணி தொடங்கி, தினங் கொஞ்சமாக நிறைவேற்றி மூர்த்திஸ்தாபனத்திற்கு நாளுமிட்டார். அதே காலத்தைக் காடவர்கோமான் கச்சிக்கற்றளிப்பிரானை ஸ்தாபிக்கவெண்ணியதையறிந்த ஏழை பங்கன், அரசனது கனவிற்றோன்றி நாளை பூசலனது கோயிற்புகுவோம், வேறு ஓரை பார்க்கவெனப் பணித்தனர். காடவர்கோமான் இவ்வளவு புண்ணியம் வாய்ந்த அடியவரை வணங்கவெண்ணி அவ்வூர் சேரலும், ஆலயத்தைக் காணாது, அவ்வூரந்தணர்களை அழைத்து பூசலாரைக் கொணர்ந்து கேட்கையில் விருத்தாந்தமறிந்தனனென்ப.

நீலநக்கநாயனார்:—மருகநாட்டைச்சார்ந்த சாத்தமங்கையிலுள்ள நீலநக்கனென்னு மறையோர் வேதவிதிதவறாது பூசனையியற்றுங் கருமம் பூண்டவர், திருவாதிரையன்று பூசை முடித்துக்கொண்டு, பக்கத்திலுள்ள அயவந்தி க்ஷேத்திரத்துள்ள நாதனை அர்ச்சனைபுரிவான் சென்று, அர்ச்சிக்கையில் சிவபிரானது மேனியில் ஒரு சிலந்தி விழுந்ததாக அதனைக்கண்ட நாயனாரது மனைவியார் ஆற்றாதவராய், சிலந்தியை ஊதியப்புறம் போகவிடுத்தார். அது தகாத செய்கையென நினைந்த நக்கர் மனைவியைத் துறப்பானெண்ணி, நீ அடாதகாரியஞ்செய்தனை, அதனாலுன்னைத் துறந்தோமென்று விடையவன் பூசனையியற்றியில்லிற்சேகலும், மனைவியார் இல்லஞ்செல்ல நினையாராய் அயவந்தி நாதனைச் சிந்தித்துத் தனியிற் றங்கினார். இல்லஞ்சென்ற நீலநக்கர் பள்ளியணைந்து அறிதுயில் கொள்ளுங்கால் அயவந்திநாதர் கனவிற்றோன்றி உனது மனைவி ஊதித்துமிந்த இடம்போக மற்றொருபக்கம் சொப்புளத்தைப் பாரென்று காட்ட விழித்த நாயனார் பிழைத்தேமென மனைவியின் பக்திக்கு மெச்சி அவர் ஆலயத்துச்சென்றழைத்துவந்தார். அயவந்தி * க்ஷேத்திரமும், சாத்தமங்கையும் நன்னிலம் தாலுக்கா, திருமருகலுக்குக் கீழ்புறம் 1-மயில் தூரத்தில் சீயாத்தமங்கையென்ற பெயரோடும், முடிகொண்டான் ஆற்றுக்கு வடபால் கோயிலும் இருக்கிறது.

சோமன் :—இச்செய்யுளில் இதுவரை 63-நாயன்மாரது சரித்திரங்களை கூறப்பட்டிருத்தலின் இவரை சோமாசிமாறன் என்றே கொள்ளவேண்டியிருக்கிறது. அன்றித் தம்மைப்பரிந்துரைத்த பாவலர்க்குச்சுட்டியிந்த சோடனைப்பற்றி கூறவொணாது. இந்நாயனார் தியாகப்பெருமான் மேரில்வந்து தாம்செய்யும் சோமயாகத்து • அவிர்ப்பாகம் பெறவேண்டுமென்று மெண்ணமுடையராய் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் தூதுளம்பூ, கீரைமுதலியன கொடுத்து, அதன்மூலமாக தியாகப்பெருமானை அவியேற்கவரும் பெரும் புண்ணியம் படைத்தனர். இவர் யாகம் செய்த இடம் பூந்தோட்டம் ஸ்டேஷனுக்குக் கிழக்கு 2-மைலிலுள்ள அம்பர் என்னுமூர். நாயன்மார்களது சரித்திரவிரிவை பெரியபுராணத்துக்காண்க.

கபிலர் :—பகவனுக்கும், ஆதிக்கும் பிறந்த மக்களுள் இவரும் ஒருவர். திருவள்ளுவர், இடைக்காடர், ஔவை முதலியோர் சகோதர சகோதரர்கள். இவர் திருவாரூரிலிருந்த அந்தணரால் வளர்க்கப்பட்டு உபநயனகாலத்தில் வேதியர்கள் தடுக்கக்கண்ட போது சொன்னதாகக்கூறிய அகவலொன்றுண்டு. இதனை வீரமாமுனிவர் என்னும் பெஸ்கிபாதிரியார் கூறியதாகச் சொல்வாருமுண்டு.

**13-வது செய்யுள்** :—கரிகாற்பெருவளத்தான் வடயாத்திரை சென்று திரும்பியகாலத்து அவணிருந்த இந்த ஐந்து படாதிபதிகளையும் இங்கு கொணர்ந்து தாபித்தனன் என்பர்.

**14–வது செய்யுள்**:—இதனில் சோழியர்கள், சிவபெருமானுக்குக் கொடுத்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இது நாயன்மார்களது சரித்திரத்தால் விளங்கும்.

**15-வது செய்யுள். மானக்கஞ்சாறர்**:—சோழவளநாட்டில், கஞ்சனூர் என்னும் ஊரில் மானக்கஞ்சாறரென ஒருவர் இருந்தார். மிகுந்த சிவபக்தர். அவருக்கு மகப்பேறு இல்லாமையால் திருச்சிற்றம்பலமுடையானைத் தியானிக்க, அவனதுகருணையால் பெண்மகவொன்று உண்டாயிற்று. அதனைப்பொழுதொருமேனியும்வளா

ருவண்ணமுமாக வளர்த்துவருகையில், பேதைப்பருவ நீங்கி மணவினைசெய்ய நாட்கிட்ட அப்பெண்ணினை ஏயர்கோன் கலிக்காமனுக்கு மணம் பேசினர். அதற்கிசைந்த மானக்கஞ்சாறர் நன்முகூர்த்தம் பார்த்து ஊரையலங்கரித்து மணவினைக்கு வேண்டியனவெலாம் சேகரித்து முகூர்த்தத்திற்குத் தயாராகவிருக்க, மணவினைக்கு முதனாள் சிவபெருமான் சைவசமயங்களுள் ஒன்றான மகாவிரதராய் எழுந்தருளித் தன்னைப்பணிந்த மானக்கஞ்சாறர் புதல்வியினது கார்மென் கூந்தலைக்கண்டு, அது தமக்குப் பஞ்சவடி என்ற பூணுநூற்கு ஆகுமெனக்குறிப்பித்தலும், நாயனார் தமது உடைவாளையுருவி அவளது கேசத்தை அறுத்து கொடுக்கப்போதும் தருவாயில், சிவபெருமான் மறைந்து விஷபாரூடராயத் தரிசனம் தந்தார். இதனையறிந்த கலிக்காமர் வதுவை செய்யவந்த காலத்து ஈசனது அருளால் மயிர்வளரப்பெற்ற மெல்லோதியை மணந்து வாழ்ந்தார்.

16-வது செய்யுள். இளையான்குடிமாறநாயனார் :— திருநள்ளாற்றுக்குச் சமீபமாயுள்ள இளையான்குடியென்னும் திருப்பதியில் அவதரித்த மாறனென்பவர் சிவபெருமானிடத்தும் சிவனடியாரிடத்திலும் பக்தி மிகவுடையராய், தமது கையிலுள்ள பொருள்களையெல்லாம் சிவதொண்டிலேயே செலவழித்துவந்தார். ஓர்நாளிரவு சிவபெருமான் மழைபொழியச்செய்து, இவரது இல்லம் புக, நாயனார் அவரை வரவேற்று உபசரித்து, இளைக்கச்செய்து தன்மனையாளிடஞ்சென்று அடியார்க்கமுது படைத்தற்கொரு சாதனமுங்கண்டிலராய் ஏங்க, மனையாட்டி அன்று விதைத்த நென்முளையை ஞாபகப்படுத்திடப்போது இறைகூடைகொண்டு பள்ளிநிலத்திற்காலினால் வழிதடவிச் சென்று நென்முளை வாரிக்கொணர்ந்து மனைவி கையிற்கொடுத்தார். அம்மையார் அதனைவாங்கி சேறுநீக்கி வறுத்து அரிசியாக்கிச் சமைத்து பெரியோருக்குப் படைக்கவெண்ணி, அடிகளை யெழுப்ப, அவ்வளவில் ஒரு சோதியுண்டாயிற்று. இருவரும் அதிசயித்து நிற்ப எம்பெருமான் மழவிடையிற் றோன்றிக் காக்ஷிதந்தனர் இன்னும் இளையான்குடியில் முளைவாரிக்குட்டையென்று ஒன்றிருக்கிறது.

தொண்டைமண்டல சதகமுடையார் இஃது தொண்டை நாட்டிலுள்ளதாகக்கூறுவர். பெரியபுராணமுடையார் சோழநாடு சொல்லாதொழிந்தனர்.

17-வது செய்யுள் தாயநாயனார்:—திருத்துறைப்பூண்டிக்கு வடபாலுள்ள கணமங்கலம் என்னுமூரில் தாயநயனார் என்பார் தமக்கு விளையும் செந்நெலில் நல்லவற்றையமுதாக்கி குழந்தைக்கீரையும் மாவடுவும் சேர்த்து நிவேதனஞ் செய்யும் தொழிற்பூண்டு ஒழுகிவருநாளில் அவரது நிலமெல்லாம், யானையுண்ட விளங்கனிபோன்றுபோக கூலிக்குநெல்லறுத்து வந்ததனை ஈசுரனுக்கு அற்பணம் செய்து, தாம் பனைமியால் அடகுகொய்து சமைத்து இடப்பட அதனையுண்டுவந்தார். கொஞ்சநாளில் அதுவும் அற்றுபோக, நீர்வார்த்த அதனையருந்தி சிவகைங்கரியம்மாறாது ஒழுகிவருநாளில் ஒருநாள்சிவபெருமானுக்கு அற்பணம் செய்தற்பொருட்டு அமுது, கீரை மாவடு கொண்டுபோகும் போது, காலிடறி அவ்விடமிருந்து வெடிப்பிலுள் எல்லாம் சிதறிவிட்ட நாயனார், இனிச் சென்றென்ன பயனென்வெண்ணி அரிவாளைத் தன் ஊட்டியிற் பூட்டி அறுக்குந்தருவாயில், அக்கமரினின்று மாவடு கடிக்கும் அனுகரண ஓசையான விடேல் விடேல் என்ற சப்தமெழுந்தது. என்னென்று கவனிக்க சிவபெருமான் தோன்றி தரிசனந் தந்தார். இதனை இன்றும் ஞாபகப்படுத்த ஊட்டி என்றும் தண்டலை என்றும் இரு ஊர்கள அதற்குச் சமீபத்திலிருப்பதோடு இத்தண்டலையைப்பற்றித்தான் பழமொழி விளக்கமென்னும் தண்டலையார் சதகம் பாடப்பட்டிருக்கிறது. கணமங்கலமென்பது திருக்கண்ணமங்குடி என்று இப்பொழுது வழங்கப்படுவதோடு தாயநாயனருக்குக் கட்டப்பட்டிருந்த கோயிலும் இடிந்துபோய்விட்டது.

18-வது செய்யுள் ஏயர்கோன்கலிக்காமநாயனார்:—முன்னர் நாலாவதுசெய்யுளில் சிவபெருமான் சுந்தரர்பொருட்டுத்தூது நடந்த வரலாறு அறிவிக்கப்பட்டது. வைத்தீசுவரன்கோயிலென்னும் புள்ளிருக்கு வேளூர்க்கு 2-மைல் மேற்கிலுள்ள பெருமங்கலமென்னு மூர்க்கு உடையாராய், சோழனது சேனாபதித்துவமுடையவரான கலிக்காமர் என்பார் சிவபெருமான்பால் அன்பி

னராய் அடுத்த திருப்புன்கூர்ப்பிரானுக்கு வேண்டிய திருப்பணி செய்துவந்தார். இப்பால், தியாகப்பெருமான், சுந்தரர்பொருட்டுத் தூது சென்றதைக் கேட்ட நாட்டொடங்கி அவர்பால் வெறுப்புடையராய் ஈசனிடத்து அன்புமிகுந்து வருநாளில், சுந்தரரிடத்து அன்பு உண்டாக்கவெண்ணி, கலிக்காமனாருக்கு சூலையையேவினார். அவர் சூலையால் வருந்துநாளில், ஈசன்கனவிற்றோன்றி சுந்தரனாற் றீர்க்கப்பட்டாலன்றி இது வேறொருவரால் தீர்க்கப்படாதென்று தெரிவித்ததோடு, சுந்தரனுக்கும் கட்டளையிட சுந்தரர் வருவதனையறிந்த கலிக்காமர் உடைவாள்கொண்டு தனது வயிற்றைக் கிழித்தார். மானக்கஞ்சாறர் மகளும், கலிக்காமர் மனைவியுமான மங்கை நாயனாரது வருகை கேட்டு அழாதொழிந்து, நாயனாரை ஏற்று உபசரிக்க நாயனார் நடந்தவற்றையறிந்து ஏயர்கோனை உயிர்ப்பித்து, இருவரும் பெரு நட்பினராக வெகு காலங்கழித்துவந்தார்கள்.

**19-வது செய்யுள். கோட்புலிநாயனார் :—**வளவனது சேனாபதியாய்ப் பேர்படைத்துவந்த வேளாண்குலத் தலைவரான கோட்புலியார் என்பார் திருநாட்டியத்தான்குடியிலிருந்தார். அவர் தம்முடைய நெல்லையெல்லாம் சிவபிரானுக்கு இன்னமுதமாக்கி வருமியல்பினராயொழுகுநாளில், வளவன் பகைவரையொறுக்க ஏவுதலும், அவர் செல்லுமுன் தம் நெல்லையெல்லாம் சிவபெருமானுக்கு அமுதுபடிக்கு ஆகவென நெற்போரிட்டு தம் உறவினரைக் கூஉய் அந்நெல்லை ஒருவருந் தொடப்பெறுதெனச்சொல்லி பகைவர்புலம்போயினர். அவர் சென்றபின் பஞ்சமேற்படவே, உறவின்முறையார் திருவமுதுபடியை இக்காலத்துக்கு எடுத்துக்கொண்டு பின்னர் கொடுத்துவிடுவோமென்றெண்ணி நெற்கூடு குலைத்து எடுத்துண்டார்கள். வெற்றியுடன் திரும்பிய கோட்புலியார், இதனையறிந்து தம் தமர்கட்கு பரிசிலீவதாக எல்லோரையும் ஒருங்கே கூட்டி அவர்கள் எல்லோரையும் வாளுக்கிரையாக்கினார். இவரது கைவாளாற்றடிந்தமையால் எல்லோரும் விண்ணுலகடைந்ததோடு கோட்புலியாரும் சிவபதமடைந்தார்.

**20-வது செய்யுள் :—**கோட்புலிநாயனார் திருநாட்டியத்தான்குடியிலிருந்தகாலத்து சுந்தரப்பெருமான் குண்டையூர்க்கிழாரிடம்

நெற்பெற்றுப் பிறகு தலயாத்திரை செய்வானெண்ணித் திருநாட்டியத்தான்குடி யடைந்தபோது கோட்புலியார் வரவேற்று உபசரித்துத் தாம் அருமையாய்வளர்த்துவந்த சிங்கடியார் வனப்பகையார் என்னுமிருவரையு மவர்க்களிப்ப, சுவாமிகள் இருவரையு மடிமீதிருத்திப் புத்திரிகளாகப்பாவித்து, தம்மை அவ்வூர்ப்பதிகத்தில் சிங்கடியப்பனெனச் சிறப்பித்தார்.

**21-வது செய்யுள் முனையடுவார் :**—மாயூரத்துக்கு வடபாலுள்ள நீடூர் என்ற திருப்பதியில் அவதரித்த முனையடுவார் என்பார் தம்மையடைந்து ஒத்தாசைக்கு அழைப்பவரோடு சென்று பகைவரை வென்று அதனாலுண்டான பொருள் முழுதும் ஈசனுக்கும், ஈசனடியாருக்குமே செலவழித்துப் பரகதியடைந்தார்.

**22-வது செய்யுள் செருத்துணையார் :**—சோழமண்டலத்திலுள்ள மருகநாட்டுத் தஞ்சாவூரில் வாழ்ந்த வேளாண்குலசிலாமணியான செருத்துணையார் என்பார் சிவபத்தி மிகுதியினால் தஞ்சையைவிட்டு ஆழித்தேர் வித்தக னுறைவிடமான திருவாரூரையடைந்து திருப்பள்ளித்தாமப்பணி இயற்றிவருவாராயினார். அந்நாளிலொருநாள், பல்லவர்கோன் சிங்கப்பெருமானது மனைவியார் திருப்பள்ளித்தாம மண்டபத்துக்குக் கீழ்க்கிடந்ததொரு மலரை யெடுத்து முகருவதைக்கண்ட செருத்துணையார் அவளைப்பிடித்தீர்த்து, சிவபெருமான் திருமேனிக்கேறும் நறுமலரை முகர்ந்த மூக்கினைக்கத்திகொண்டு அரிந்தபத்திவைராக்கிய மேலீடு காரணமாய்ச் சிவபதவி அடைந்தார்.

**23-வது செய்யுள் சத்தியார்:**—காவிரிநாட்டிலே வரிஞ்சையூர் என்னுமூரில் வேளாளர் மரபில் சத்தியாரென்பாரொருவரிருந்தார். அவர் சிவபெருமானை இழிவாகக்கூறுவார் நாவைப்பிடித்திழுத்து அறுக்கு மியல்பினர், இவ்வாறு வீரத்தொண்டு செய்து நடராஜப்பெருமானது திருவடி நீழலையடைந்தார்.

**24-வது செய்யுள். ஞானப்பிரகாசர்:**—சப்தவிடங்க க்ஷேத்திரங்களுள் ஒன்றாகிய திருவாரூரின்கண்ணே பரம்பரைச் சைவஆசாரியார் மரபில் சற்றேறக்குறைய 450-வருடங்கட்முன்னே சிதம்

பரமதேசிகருக்குப்புத்திரராயவதரித்தார். இச்சைவ ஆசாரியர்க ளெல்லாம் கைலாச பரம்பரையென்று சொல்வதுண்டு.

சிவனந்திசனற்குமரன் சிற்சத்தியஞான தரிசிபரஞ்சோதி
[மெய்கண்டான்
நவமறையானஞான குருவுமாபதிமச்சுறைவானற் சிற்றம்பல
[நாடி பழுதைகட்டிசம்பந்தன்
சிவபுரந்தத்துவப்பிரகாசன் திருவாரூரிற்செட்டித்தெரு ஞா
[னப்பிரகாசன்பின்பல்லூர்ப்
பவமொழிக்குஞ்சிதம்பரநாதன்ஞானப் பிரகாசன்பயில்தரு
[மை திருஞானசம்பந்தன்.

என்று பரம்பரை கூறுவர். இவர் ஆகமசாத்திரவுணர்ச்சி வல்லுநராயிருந்ததோடு நிஷ்டானுபூதிமானாயும் இருந்தமையான் சீடர்கள் பலர் கூடினர். அவருள் ஒருவராகிய மதுரையம்பதியினர், ஞானசம்பந்தரென்பார் ஞானாசிரியரைத் தேடிவருங்காலத்துத் திருவாரூரையடைந்து ஞானப்பிரகாசரை வழிபட, இவரது பக்குவத்தையறிந்த ஞானப்பிரகாசர் தொண்டனாகத் தமது காரியத்திலமர்த்தியிருந்தார். இச்சீடரும் தொண்டு செய்தபடி இருக்க, அன்று சாயரக்ஷையில் வழக்கப்படித் தியாகேசனைத் தரிசித்து வெண்பாவொன்று சொல்லும் நியமனப்படி சென்று சுவாமி தரிசனம் செய்துகொண்டு,

கருங்கடனஞ் சுண்டபிரான் தென்கமலைசூழுங்
கருங்கடலே செய்தற் கழியே—நெருங்குமுதற்
புன்னைகளே கரையேயனவரத முண்டக்கா
லென்றுகமே கரையேநான்.

என்றதுபோன்ற வெண்பாக்களைச் செய்து போற்றி இல்லிற்கு மீண்டனர். இல்லிற்புகுமுன் எல்லோரையும் நிற்கவெனப் பணித்து உட்புகுந்து அருந்துயில்கொண்டனர். எல்லோரும் சென்றுவிட புதிய சீடர் மாத்திரம் ஆசிரியர் ஆணையை மறுத்திலராய் அங்கேயே நிற்க, இரவிற் பெய்த மழை அவரைவிட்டு மற்றவிடங்களிற் பெய்து சென்றதாயும், காலையிற்கண்ட ஞானா

சிரியர் அப்பொழுதே உபதேசித்தனரென்றும், அக்காலமே ஞானப்பிரகாசமாலையென ஒருநூல் பாடித்துதித்தனரென்றும் சொல்லப்படும். இவர்களது சந்ததியார் அனேகர் வடமொழி வித்துவான்களாய் இருந்ததோடு தென்மொழியிலும் வல்லவர்களாவர். பின்னேரொருவரே திருவாலைக்காப்புராணம், திருமழுவாடிப்புராணம் முதலியன இயற்றினரென்று பாயிரச் செய்யுட்களிற் கூறப்பட்ட சக வருஷங்களாலும், வேறு ஆதாரங்களாலும் அறியப்படுகிறது. ஞானப்பிரகாசருக்கு அவரது சந்ததியாரால் ஆண்டாண்டுதோறும் ஐப்பசி மாத கிருஷ்ணபக்ஷ சஷ்டியில் குருபூஜா மகோத்சவம் நடத்தப்படுகிறது. இவர்களுக்கு ஞானப்பிரகாச கோத்திரத்தார்களென்றும், சத்தியஞானிகளென்றும் சொல்வதுண்டு.

25-வது செய்யுள். கண்ணுடையவள்ளல் :—திருஞானசம்பந்தப்பெருமானது திருவருள் பெற்றுக் காழியிலிருந்த பெரிய அநுபூதி ஈறாய் ஞானாசாரிய நிலைக்கட்டமைதருண் ஞானநோக்கானிசைந்த கண்ணுடைமை பெற்றுக் கண்ணுடையவள்ளலென்னும் பெயர் உண்டாயிற்று. ஒழிவிலொடுக்கம் என்னும் நூலியற்றியவர்.

26-வது செய்யுள். அம்பலவாணதேசிகர் :—திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்தில் 13-வது பட்டத்திலெழுந்தருளியிருந்த அம்பலவாணதேசிகமூர்த்திகளென்றே கொள்ளவேண்டியிருக்கிறது. பாட்டு, மேற்கோள்களிலிருந்து இந்நூலாசிரியர்காலத்து மேற்கோளிற் கூறப்பட்ட இராமலிங்க சுவாமிகளிருந்து நமதாசிரியரைப் பெரிதும் போற்றினரென்று ஊகிக்கவேண்டியிருக்கின்றது. 3-வது பட்டத்தெழுந்தருளியிருந்த அம்பலவாணமூர்த்தியைத் தவிர்த்து 13-வதுவரை இப்பெயருடையாரின்மையால் இதுவே பொருந்தும். இவ்வாதீனத்தைப்பற்றித் தமிழுலகம் நன்கறிந்ததேயாகையான், யான் சொல்வது மிகையாகுமென வஞ்சிவிடுத்தேன்.

27-வது செய்யுள் பல்வகைச் சிறப்புக்களுடையது சோழ நாடு எனப் பொதுப்படக் கூறுவது.

28-வது செய்யுள் சோழவளநாடு ஆகையால் காவிரி பாய்ச்சலால் தென்மிகுதி விளைவுள்ளது எக்காலத்தும் உண்மை செய்தியாம். முத்துக் குளித்தல் பாண்டி நன்னாட்டிற்கே யுரியது. தொண்டைநாடு தக்க சான்றோருடையதாமென்ப.

29-வது செய்யுள். கரிகாலன்.—கரிகாலன் என்பார் நால்வருளர் அவருள் கரிகாலன் என முதன்முதல் பேர்பெற்ற கரிகாற் பெருவளத்தானையே இங்கே கூறுவது. அவன் இற்றைக்குச் சுமார் 1920 வருடங்கட்குமுன் அரசாண்ட சோழமன்னனென்பது 'தொக்க கலியுகத்து மூவாயிரத்துத் தொண்ணூற்றில், மிக்க கரிகால் வேந்தனுந்தான், பக்கமலைக்கும் புகழ்ப் பொன்னியாறு கரை கட்டினான்' என்னும் வெண்பா நன்கு புலப்படுத்தும். அதாவது கி. மு. முதல் நூற்றாண்டின் மத்தியிலரசாண்டவன். இவனது பிதா உருவப்பஃறேறர் இளஞ்சேட் சென்னி கரிகாலன் காவிரிப்பூம் பட்டினத்தை இராஜதானியாகக்கொண்டு இந்நிலப் பரப்பு முழுவதையும் தனது ஒரு குடை நிழலில் ஏக சக்கிராதிபதியாக ஆண்டனனென்பது, சோணை ஆற்றங்கரையிலுள்ள வச்சிரநாட்டை அடைந்து, அவனிடம் திறையாக முத்துப்பந்தரும், மகத நாட்டரசனது பட்டி மண்டபத்தையும், அவந்தி நாட்டான் வாயிற் றோரணம் கொடுக்கவும் பெற்று வந்தனனென சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதை 99-10↓ அடிகளாலறியப்படும். சேரர் கோன் ஆதனை வெண்ணில் என்னும் ஊரில் புறமிட்டோட அடித்தனன். அன்றி தொண்டைமண்டலத்தைக் காடு கெடுத்து நாடாக்கி, சோழியர் பலரைக் குடியேற்றினனெனவும் இன்றும் அவர்கள் இச்சோழ நாட்டினர் எனச்சொல்லிக் கொள்ளுகின்றனரெனவும் 64 சோழகுடிக்குத் தலைவனெனவும் அறியப்படுகின்றது இவன் கல்வியிற் சிறந்தவன் என்பது பட்டினப்பாலை கொண்டு அதன்பொருட்டு 16 கோடி செம்பொன் கொடுத்தானென சதகம் 44 வது செய்யுளாலும் கலிங்கத்துப்பரணி இராசபாரம்பரியம் 21-வது செய்யுளாலும் அறியப்படுகின்றன. இவன் தனது இராச்

சியத்தை வெகு செழிப்பாக வைத்திருந்தானென்பது காவிரிக்கு இட்டகரையாலும் நீர்தேங்கிப் பாய்வதற்கு கல்லணை கட்டினானென்று சதகம் 38-வது செய்யுளாலும் அறியப்படுகின்றது. இவனுக்கு சேட்சென்னி, நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என மூன்று ஆண்மக்களும், ஆதிமந்தியாரென்ற பெண்ணுமுண்டு. இவனது சரித்திரவிரிவையெல்லாம், தஞ்சை கலியாணசுந்தரம் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் உலகநாதபிள்ளையவர்கள் எழுதிய கரிகாலன் சரித்திரத்திற் காண்க.

30-வது செய்யுள். ஆலஞ்சேரி மைந்தன்:—இறையனார் அகப்பொருளில் அவ்வகப்பொருளுரை ஆரம்பத்தில் அக்காலத்துப்பாண்டியநாடு பன்னிருயாண்டு வற்கடஞ்சென்றது (இறையனாரகப்பொருள்—பக்கம் 5) என்று தொடங்கி, அதனுள் இருந்த புலவர்கள் வேற்றுநாடு சென்றனர் என்று கேட்கப்படுகிறது. அதுபோல 'பன்னீராண்டு பாண்டி நன்னாடு மன்னுயிர் மடிய மழைவளமிழந்தது' என்று மணிமேகலை 14-வது காதை 55, 56 அடிகளிற் காணப்படுகிறது. அவ்விதம் பஞ்சம் தோன்றியகாலத்து, புலவர் பலரும் வேற்றிடம் புக்கனராக. ஒரு கூட்டத்தினர் சோழநாடு புக்கு, இப்பொழுது ஆலங்குடிச்சேரி என்று வழங்கும் ஆலஞ்சேரி மைந்தனிடம் சேர்ந்து அவனால் காக்கப்பட்டனரெனமேற்கோளால் அறியப்படுகிறது. இவ்வாறன்றி அயிர்ந்தானென்பாருமுளரோவெனின்வேள் முதலிய பேர் கேட்கப்படுவதல்லாது, அயிர்ந்தன் என்று கேட்கப்படுவதில்லையென்பதோடு ஆலஞ்சேரி மைந்தன் என்றே பிரதிகளிற் காணப்படுவதாலும், பொருத்தமுடைமையும் நோக்குக வென்றுரைக்க. இவன் வேளிரிலொருவன். வேளாளர் உழுதுண்போர், உழுவித்துண்போர் என்று இருவகையினர். இவருள் உழுவித்துண்போர் மண்டல மாக்களுந் தண்டத்தலைவருமாய்ச் சோழநாட்டுப் பிடவூரும் அழுந்தூரும், நாங்கூரும், நாவூரும் ஆலஞ்சேரியும் பெருஞ்சிக்கலும், வல்லமும், கிழாருமுதலிய பதியிற்றோன்றி வேளெனவும் அரசெனவும் பட்டமெய்தியாண்டுவந்தனரென்பதான் இவர் உழுவித்துண்போர். சோழனுக்கு உறவினன். அந்நாளில் பாண்டி

நகாட்டுப் பண்டிதசிரோமணிகள் பலரைக் காப்பாற்றினனென்பதைத் தவிர்த்து வேறொன்றும் அறியதற்கில்லை.

31-வது செய்யுள். கருப்புடையான்.--சோழன் ஒருவனுக்கு அவனது தாகத்தைத் தணிப்பதற்குக் கருப்பஞ்சாறு கொடுத்த தன் காரணமாக இனிய கருப்புடையானென்று கூறப்பட்டனன். அதுகாரணமாக கருப்புடையான் கோத்திரத்தானென ஒருவகை வேளாளரைத் தவிர்த்து வேறொன்றும் அறிவதற்கில்லை.

32, 33 இச்செய்யுள்களைப்பற்றி முன்னரே கூறப்பட்டது. குண்டையூரென்பது எட்டுக்குடிக்கு வடமேற்கில் இரண்டு மைல் தூரத்திலுள்ளது. அவ்வூர்ப் புராதன ஆலயத்தில் குண்டையூர்க் கிழாரின் சிலையிருக்கிறது.

34-வது செய்யுள் சுரைக்குடையான்.—சுரைக்குடையான் கோத்திரத்திலுதித்த ஒருவன் கஞ்சனூரான், சுரைக்கொடியொன்று ஊன்றினன். அது காய்த்த காலத்து பறித்தும் ஒவ்வொரு காயையும் கஞ்சனூர் சிவனுக்கு அர்ப்பணம் செய்யும் உண்மை விரதம் பூண்டவன் சிவபத்தி மிக்குடையான். இம்மாதிரியாக நடந்து வருங்காலத்து, காய்மாறுங்காலத்தில், விரைக்காக ஓர் காயை அவ்வேளாளன் விட்டிருந்தனன். ஈசனே அடியவராக வந்து அன்னம்வேண்ட, இல்லக்கிழத்தியானவள் கணவன் நீராடச்சென்றவர் வரட்டுமெனச்சொல்லவும், சிவபெருமான், தனக்கு சுரைக்காயில் பிரியமாகவிருப்பதாகத் தெரிவித்தார். அம்மாது சிரோன்மணி, ஒரே காய்தான் விரைக்கு விடப்பட்டிருக்கிறதென்னை அங்ஙனமாயின், அதனிற் பாதி விரைக்கும், ஒரு பாதி அடியார்க்கும் ஆகட்டுமென்ற பெரியோர் வாக்கை கடக்கமாட்டாது அவ்வாறரிந்து பக்குவம் செய்தனள். நீராடச் சென்ற கணவன் திரும்பி மனையுட் புகுந்து, சுரைக்காய் அறுபட்டிருப்பதைக்கண்ணுற்று, வினவுதலும், மனையாட்டி நடந்தவிருத்தாந்தத்தைப் புகன்றனள். உடையவன் அதனிற் சாந்தமுறாது சுரையை யரிந்த கையை யறுப்பேனெனச் சூரிகொண்டு அறுத்தலும், ஒன்றுஞ் சொல்லாதவளாய் கற்பகவல்லியைத் தியானித்து

ளனுக. பரமேட்டி இவளது பத்திக்கு மகிழ்ந்து முத்திகொடுத்த னரென்ப. இச்சரிதம் கஞ்சனூர்ப்புராணத்திலிருப்பதாகக் கேட்டதோடு அத்தலத்தில் சுரைக்குடையாரும், அவரது பத்தினியும் சிலாரூபமாக விருப்பதோடு, சிவபெருமானுக்கும் அந்த க்ஷேத்திரத்தில் சுரைக்காய் நிவேதனஞ்செய்யப்பட்டு வருகிறது, அது நிஷித்த வஸ்துவாயினும், அத்தலத்திலுள்ளாருக்குத் தள்ளுபடியின்று.

**35-வது செய்யுள். அப்பர்:**-வேளாளர் குலத்திலே குறுக்கையர்குடியிற்பிறந்து மருணீக்கியார் என்னும் பெயரடைந்து, இளம் பிராயத்தே பெற்றோரை யிழந்து, தமக்கையாரால் வளர்க்கப் பட்டு சமண மதத்தைத் தழுவி, பாடலிபுரத்து பௌத்தப்பள்ளித் தலைவராய்த் தருமசேனரென்னும் பெயர்பெற்று ஒரு நாளையில் சிவானுக்கிரகத்தால் உய்யுநாள்வர, சூலைநோயுற்று வருந்தித்தமக்கையாரை நினைந்து திருவதிகையடைந்து, தமக்கையாரருளால் திருநீறணிந்து வீரட்டானேசுரரைப்பணிந்து அருள்பெற்று நாவுக்கரசாய் அதே பெயருமடைந்து தோத்தரித்து, சூலை நீங்கி சிவபெருமான் திருத்தொண்டில் பெருமையுற்று தலதரிசனஞ் செய்யச்செல்லுகையிற் சம்பந்தப்பெருமானைச்சந்தித்து, அவரோடும் வேதாரணியம் முதலிய ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவீழிமிழலையடைந்து, பஞ்சமேலிட சம்பந்தப்பெருமானும் அப்பர் சுவாமிகளும் தனி மடங்களிலிருந்து கொண்டு சிவபெருமானும் படிக்காசு கொடுக்கப்பெற்று சம்பந்த மூர்த்தி சுவாமிகள் காசுக்கு வட்டத்துடனும் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு வட்டமின்றியுமாற்றி அன்னதானஞ்செய்து பின்னர் தலயாத்திரை செய்து திருப்புகலூரை யடைந்து சிவபெருமானோடு சோதியிற் கலந்தார்.

**திருஞான சம்பந்த சுவாமிகள்.**— சீகாழிப்பதியிலே அந்தணர்குலத்திலே, கவுண்டின்னிய கோத்திரத்திலே, சிவபாத இருதயரென்பார்க்கு வெகுநாள் புத்திரப்பேறு இல்லாமலிருந்து சிவபெருமானருளால் ஒரு குழந்தை யுதித்தது. அதனை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வரும்

போது, சிவபாதர் ஒரு நாள் மஞ்சனமாடுதற்கு வெளிச்செல்ல, குழந்தையும் விடாது உடன் போந்தது. சிவபாதர் அதனைக்குளக் கரையில் வைத்து நீரின் மூழ்குதலும் பெற்றோரைக்காணாதபிள்ளை யழவும் தோணிப்பெருமான் உமையாளோடும்போந்து உமையவளது திருமுலைப்பாலுண்ணச்செய்து அன்றுமுதற் சிவபெருமான்றனது திருவடிக்கே விண்ணப்பம் செய்யும் பெருமையினையடைந்தது. தனது பிதாவார்றுக்கிவர சிவதலங்கடோறும் தலயாத்திரை செய்து சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு வருகையில், சிவபெருமானால் சிவிகையும், பட்டீச்சுரத்தில் முத்துப்பந்தரும் அளிக்கப்பெற்று ஊரூர்கடோறுமுள்ள சிவமூர்த்தங்களைத் தரிசித்துக்கொண்டுவரும்போது மைலாப்பூரில் குடத்திற்பெய்து வைத்திருந்த என்பை பெண்ணுருவாக்கியும், திருவோத்தூரில் ஆண்பனையைப் பெண் பனையாக்கியும் பல அற்புதங்களைச் செய்துகொண்டு வரும்போது, பஞ்சமேலிட திருவீழிமிழலையிற்றங்கி சிவபெருமானால் படிக்காசு அருளப்பெற்று மகேசுர பூசைசெய்து வற்கடநீங்க, தென்னாடு அடைந்து சமணரை வாதில் வென்று பாண்டியனைச்சைவ சமயத்துட்படுத்தி திருப்ப நல்லூர்ப்பெருமணம் என்னும் ஆச்சாபுரத்தலம் வந்து மணம் வேட்டு சோதியிற்கலந்தார்.

36-வது செய்யுள் சேந்தனார்.—சேந்தனார் திருவெண்காடரென்னும் பட்டிணத்தடிகட்கு முதற்கணக்கராக விருந்தாரென்பது பட்டிணத்தார் புராணத்து 'மந்திரத் தலைமைசான்ற மதிமுது சேந்தனாரும்' என்பதாற் புலனாம் திருவெண்காடர் புத்திரனாகப் பாவித்த மருதவாணர் அரும்பெரும் திருவிளையாடல்களை யியற்றிச் சின்னாட் கழித்து அடிகளை உய்யக்கொள்ளும் நோக்கத்தோடு கடைசியான கப்பல் யாத்திரையில் பொருளையெல்லாம் சிவநேசருக்கும், வறியோருக்குமீந்தும், அவர்கள்பால் கிடைத்த வரட்டிகளைச் சரக்காகக் கப்பலிலேற்றிக்கொண்டு புகாரான காவிரிப்பூம்பட்டினமடைந்தபொழுது திருவெண்காடருக்கு மருதவாணரது செய்கைகளைக் கூறியகாலத்து அடிகள் பண்டகசாலைக்குச்சென்று கண்கூடாக வரட்டிகளைக்கண்டு, அவற்றிலொன்றினை யெடுத்து

‘கரையொன்றிலை யென்றொரு கைவல்லவன் கரைத்தான், எரு வுள்ளெரியெனச் செம்மணிவெயில்விட்டெரியுமாணிக்கமொன்று’ தெரிக்கக்காண்டலும், அதன்விலை பெறுமென்றூர் வணிகமாக்கள் திருவெண்காடருக்கு அடிமைத்திறம் வாய்க்கவே இல்லம் வந்து முறியாளரைத்தேடலும், அவர்கொடுத்ததாகச் சொன்ன பெட்டியினை இல்லினுள்ளோர் கொடுத்தனராக. அதனைப்பிரித்துப் பார்த்தபோது காதற்ற ஊசியும் சரமுமிருக்கக்கண்டு,

காதினால் போதனங் காதிற் கல்வினால்
போதலைக்குறிப்பிற் புகன்ற பொற்புரா
மேதகு மூலமெலாய் விடுங்குறிப்புமாஞ்
சேதமிப்பாசநம் பாசச்சேதமாம்.

...றுதெளிந்து துறவறமடைய, ‘கூடாதெனப்பகர்ந்தனர். பட்டினப்பலரும் பண்பினன், மிகுபதிச்சேந்தனார் விளம்புவீ ரெனப் புகழ்ந்தனர் மவுனமாம் பொற்பின் வைகினர்’ திருவெண் காடர் மருதவாணரை இடைமருது சென்று தரிசித்துக்கொண்டு சிவதலங்கள் யாவுஞ் சென்று தரிசனஞ்செய்து திரும்ப இடைம ருது வந்து தரிசனஞ்செய்துகொண்டு விடையவரை விடைகொ ண்டு மீண்டு விரைந்து வெண்காட்டிடைப் புகுதலும், சேந்தனது மைந்தர், தமது பிதா அடிகளது திரவியங்களை அடிகளது ஆணைப் படி செலவு செய்ததற்காக அரசனால் சிறையிடப்பட்டானென்றதை வெய்யகச் சிறைமீட்டருள்கெனப்பணிந்தான். விரைந்து வெண் காடருமெழுந்து, அண்ணல் சந்நிதிசென்று மத்தளை தயிருண் டானும் என்ற பாடலைச்சொல்ல, பூதங்கள் சேந்தனாரை அடிகள் முன் விட்டன. திருவெண்காட்டிலுள்ள கணேசன் முன்பு இப் பாடலைக் கூறியதாகவும், விநாயகக்கடவுள் தனது துதிக்கையை நீட்டி சிறையிலிருந்த சேந்தனாரைத் தூக்கி அடிகள்முன் விட்ட தாகவும், திருவெண்காட்டில் பிள்ளையாரைச் சிறை நீக்கிய பிள் ளையாரென்றும் காட்டுவது கன்ன பரம்பரை.

சேந்தபிரான் தன்னுடற் சிறைநீக்கிய கருணைத்திறத்தினும் உயிர்ச்சிறை நீக்கியருளவேண்டுமென வேண்டலும், வனத்தி

னில் வருமகாடித்திட்டு, ஆய்ந்த அவ்விரகு விற்றும் பொருளால், அன்னம் தினமொருவருக்கு அளிப்பாயெனுமுபதேசம்பெற்று, அத்தலம் புரியுங்காலை. ஓர்நாள் பொதி சோறு கட்டித் தூக்கிவிட்டுக் களையால் வருந்தித் துயிலுகையில், சோறு கட்டிய துணி கிழிந்ததாகையால், அன்னம் பிதிர்ந்து இவர் வாயில் விழ, அது சிவபிரானுக்கே அற்பணமென்றார். இவரது இடையரு பக்தி வைராக்கியத்தை வெளிப்படுத்துவான் எண்ணிச் சிவபெருமான், சோழனுடைய பூசை முடிவில் சிலம்பின் நாதம் கேட்பிப்பவர் அன்று அஃதொழிந்தனர். சோழன் கவலையுற்று உறங்குகையில் நாம் சேந்தனிட்ட உணவிற்குச் சென்றிருந்தோமெனக் கூறி மறைந்தனர். சேந்தபிரான் திருவிடைக்கழி முதலான தலங்களைப்பாடி நடராஜப்பெருமானது திருவடி நீழலையடைந்தார்.

37-வது செய்யுள். **ஆனைப்பாக்கமுடையான்.**—சோழநாட்டில் வேளாளர் வகுப்பில் ஆனைப்பாக்கமுடையான் கோத்திரத்திலுதித்தவன். பெரிய கொடையாளியாயிருந்தான். அவன் எருமைக்கடாக்களோடு, யானைகளையும் கட்டுஞ் செல்வவானாயிருந்தான். அச்சீமானை ஒருவன் கடா யாசகம் கேட்க வேண்டியவற்றை வேண்டியபடி கொடுத்தான் என்று கன்ன பரம்பரைக் கதை வழங்கும்.

38-வது செய்யுள். இருபத்தொன்பதிலுரைத்தாம்.

39-வது செய்யுள். முனையதரையன். வீரசோழனது அரசாட்சிகாலத்தே, முனையதரையனெனும் பேருடையான் அரசனது பெருமை பெற்று தண்டநாயகனாகி ஸ்ரீ மகாவிஷ்ணுவின் திருப்பதிகளிலொன்றான திருக்கண்ணபுரம் என்னுந் திருப்பதியைத்தலமாகக்கொண்டு இறைவசூல் செய்து பேரும் புகழும் படைத்து வருவானாயினன். அவன் கண்ணபுரத்தெம்மான்பால் பக்தியுடையனாயிருக்கும்போது, கோயிற்கணிகை யொருத்தியால் நசையுடையனாயினும், பெருமாளிடத்தும், இராசப்பெரு

மானிடத்தும் தவறிலாதவளாகி வாழுநாள், பஞ்சம் மிக வருத்த, இறையாக ஈட்டிய பொருள்களையெல்லாம் வறியவர்க்கு ஈந்து வந்தான். நாடு செழிக்கவே, அரசற்குச் சேரவேண்டிய இறையை இறுக்கமாட்டானென்று அவன்பால் சீற்றமுடைய மந்திரியொருவன் இவனையொறுத்துச்சிறையிலிட்டான். இவனது காதற் பரத்தையாகிய கணிகை தானும், தனது முன்னோர் ஈட்டி வைத்திருந்த அரும் பொற்கல முழுவதனையு மளிப்ப அவை வந்த ஆட்கூலிக்கென்று எடுத்துக்கொண்டனர். கணிகை அழுங்கி, சவுரிராசப்பெருமான் சந்நிதி சென்று, இன்று ஐந்தாம் நாள் என் காதன் வாராவிடில் உன்முன்னர் தீ வேட்பித்து அதனிலென்றுயிர்மாய்ப்பேனெனச்சூளுரைத்து உணவொழிந்து ஐந்தாநாள் தீயும் மூட்டினாள். சவுரிராசப்பெருமாள் சோழனது கனவிற்றோன்றி நடந்தவற்றைச் சொல்லி நமது பத்தனை விடுவாயாக வென்று ஆக்ஞையிட்டு மறைய, சோழகோனும், தனை நீக்கி வேண்டிய சீரும் சிறப்புஞ் செய்து போக விடுத்தனன். திரும்பிவந்த முனையதரையன் காதற்பரத்தையோடு இனிதிருக்குப்போது ஓர்நாள் 'பாலுமரியும் பசும்பயறும் பாகமாகவேவிரவி, வலமிழுதுஞ் சருக்கரையு மிட்டட்டுண்ண போதிலன்றன் சாலமதுர மென்ன, அவை சவுரிராஜனுக்கே தரு' மென்றனர். அர்ச்சகர்கள் காலையில் கதவு திறந்து பார்த்தபோது பெருமாள் தேகமுழுதும் அன்னமயமாகவிருந்ததை அறிந்த முனையதரையன் அன்று முதல் அப்பாகப்படி அமுது அமைத்தனர். அது இப்போதும் நடந்துவருகின்றது. இப்பொழுது முனியோதரான் பொங்கலென்று திருந்தி இரண்டாங்காலத்து நைவேதனம் செய்யப்பட்டு, ஓர் பகுப்பு தேசாந்தரிகட்கும் மற்றவை விலைக்கும் விற்கப்படுகிறது.

40-வது செய்யுள். ஔவைப்பிராட்டியார்.—தேசாடனஞ்செய்துகொண்டு அம்பர் என்னும் ஊரிடை வந்து ஓர் இல்லிற் றங்கி தான் பசியால் வருந்துவதாய், அன்னமுதவும்படி வேண்டினள். அவ்வீட்டார் அன்னங்கொடுக்கப்பெற்று உண்டு, உண்டகளை தீர்தற்பொருட்டுத் திண்ணையிற் படுத்திருக்கையில்,

தண்ணீரும் காவிரிதார் வேந்தனுஞ் சோழன்
மண்ணாவதுஞ் சோழ மண்டலமே.

என்ற நேரிசைவெண்பாவை சுவற்றிற்கண்டு, அது முடிவு பெறுதிருப்பதையுணர்ந்து அதன் விருத்தாந்தத்தை விசாரிக்கத் தொடங்கினாள். அவள் படுத்திருக்கும் வீடு தாசியின் வீடு என்றார், தான் பாடல் பெறவேண்டுமென்னும் நோக்கத்தோடு கல்வியிற் பெரியாரான கம்பரை வேண்ட அவர் ஆயிரம் பொன் பரிசு கேட்க, அவளிடமிருந்த ஐந்நூறு பொன்னைக் கொடுத்ததாகவும், அதற்குள்ள அரைப்பாட்டைப் பாடிப்போயினர். அதனால் உள்ளதுங்கெட்டு ஏழையாயினள் என்று கூறினார்கள். அதனைக் கேட்டு, அப்பாடலைப் பூர்த்தி செய்தமாத்திரத்தில் தாசி செல்வவதியாயினளென்ப. இஃது பொய்யாமொழியாரும் ஔவையாரும் பாடியதெனவும் தமிழ் நாவலர் சரிதையில் காணப்படுகிறது.

41-வது செய்யுள் கருங்கண்ணிவேள்.—முற்காலத்து இத்தக்ஷிணநாட்டை வடநாட்டரசர்களும், துருக்கர்களும் அடிக்கடி படையெடுத்துவந்து அழித்துப்போவதும், அதனாற் குதிரைக்காரன் கலகம் என்ற பெயர் வந்ததும் சரித்திர சம்பந்தமானவைகள். இப்படிப்பட்ட கிளர்ச்சியொன்றில் ஆரூர்த்தியாகரை கிழக்குப்பக்கமாகக் கொண்டுபோய் ஒளித்துவைத்திருந்து திரும்பக்கொண்டுவருகையில், பங்குனித்திருவிழா வர, அத்திருவிழாவைக் கருங்கண்ணிவேள் தமது இல்முன் வைத்து நடத்தினாரென்ப. அந்த இடம் இப்போது பெரிய திடலாயிருக்கிறதென்று அதனையும் முதியோர் காட்டுகின்றனர்.

42, 43, 68, 69, 70, 71, 72, 73, 78, 79, 91-வது செய்யுள்கள். சடையவள்ளல்.—சடையவள்ளலென்பார் விக்கிரமசோழன்காலத்து வசித்துவந்த பெருங்காணி வளமுடைய வேளாளர் ஆவர். இவருக்குச் சோழநாட்டில் பல இடங்களில் அனேககிராமங்கள் இருந்தன. சங்கரன் இவரது பெற்றோன்.

இவன் பெரிய கொடைவள்ளலாகச் சிறந்திருந்தானென்பது ஈழநாட்டைப் பஞ்சம் வருத்தியதாக, அக்காலத்து அரசு கட்டிலேறியிருந்த பரராசசிங்கப்பெருமான் என்பவன் இச்சடையவள்ளலை ‘இரவுநண் பகலாகிலென்’ பழுத்துடைக்கனி’ என்ற இரண்டு தாழிசைகளைப் பாடி யனுப்ப, சடையவள்ளல் ஆயிரம் கப்பலில் நெல் ஏற்றி அனுப்பி, அந்நாட்டுப் பஞ்சத்தைத் தவிர்த்தான். இன்னும் கம்பர் தொண்டைநாட்டுள்ள திருவொற்றியூர் சென்றபோது, ஆங்குச் சதுரானன பண்டிதன் மடத்திருந்த வல்லியெனப் பெயரிய தாசியைக்கண்டு மோகித்து அவளை விழைந்தவர், அந்நாடு விட்டுச் சோணாடு புக்கும் அவளைவிட மனமிலராய் உடன்கொண்டுவந்தார். அவளுக்குக் கட்டப்பட்ட வீடு மழையால் நனையாமல் நெற்கதிரால் இவ்வள்ளல் வேய்ந்தனன் என்பது சதகம் 71-வது செய்யுளால் இனிது பெறப்படும். இதுவன்றி, இவன் சேரசோழபாண்டியருக்கு ஒரேகாலத்துப் பெரு விருந்தளித்து அதனால் திரிகர்த்தராயனென்னும் சிறப்புப் பெயர் பெற்றானென்பது சதகம் 91-வது செய்யுளால் விளங்கும்.

இவனுக்கு திருவெண்ணைநல்லூரைத் தவிர்த்து காவிரிக்கரையோரமாயும் அனேக கிராமங்களிலிருந்தனவென்று ‘புரந்தர தாரு புதுவைச்சடைய னிருந்த வியலூர் தெற்குமேற்கு, பரந்த பொன்னி யாற்றுநீரால் விளையுமப்பாற்கிழக்கரிசி, மாற்றுநீரால் விளையுமாம். என்பதனால் விளங்கும். சிலர் வியலூர் என்பது வெண்ணைக்குச் சமீபமானது என்பர். அங்ஙனமாயின் பொன்னியாவது, அதன் கிளைகளாவது சிதம்பரத்துக்கு வடக்கிலேது? வியலூர் என்ற ஊர் விசலூர் என்னும் பெயரோடு காவிரிக்கரையிலிருக்கிறது. அங்கு வேளாளப் பிரபுக்களு மிருக்கின்றனர். இதுவன்றிச் சதகம் 43-வது செய்யுளாலும், அதன் மேற்கோளாலும் காவிரிப் பக்கத்தேயே அதிக நாள் சடையன் வதிந்தனனென்பது நன்கு வலியுறுத்தப்படும். இதுபோலவே இவனுக்குச் சொந்தமான புதுவையென்னுமூரும் திருவாரூருக்கு 7, 8-மைலுக்குள்ளிருக்கிறது. விசலூருக்கும், புதுவைக்கும் இருபது மைலுக்குள்ளிருக்கும். இதனைவிட்டு, புதுவைச்சேதிராயனும், புது

வைச்சடையனும் ஒன்றெனக்காண நியாயமில்லையே. இவ்வாறு கொண்டால் இவன் பெருஞ் சாணிவளமுடையானென்றல்லவோ கொள்ளற்கிடமாகுமெனின் இதனைச் சதகம் 69-வது செய்யுள் இனிது விளக்கும்.

இவன் கல்வி நலமுழுதுமுடையானென்பதும், இவனே கம்பரைக் காதையிற் பெரிய காதையெனும் இராமாயணம் பாடச் செய்தானென்பதும் உலகறிந்த விஷயம். இதுவன்றி கம்பருக்குக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்து இவனே அவரைக் கவிச்சக்ரவர்த்திக் குரிமையாக்கினனென்பது சதகம் 77-வது செய்யுளால் இனிது பெறப்படுகின்றது. இதன்றி பாராட்டியே சீராம கதையில், கம்பன் நூற்றுக்கு ஒரு பாட்டு சடையவள்ளலைப் புகழ்ந்து பாடினனென்றும், அது மிகுதியெனப் பலர் கூறி ஆயிரத்துக் கொன்று போதுமெனக் கூற, 'வார்த்தை ஆயிரத்தொருவர்' என்றதற் கிலக்கியமாக இராமாயணத்தின் இடையிடையே பத்துப் பாக்களில் சடையவள்ளலைப் புகழ்ந்து கூறினர். (சதகம் 72) இவன்போன்ற பல வேளாளப் பிரபுக்களினுடைய உதவியினாலேயே இராமாவதாரம் சீரங்கத்து அரங்கேற்றப்பட்டது. (சதகம் 68) இதுவன்றி வேளாளரது சிறப்பே கூறிய ஏரெழுபது என்னும் நூலைச்செய்து புதுச்சேரிக்குடையானான சேதிராயனுடனிருந்து கேட்டனன். இவ்வாறன்றி, புதுச்சேரிக்கோடையான் என்றும் இந்த விசேடத்தைச் சடையனுக்கு ஏற்றிக் கூறுவர். குணங்கொள் சடையன், புதுச்சேரிக்குடையான் சேதிராயன் என்பதே முதல் என்றும் பின்மொழிக்குப் பொருந்தும். (சதகம் 78.) இவன் கம்பரைப் பேணிப் போற்றினனென்பது அவர் சாகுந்தறுவாயில் சொன்ன "ஆன் பாலுந் தேனு" (சதகம் 79) என்னும் வெண்பா நன்கு வலியுறுத்தும்.

இவன் வெகு ஆடம்பரத்துடன் வாழ்ந்தவனென்று தெரிகிறது. ஒருகாலத்துப் பாண்டியனவைக் களத்துச் சென்றிருந்த கம்பர் அவனது மதுரையலங்கரிப்பு எவ்வாறிருந்ததென்று கேட்க வெண்ணெய்நல்லூர் இடுகாலெடாப்பதென்று பழித்துக்கூறினதாயும், அவ்வளவு விசேஷமானவூரா என்று பாண்டியன்

அதிசயித்து வெண்ணைநல்லூரைப் பார்க்கவந்தபோது தேவேந்திரப் பட்டினமான அமராவதியை யொப்ப அலங்கரித்தான். (சதகம் 73.)

இவனுக்கு இளையாரபாரர்பன் என்று ஒரு சகோதரன் இருந்தானெனவும், அவன் இராஜராஜர்களால் புகழப்பட்டானெனவும் அறிகிறோம். அவன் ஒருகாலத்து, தென்னர்பிரானை பாண்டியனோடு சிம்மாசனத்தில் வீற்றிருந்தவனை யாரென்று வினவிய ஒருவருக்கு விடையாக,

> என்னுடைய தம்பி சரராபனுக் கிளையான்
> கன்னல் மதயானைச் சங்கரன்மகன் —முன்னங்
> கனைபாழி முத்துதிர்க்குங் காவிரிசூழ் நாட்டுக்
> கிளையான் பார்ப னிவன்.

என்று கம்பர் பாடியதாக 70-வது செய்யுளால் அறியப்படுகிறது.

வெண்ணைநல்லூரென்பது கும்பகோணம் தாலூகாவில் கதிராமங்கலமென வழங்கும் கதிர்வேள்மங்கலத்துள்ளது என்றும், மற்றும் அனேக சின்னங்கள் அங்கேயே இருக்கின்றனவென்றும் திருவாவடுதுறை மகா சந்நிதானம் தெரிவித்தது. இது மேற்கூறியவற்றோடு பொருத்தமாயிருப்பதை யறிஞர் கவனிப்பார்களாக.

45 வது செய்யுள். நாகை வேளாளரும், காளமேகப் புலவரும்.---சீரங்கத்துக் கோயிலிற் பரிசாரகஞ் செய்துகொண்டிருந்த வைஷ்ணவப் பிராமணரொருவர் திருவானைக்காவுடையார் கோயில் தாசி யொருத்தியிடம் நட்புக்கொண்டிருந்தார். மார்கழி மாதத்தில் கோயிலில் வழக்கப்படி திருவெம்பாவை ஓதுங்கையில் வைஷ்ணவர் சம்பந்தமுடைய தாசிக்கு 'உங்கையிற் பிள்ளை' என்ற திருவெம்பாவை வர, அதனை யோதிவருங்கால் 'எங் கொங்கை நின்னன்பரல்லார் தோள் சேரற்க' என்றதைச் சொல்லுங்கால் அவள் [illegible]ார்கள். அன்றிரவு வைஷ்ணவப் பிராமணன் வீட்டுக்கு வந்[illegible] தானடை

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

ந்த அவமானத்தைத் தெரிவித்து நீர் சைவனானாலொழிய உம்மைச் சேர்தல் இயலாத காரியம் என்றனள். அதற்கிணங்கி, அப்பிராமணன் சைவனாகித் திருவானைக்காவுடையாருக்குப் பரிசாரகத்தொண்டு செய்துவருநாளில் ஓர்நாளிரவு தாசி, தானும் கோயிலிலிருந்து கூட வருவதாகச் சொல்ல அங்கேயே அவன் படுத்து நித்திரை போயினன். அகிலாண்டேசுவரி அருளைப் பெறச் சந்நிதியில் ஜெபம் செய்துகொண்டிருந்த ஓர் பிராமணனுக்கு தேவி வாலைப்பருவத்தளாகப் பிரசன்னமாகித்தனது வாயிலிருந்த தம்பலத்தை உமிழப்போம்போது, பூர்வ கர்மவசத்தால் பிராமணன் துஷ்டையெனவெண்ணி அப்புறம் போக ஆக்ஞாபித்தான். அம்பிகை புறம் போந்தபோது உறங்கும பரிசாரகனைக் கண்டு அவனை வாய் திறக்கச்சொல்ல, அவன் தாசியினது மனவருத்தம் கூடாதெனநினைந்து வாயை அங்காத்தலும், தேவியினது அருள்பெற்று, நீருண்ட மேகம் கறுத்து மழையைப் பொழிதல்போல, கவி மழையைப் பொழிந்ததால் காளமேகன் என்ற பெயரைப் பெற்றார் இவர் பலவிடங்களும் சென்று திரிந்து, திருமலைராயன்பட்டினம் புகுந்து புலவர்களை அவமானப்படுத்தி மண்மாரி பெய்யச்செய்து, அதனைவிட்டு நாகைப்பட்டினம் வரும்போது, இவரது விகார ரூபத்தைக்கண்ட சிறு பிள்ளைகள் இவரைப் பைத்தியக்காரரென்று கண்டவாறு பிதற்ற 'உள்ளி நாறு வாயரும்' என்ற வசையைப் பாடினார். அதன்மேல் இப்பெரியார் யாவரென்று பட்டினத்திலுள்ள முதியோர் அறிந்து அவரை வழிபட்டு அவரால் புகழப்பட்டனர். காளமேகப்புலவர் நிந்தாஸ்துதி பாடுவதில் மிக்க வல்லவர். இவர் பல தேசங்களும் சுற்றித் திரிந்து முடிவிலே திருவாரூரிலே தேக வியோகமாயினார். இரட்டையர்கள் இவர் காலத்தவர்.

இந்நாகை விருத்தாந்தம் வித்துவான் ஸ்ரீமத் ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளை அவர்கள் சொன்னதோடு, இதனையறிந்த மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் தமது திருநாகைக் காரோணபுராணத்தே இந்த வசையை மீட்டிருப்பதாகவும் தெரிவித்தார்கள். இதனுண்மை வேறு இடத்திலுங் கேட்டேன்.

46-வது செய்யுள் தமிழறியும் பெருமாள் கதை.—இப்பொழுது தமிழறி மடந்தை கதையென வழங்கப்படுகிறது.

47-வது செய்யுள். சந்திரனுக்கும் களங்கமுண்டு. சீதைக்கும் குற்றமிருக்கிறது. மகாவிஷ்ணுவுக்கும் மறுவுண்டு. சிவபெருமானுக்கும் குற்றஞ்சொல்லலாம். பல விதத்திலும் மேம்பாடுடைய சோழியர்களிடத்தில் குற்றமே இல்லையென்பதாம்.

இதற்குக் காட்டப்பட்ட மேற்கோள்கள் பொருத்தமில்லையெனக் கூறுவாரும் உளராயினும் மறுவுண்டு என்பதைக் காட்ட எழுந்ததே இம்மேற்கோள் விஷயமாகையால் மாறுபாடில்லையென்பதாம்.

48-வது செய்யுள்.—சோழியர் வீட்டுப் பெண்கள் ஆண் சித்திரங்கள் வரையமாட்டார்கள். இழி தொழில் செய்யமாட்டார்கள். இவர்களது கற்பு வழாநிலையைத் தேவர்களுமறிவார். தனது கணவனுடைய ஊரைவிட்டுச் செல்லார், ஆற்று வெள்ளத்தை யொருபோதுங் கடவார். அன்றியும் நற்குண நற்செய்கைகள் மிகுந்திருப்பதால் மாரிவளமுங் குன்றுவதில்லையாம். இதற்கு மேற்கோள் காசிகாண்டம் பார்க்க.

49-வது செய்யுள். தேவூர்வேள்.—தேவர்கள் அமுதம் வேண்டிப் பாற்கடலைக் கடைந்தபோது, அதனின்றுஞ் சந்திரன் முதலியன தோன்றின. அகலிகையு முடன் றோன்றினாள். அவளைக் கவுதமரும், இந்திரனும் விரும்ப, இந்திரனுக்கில்லாது கவுதமரே அடைந்தார். கவுதமரைச் சேர்ந்து அகலிகை இல்லற தர்மம் நடத்திவருநாளில், இந்திரன் எவ்வாறாயினும் அகலிகையைச் சேரவேண்டுமென்னு நோக்குடையனாய்ச் சமயம் பார்த்துக்கொண்டிருந்து ஓர்நாள் பொழுது புலர்வதற்குமுன் காகரூபமாய்ச் சென்று கரைய, கவுதமர் ஸ்நானத்துக்குச் சென்றனர். அப்பொழுது இந்திரன் உட்பிரவேசித்து, அகலிகையைப் பலவந்தப்படுத்திக் கூடினான். இதனையறிந்த கவுதமர் அகலிகையைக் கல்லாகவும், இந்திரனை ஆயிரங்கண்ணனாகவும் சபித்தனர். அக

லிகைக்குச் சாப விமோசனமாக, ஸ்ரீ இராமபிரான் அடி தீண்ட முன் னெருப்பட்டிருக்கவெனக் கட்டளையிட்டார். அவ்வாறே தேஜஸ் கெட்டிருந்ததாகவும் சாப விமோசன காலத்துக் கவுதமர் ஆண்டு வந்து, அந்நல்ல வேளாளப் பிரபுவினது பொற்கலப்பையைத் தீண்டி, அன்று நெல் விளைத்து அன்னதானஞ் செய்ததாகவும் அறியப்படுகிறது. இத்தேஜூர் திருவாரூர் ரயில்வேஸ்டேஷனுக்குத் தெற்கில் 2 மைல் தூரத்திலிருக்கிறது. இத்தேஜூர் வேளிர் சந்ததியாரே அவ்வூர் தேவஸ்தான ஸ்தானிகர்களாய் இருந்தனர். இப்பொழுது அக்குடியில் சந்ததியில்லையாம்.

50-வது செய்யுள் வேளாளரே சிவக்ஷேத்திரங்கட்குவேண்டிய பல பலங்களும் விட்டதோடு, ஸ்தானிகமும் உடையவர்களாயிருந்தனரெனத்தெரிவிப்பது. இன்றும் ஒன்றிரண்டு தேவஸ்தானங்கள் வேளாளருடைய ஆதிக்கத்திலேயே இருந்து வருகிறது காணலாம்.

51-வது செய்யுள் பாக்கமுடையான்.— பாக்கத்திலிருந்த ஓர் வேளாளப்பிரபு செல்வப்பநாயக்கனென்னும் ஓர் கவிநாவல் கிந்தாஸ்துதியாகப் பாடப்பட்டபோது வேண்டியவற்றைக் கொடுத்தானென்று எண்ணப்படும். பாக்கமுடையான் கோத்திரத்தாரென்று வேளாளரில் ஒருவகுப்பாருமிருக்கின்றனர்.

52-வது செய்யுள். அநதாரி:-தொண்டைநாட்டில் வாயலூரென்னுமூரிலிருந்த அநதாரி என்பவர் கல்வியின் பொருட்டுச்சோழநாட்டிலுள்ள உறத்தூரில் வசித்து வந்த வேதியரிடம் சென்று கல்விகற்கு நாளையில், இவரது கல்வித்திறத்தைக்கண்டு மெச்சிய கன்றுப்பூருக்கு அதிபனான சிங்கராயன் விலைக்குக்கேட்க வேதியர் விற்றனர். அநதாரியும் குருவார்த்தைக்கிரண்டு சொல்லாது சிங்கராயனோடு வாழ்ந்து வந்தனர். இப்படியிருக்கையில் இவரது கல்வித்திறன் ஊரெலாம் எட்டியது. அக்காலத்துக்கன்னையில் வசித்து வந்த தண்டாயுதன் என்னும் வேளாளருக்கு சிங்கராயன் கட்டளைப்படி இவர் சீட்டுக்கவி பாடினர். இவ்வாறு கொள்ளாது சிங்கராயன் எனும்பெயரைத்தண்டாயுதனே தரித்திருந்தானெ

னக் கொண்டனர் சிலர். அங்ஙனமாயின் 'கன்றுப்புடையாயன் சீட்டுக்கவிதை' என்று முதலடியிலும், மூன்றுவதடியில் 'நாட்டிற் புகழ்கண்ணைக் குடையாளுளுந் தண்டாயுதன் பெருமை' என்றுஞ் சதகமுடையார் சொல்லியிரார். இதனைத் தவிர்த்து மேற்கோ ளில், கனைத்திருந்த கடல்புடை சூழ் கன்னைத்தண்டாயுதனைக் கன்றப்புடையான் நினைத்திருந்த நன்மையினுற் குறைவில்லை யென்றெழுது நிருபருக்கு என்றிருப்பது நன்கு வெளியுறுத்தும்.

'இவரது பேரும் சொல் வன்மையும் எங்கும் பரவ, செவ்வ ந்தி என்னும் அரசனது அமைச்சனுன கச்சிவீரப்பனென்பான் சொல்ல, மதுரை யெம்பெருமானுன சொக்கப்பெருமான்மீது வடமொழியிலுள்ள சுந்தரபாண்டிய மென்னு நூலைத் தமிழாற் செய்து அரங்கேற்றியது.

'மதுரைநாயகன் சுந்தர பாண்டிய வடநூற்<br>
கதிருலாமணியறுகாற் பீடத்திற்கல்லூ<br>
ரதிபனுந் திருவிருந்த வனவையினில்வாயல்<br>
பதியில் வாழனதாரி செந்தமிழினிற்பகர்ந்தான்

என்பதாற் றெளியப்படும். இவர் பிற்றைநாளில் அதிக சீருஞ்சிறப்பும் பெற்று வாழ்ந்தனரென்ப.

53-55-வது செய்யுள்கள். பொய்யாமொழியார்.—தொண் டைநாட்டிலே செங்காட்டுக் கோட்டத்திலுள்ள துறையூரென்னு மூரிற் பிறந்தவர். இவர் இளம்பிராயத்தே கவிபாடுவதில் வெகு சயர்த்தரென்பர். கம்பர் பாடியதாகச்சொல்லும்.

'வாய்த்தவயிரபுராகாளி' என்னும் பாடல் இவர்பாடியதா கக்காணப்படுகிறது. இவர் கல்வி நிறையப்பெற்ற புலவராயிரு ந்தமைபற்றி தமிழ்ச்சங்கத்தை நிலைநிறுத்தும் எண்ணத்துடன் மதுரை நோக்கிப் புறப்பட்டு வழியிலுள்ள திருச்சிராப்பள்ளியிற் றங்கினர். அங்கு வசிக்குநாள் சிவபிரானே ஒருபுலவராய்த்தோ ன்றித் தமக்கு இத்தலமே உவந்ததெனக் கூறிய பாடலொன் றும், அதனைச்சுட்டித் தான் பாடிய பாடலொன்றுங் காண்ட

டுகிறது. திருச்சிராப்பள்ளியை விட்டு மதுரை நோக்கிச்செல்லும்போது இடையில் சுரத்தில் முருகவேள் தோன்றித்தன்பேர் முட்டையென்றும் ஒரு பாடல் பாடவேண்டுமென்றும்சொல்ல 'பொன்போலுங் கள்ளிப்பொறி' என்னும் வெண்பாவைப்பாடி மகிழ்வித்தார். முருகக்கடவுள் இவரது ஆற்றலுக்குமெச்சி இவரது நாவில் பீஜாக்ஷரத்தைத் தீட்டி மறைந்தனர். இந்நூலை அருணகிரியாரும் 'முற்றித்திரிவெற்றிக் பர முற்பட்ட முரட்டுப் புலவனை முட்டைப் பெயர் செப்பிக்கவிபெறு—பெருமாளே' என்றும், திருவிரிஞ்சைப் பிள்ளைத்தமிழில் 'பொய்யாமொழிப்புலவர்' என்றற்கொடக்கத்துச் செய்யுளாலும் இனிதுபெறப்படும். இவ்வாறு பாடித்திருக்கானப்பேறை யடைந்து அங்குள்ள தாசிகள் பொன்கொடுக்க அவர்களைப்பாடியும் பின் அங்கிருந்து மதுரை சென்று அரசனது அமைச்சனான தஞ்சைவாணனைக் கண்டு, அவன்பேரிற்கோவையும்பாடினர். தஞ்சைவாணன் கோவை நம்பியகப்பொருளுக்குச் சிறந்த உதாரணமாக எடுத்துக்காட்டப்படுவது தமிழறிஞர் எல்லோருமறிந்ததே. அவனுதவி பெற்று, மாறனைக்கண்டு வந்த காரியத்தைச் சொல்ல, அவன் நீர் சங்கந் தாபிக்குந் தகுதி யுடையீராயின் சங்கப் புலவர்களைச் சிரக்கம்பஞ் செய்யப் பாடுமென்ன, அவ்வாறு பாடியும் சங்கப் பலகை மிதக்கப் பாடியும் அவரது திறத்தைக் காட்ட அதன் மேற்சங்கமொன்று நிலைநாட்டப்பட்டது.

இவர் சங்கந் தாபித்து வெகுநாட்கழித்து மதுரை நாட்டை விட்டு இறுதிக்காலத்தை இப்போது தஞ்சாவூரை யடுத்துள்ள அரசூரில் கழித்தனரெனவறியலாகும். அரசூர், கண்டியூர், திருப்பூந்துருத்தி முதலான ஏழு ஊர்கட்குத் தலைவனான சீநக்கன் என்பானை யடைய அவன் இவருக்கு இனிமையான புளியஞ் சோற்றை யுதவிப் பின்னரே இவனது க்ஷேமத்தை விசாரித்தானென்றும், அதனைப்பாராட்டி ஓர் வெண்பா (சதகம்—54) பாடினரென்ப. இவனுடனிருக்கும்பொழுது அக்காலத்துத் தஞ்சையை யாண்ட சோழனைக்கண்டு அவனால் வெகுமானிக்கப் பட்டார், (53) புலவர் சீநக்க வள்ளலுடன் வெகுவாகப் பழகி

வரும்போது ஓர்நாள் வெகுநேரம்வரையிற் சம்பாஷித்துக்கொண்டிருந்து வள்ளலையுண்ணப் போகவிடுத்து புலவர் அவனது கட்டிலிலேயே படுத்து உறங்கிவிட்டனர். சீநக்கன் போஜனஞ்செய்து வெளியிலுலாவிமீளுமுன் அவனது பத்தினி அறியாமையால் தனது கணவனென்றெண்ணித்தானு நித்திரை போயினள். சீநக்கன் வந்துபார்த்து, புலவரையெழுப்ப, அந்த அரவத்தில் விழித்துக்கொண்ட பத்தினி எழுந்து வெட்கியோட, பொய்யாமொழியார் பயந்து,

தேரையார் தெங்கிளநீ ருண்ணுஞர் பழிசுமப்பர்
நாரியார் தாமறிவார் நாமவரை நத்தாமை
கோரைவாய்ப் பொன்சொரியுங் கொற்றவன் கண்டி
யூரைவாய் மூடவுரை யறிந்தோ மில்லையே.

என வோர் செய்யுள் செய்தனராயினும் ஊர் வாயை மூடுதல் அசாத்தியமாயிற்று. இங்ஙனை நிகழுநாளில் சீநக்கன் தேகவியோகமானபோது அதனைப் பொறுதவராய், என் ஆருயிரே! அன்று பத்தினி அருகிற் படுத்திருக்கக்கண்ட நீ செல்லக்கிட என்றாய்? இன்று நீ செல்லக்கிடவென்று சொல்லி யவனை யடுக்கியிருந்த ஜதையிற்படுத்து உயிர் துறந்தார். இதனை யறிந்த அவ்வூராரெல்லாம் நாம் இத்தகைமை வாய்ந்த புலவரைக் குறைகூறிமனுமே என்று அப்பழிக்காகத் தீப்புகுந்தனர். (சதகம் 55) இவ்வூர்கள் இப்பொழுது மேலசூர், கீழசூர், திருப்பூந்துருத்தி, கண்டியூர், கருஆர் என வழங்குகின்றது.

56-வது செய்யுள். அம்பற்கிழான் :—பூந்தோட்டம் ரயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கே 2-மைல் தூரத்திலுள்ள அம்பர் என்னு மூரைத் தலைமையாகக்கொண்டு வாழ்ந்த சீமான். திவாகரம் பாடிய சேந்தனால் விலங்கின் பெயர்த்தொகுதி யிறுதிக்கட்டுரையில் 'ஔவை பாடிய வம்பற் கிழவோன்' என்றும் 'கற்ற நாவினன், கேட்ட செவியினன், முற்ற வுணர்ந்த மூதறிவாளன், நாகரீக நாட்டத்தாரிய னொருவந்தை' எனவும் புகழப்படுகிறன். இவனைக் கல்லாடனுர் என்னு மொரு புலவர்

385-வது புறப்பாட்டில் புகழ்கிறார். இவரது இயற்பெயர் அருவந்தை யென்பது. இவர் பெரிய கொடை வள்ளலாயிருந்ததோடு கல்வியிலும் மேம்பட்டவராயிருந்தார்.

57-வது செய்யுள். சோழியர்கள் என்ன கஷ்டம் வந்தாலும் தாம் எடுத்துக்கொண்ட காரியத்தை இனிது செய்தே முடித்துத் தீருவார்களென்பதற்கு உதாரணமாகவும், சோழனது அமைச்சனான வேறொருவன் கடுவாய்க்கரைப்புத்தூரிலுள்ள அவ்வூருடைய பிரானுக்குக் கோபுரமும், மதிலும் அமைத்தான் என்றும், அது பின்னர் நந்தியெம்பெருமானால் விளக்கப்பட்டதென்றும் கூறுவார்கள்.

58-வது செய்யுள். இரட்டையர்கள்.—தென் இந்தியா ரயில்வேயில் ஆடுதுறை ஸ்டேஷனுக்குத் தெற்கில் நான்கு மைல் தூரத்திலுள்ள இலந்துறை என்னுமூரில் இளஞ்சூரியர், முதுசூரியரென்பாரில் ஒருவர் பிறவிக்குருடராயும், மற்றொருவர் கான்முடமாயும் பிறந்து சரசுவதி கடாக்ஷத்தால் பாடுந் திறமை பெற்றனர். முடவர், குருடர் தோண்மேல் ஏறிக்கொண்டு வழிகாட்டக் குருடர் தூக்கிச்செல்வது வழக்கம். இவர்கள் கவிபாடுவதில் வல்லுநரென்பதும், கலம்பகம்பாடுவதே இயற்பொருத்தமுடையா ரென்பதும் 'கலம்பகத்திற் கிரட்டையர்கள்' என்பதால் இனிது பெறப்படும். வக்கபாகையிலிருந்த கொங்கர் குலபதியும் சனியூர் வில்லிப்புத்தூரரைப் பாரதம் பாடச்செய்தவனுமான ஆட்கொண்டானாலும், கச்சியிலிருந்த சம்பராயனாலும் போற்றப்பட்டவர்கள். இவர்கள் ஏகாம்பரநாதருலாப்பாடி அரங்கேற்றுகையில் அதனிலுள்ள,

சாற்றிய வாயிரக்கான் மண்டபத்தின் சார்வாக
வேற்ற முடனே யினிதிருந்து—போற்றும்
விரல்விகட சக்ர விநாயகன் யேத்துந்
திறல்விகட சக்ராயுதம்.

என்ற அடிகளைச் சொன்னபோது ஆயிரக்கான் மண்டபமும், விகடசக்கர விநாயகரும் காணோமேயென்று அவையிலுள்

ளோர் வினவ, நானுமறியேன் அவளும் பொய் சொல்லாள் என்று சொல்லி அவையுண்டானபோது அரங்கேற்றப்படுமெனச் சொல்லி யகன்றனர். சோழனொருவன் திருப்பணி செய்கையில் மண்டபமும் விநாயகரும் தோன்ற, பின்னரொருக்கால் சென்று இரட்டையர்கள் நூலை அரங்கேற்றினர்களென்ப. இதுவன்றித் திருவண்ணாமலை போகும்போது அங்கிருந்த சம்பந்தாண்டான் என்பார் தலைச்சவரம் செய்துகொள்ளும்போது சமுத்தி பாடச் சொல்ல அவனையவமானப்படுத்திச்சமுத்தி பாடினார்கள். இவர்களிவ்வுலாவைத் தவிர்த்து திருஆமாத்தூர்க் கலம்பகம், தில்லைக் கலம்பகம் முதலியன இயற்றியதோடு ஒருவர் வினாவும், ஒருவர் விடையும் அதற்கு முடிவுரையாக வெண்டாமரையாளே சொல்லியதாக மூவரம்மானையென்பதும் செய்தனர். இவரது சரித்திர விரிவை, கோவை சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள் எழுதிய சரிதத்திற் காண்க.

59-வது செய்யுள். சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தனது திரு ஆக்கூர் தான்றோன்றி மாடத்துத் திருப்பதிகத்தில் வேளாளரைச் சிறப்பித்துள்ளார்கள். அதன்படியே அவ்வூர் வேளாளர் பலர் சிறிது காலத்திற்குமுன்வரையில் திரவிய சம்பன்னர்களாயிருந்ததோடு, தான்றோன்றி மாடமுடையார் கைங்கரியங்களுங் கவனித்துவந்தனர். இப்போது சுவாமி காரியம் கவனிப்புக் குறைவாயிருப்பதாகக் கேள்வி.

60-வது செய்யுள். வேளூர்க்கிழான்.—திருத்துறைப்பூண்டிக்கு வடக்கு திருவாரூர் போகும் ரஸ்தாவில் திருத்துறைப் பூண்டியிலிருந்து 2-வது கல்லிலிருக்கும் வேளூரைத் தலைமையாகவுடைய நாட்டுநாயனுரென்னும் பெருங்காணி வளமுடையார். இவர் காணியாள வகுப்பினர். இவருக்குப் பெருங்காணிவளத்தோடு, கச்சினம் முதலிய தேவாலய விசாரணையு மிருந்தது. ஒருநாள் தான் கச்சினங் கோயிற்சென்று திரும்பி இல்லிற்கு வந்தபோது, கிழான் மகள் கொல்லையிற் கத்தரிக்காய் பறிக்கச்சென்றிருந்தவள் திரும்பவருகையில், தனது சீரையின் முந்தானையை அங்கிருந்த கத்தரிச்செடியின் முள் மாட்டிக்கொண்டிழுக்க, அத

லைப் பரிகாச வார்த்தையாகச் சீ! விடு, என்று சொன்னதைமாத்திரங்கேட்டு, கிழார் தனது புத்திரி பக்கத்திருந்த ஒருவனோடு உரையாடினதாக நினைத்து, எவர் சொல்லியுங் கேளாது தீப்புகக் கட்டளையிட்டார். அவள், தந்தை வார்த்தையைத் தட்டாது தீப் பாயப் போகுங்கால், "நத்தமிருக்க நடுமனை பாழாகவும், முடையாற விளைந்தாலும் போருக்கு நெல்லற்றுப்போகவும், மேலத் தெருவில் அடித்த மேளங் கீழத்தெருவிற் கேட்காமலும், போன வழிபோக மற்றவிடம் நீரற்றுப்போகவும்" கூறுரைத்துச் சென்றனள். இன்றும் அவர் மனை பெருந்திடலாயிருப்பதோடு, கீழத் தெரு ஓசை மேலத்தெருவுக்குக் கேட்பதில்லையாம். அவள் போன வழியில் பறைச்சேரியுண்டாகி அதனில் நல்ல நீரிருக்க, வேளாளரிருக்குமிடத்தில் நீர் ஊற்றில்லை. ஒரு பத்து வருடங்கட்கு முன்வரை கிராமம் பாழாகவிருந்து இப்போது சுபிட்சமாக இருப்பதாக அவ்வூரார் சொல்லுகின்றனர். இன்னும் அவ்வூரில் காணியாளர்கள் ஒருவரும் இரவிற் றங்காது பக்கத்துள்ள மருச்சேரி செல்வது வழக்கம். இவரை யுள்ளிட்டாரே மதுரையிற் பாண்டியனாற் குடியேற்றப் பட்டனரென்று சதகம் 92-வது செய்யுளால் தெரிகிறது.

61-வது செய்யுள். காணியாளர்.—சோழர்களது ஐம்பதாவது தலைமுறையுடையவனான பராந்தகன் என்னுமரசன் புவனமாதேவி என்னு இராசமாதேவியுடன் அரசாட்சி செய்கையில் சாரமாமுனிவர் சுவாமிக்காகப் போட்டிருந்த பூங்காவனத்திலுள்ள பூக்களை அரசன் கொணரச்செய்தான். அதனை முனிவரர் சிவபெருமானிடம் முறையிட இன்றும் ஏழுநாளில் ஊரழியுமென்று சொல்லி மறைந்தனர். அதைப்போல மண்மாரி பெய்ய, அரசன் தனது கோப்பெருந்தேவியோடு மேற்றிசை செல்ல, அங்கும் மண்மாரி பின்றொடர்ந்தது. அதுகண்டு, அரசன் காவிரிப் பக்கல் செல்ல, அங்கு கோப்பெருந்தேவி ஆற்றில் விழுந்தனள். அரசன் மண்மாரியில் முழுக்குண்டனன். ஆற்றிலே சென்ற கோப்பெருந்தேவியைப் பிரமமாநதி என்னு மந்தணன் கண்டெடுத்து வரலாறு அறிந்து அவளைக் காப்பாற்றி வைத்திருந்த

னன். அவள் கருவுற்றிருந்தமையால், முதிர்ந்து ஒரு ஆண்மகவைப் பெற்றனள். அதனை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்துவந்தார்கள். அரசு கட்டிலேறுவாரின்றி இராச்சியம் பாழாவதையறிந்த சாரமாமுனிவர் இராச்சியம் செழிக்கவெண்ணி, அமைச்சரிடம் சென்று சோழவரசன் காவிரிப் பக்கல் வளர்ந்துவருகிறானென்று சொல்லிப் பட்டத்துயானையை விட, அது சிற்றிலழித்து விளையாடிக்கொண்டிருந்த இந்தக்குழந்தையை யெடுக்க முயன்றது. கூட விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகள் இதனைத் தாய்க்கு அறிவிக்கவே, கோப்பெருந்தேவி மறையோனிடம் அறிவிக்க, அந்தணன் வந்து கரியினாற் காலில் கிழிக்கச்செய்தான். உடனே அரசனுக்கு பலங்குறைய யானை தூக்கிச்செல்ல உறையூரில் அரசு கட்டிலேறினான். இவனைச் சந்தேகித்து இவனது தாயத்தார் ஒறுக்கவே, இவன் அரசுக்குரிமையுடையானாயின் இவனுக்கு பட்டங்கட்ட உரிமையுடையோர் தலையில் அகலை வைத்து, ஆநெய் வார்த்து, தாமரை நூலிட்டு ஏற்றப்பட்ட விளக்குடனே திருவெண்காட்டிலுள்ள முக்குளத்தில் மூழ்கி விளக்கு அணையாது எழவேண்டுமென்று சொல்ல அவ்விதமே காணியாளர் 64 குடிகளும் மூழ்கி எழுந்தனரென்றும் சொல்லுவார்கள். இதற்குச் சான்றாக இன்றும் காணியாளக் குடும்பங்களில் தாலாட்டும்போது ‘முன்னாள் முக்குளத்தில் மூழ்கிக் கரையேறி—மண்ணாளுஞ் சோழனுக்கு மகுடமுடிசூட்டி’ என்று தாலாட்டுவதுண்டு. இவர்களுக்கு நாயனார் என்ற பட்டமுண்டு. இந்த 64 பெயர்களும் 64 கோத்திரத்தார்களாக, அவர்கள் குடும்பங்கள் இங்கு மங்கும் அருகிக் காணப்படுகின்றன. இவர்கள் சோழனுக்குத்தக்க துணையாகவிருந்தனரென்று சதகம் .81-லும் அறியப் படுகிறது சாரமாமுனிவரகவல் என்று கிடைக்கக்கூடிய ஒரே பிரதி மகாமகோபாத்தியாய; ஐயரவர்களிடமிருப்பதாக அறிகிறேன்.

62-வது செய்யுள் **திருவெண்காடர்.**—என்னும் பட்டினத்தடிகள் சரிதம் அறியாதாரொருவருமில்லை பட்டினம் என்பது காவிரிப்பூம்பட்டினம் இப்பொழுது பட்டணம் என்றால் சென்

லையைச் சொல்வது போல அக்காலத்து காவிரிப்பூம்பட்டினம் சிறப்புற்றிருந்ததென அறியலாகும்.

63.வது. சத்திமுற்றப்புலவர்.—கும்பகோணத்துக்குத் தென்கிழக்கில் சுமார் 4-மைல் தூரத்திலுள்ளதும், வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க பூதபரம்பரை பொலிய புனிதவாய் மலர்ந்தழுத சீதவளவயற் புகலிவேந்தருக்கு முத்துப்பந்தரளித்த தலமான திருப்பட்டீச் சுரத்துடன் சேர்ந்து வடபாலுள்ள திவ்வியத்தலமான திருச்சத்திமுற்றத்துப் பிறந்து கல்வி கேள்விகளில் வல்லவராயினும்; கலைநூல் வலாரை வருத்தும் வறுமைப்பிணிநோய் தணிக்க வாற்றலிலராய் பெரிய குடும்பத்தினையுடையவராவர். அக்காலத்து மதுரையையாண்டசெழுந்தகை வழுதி மிக்க கொடையாளனெனக்கேட்டு அவனுழைச்சென்று தனது வறுமைப்பிணியை வேரறத்துணிப்பானெண்ணி மதுரையம்பதி புகுந்தனனாக. இருட்காலமாகையால் வையையிற் படுத்திருக்குங்கால் நாரையொன்று மேலே பறந்து கத்திச்சென்றது, அதனைக்கேட்டு "நாராய் நாராய்" என்ற அகவலைப்பாடும்போது நகர் சோதனையின் பொருட்டுச் சென்று கொண்டிருந்த தென்னவன் வெகுநாளாக நாரையின் மூக்குக்கு உவமை தேடியும் அறியாது திகைத்தவன் புலவர் பெருந்தகை பாடியதைக்கேட்ட மாத்திரத்து ஆநந்தமுற்று தனது மேற்போர்வையை அவன் மேற்போர்த்துச்சென்றனன். புலவன் நடந்துவந்தவிளைப்புடன், உணவுமில்லாததோடு வாடையாலும் மெலிந்திருந்தமையான் உறக்கத்தில் குளிர் நீங்க, பொழுது புலர்ந்ததுகூடத்தெரியாது உறங்கினன். அரண்மனைசென்ற வழுதி காவலாளரைக் கூப்பிட்டு வையைக் கரையிலுள்ள புலவரையழைத்து அவருக்கு வேண்டிய சன்மானஞ்செய்தான். இஃதன்றி இவனை ராஜசமூகத்தில் நிறுத்தியபோது "வெறும்புற்கையு மரிதாங்கிள்ளை சோறும்வீடுமின்றி யெறும்புக்கு மாற்பதமில்லைமன்னே" என்ற வளவில் நிறுத்திக்கொள்ளும்படி மாறன் கூறியதாயும், பின்னர் இவரது ஊரில் இவருக்கு வேண்டியன வெல்லாம் செய்தமைத்துப்போகவிடுத்தனனெனவும், இவன் ஊர்வந்து பார்த்துத் தனது இல்லை அறியாது திகைத்துத் தேடிச்சென்று பின்னொருக்கால், அரசன் அப்பாட்

டைப் பூர்த்தி செய்யச்சொன்னபோது “மூன்றுள்...............” என்று கூறி முடித்தனனென்பர். இச்சதகம் 82-வது செய்யுளைக் கொண்டு அது வேறொருவர் கூற்றாகக் கொள்ளக் கிடக்கின்றது. அதன் பரிசை அச்செய்யுளின் கீழ்க்காண்க.

64, 80, 93, 95-வது செய்யுள்கள். ஒட்டக்கூத்தர்.— கம்பனென்றுங் குப்பனென்றுங் காழியொட்டக் கூத்தனென்றும் என்பதால் வம்பராவரிவண்டிமணை நாற மலருமது மலர்க்கொன்றையான் அடியலாற்பேணு வெம்பிரானுன சம்பந்தப்பெருமான் பிறந்த பதியாகிய சீகாழிப்பதியில் செங்குந்தமரபிற்றோன்றியவர். சடைய வள்ளலது பிதாவான சங்கரற்கு உதவித்தொழில் புரிந்துகொண்டிருக்கும்போது, இவரது சுறு சுறுப்பை யறிந்த காங்கேயன் என்னும்பிரபு இவரைப்படிக்கவைத்து கவுடப்புலவனெனும் பேர் பெறும்படி செய்தான். அந்நன்றி பாராட்டி அவன்மேல் நாலாயிரக் கோவை என்னுமோர் பிரபந்தம் செய்தார். (சதகம் 93) இதோடுவிடாது சரசுவதி தேவியினது கடாக்ஷத்தைப்பெறவேண்டி இவர் அத்தேவியை வணங்கினுரென்றும், அந்தயிடத்தில் தனிமையாக சரசுவதிதேவிக்கு ஆலயமிருப்பதோடு கூத்தர் விக்கிரகமும் காணப்படுகிறது. இதற்குக் கூத்தனூரென்று பெயர். பூந்தோட்டம் ஸ்டேஷனுக்குச் சமீபத்திலிருக்கிறது. இவ்வாறு இவர் மேம்பட்டு வருநாளில் விக்கிரமசோழராஜன் அறிந்து இவரைத்தனது சபையில் வரவழைத்தும் தனது புத்திரனுன குலோத்துங்க சோழனுக்கு தமிழாசிரியராயும் செய்து வைத்தனன். கூத்த முதலியார் இவ்வாறு சிறந்துவரு நாளில் ஒரு வித்துவான் கவிபாட அதனையொட்டிப்பாட அன்று முதல ஒட்டக்கூத்தனென்னும் பெயர் படைத்தனரெனபர். இவர் விக்கிரமசோழன் குலோத்துங்கசோழன் ராசராசசோழன் எனு மூவர்பேரிலும் உலாப்பாடி யிருக்கின்றனன். அவை மூவருலாக் களெனப்படும்.

இவ்வாறிருக்கும்போது குலோத்துங்க சோழதேவர்க்குப் பெண்வேண்டி பாண்டியனிடம் சென்று அங்கிருந்த புலவர்பெருந்தகையான புகழேந்தியோடு வாதாடிக்கடைசியில் பெண்கொ

ண்டு, புகழேந்தியாரையும் சீதனமாக வரப்பெற்று, பின்னர் அவரைச் சிறையிட்டும் அவரால் அவமானமடைந்து சிறைமீட்டும், கம்பர், புகழேந்தி முதலியோரால் அவையில் அவமதிக்கப்பட்டானென்றும் கூறுவர்.

கூத்தர் செங்குந்தர் மரபினராகையான் அம்மரபினர் தங்களைப்பாடவேண்டுமென்று கேட்க இவர் காலதாமதஞ்செய்தது கண்டு துரத்துதலும், இவர் ஓரிடம் ஓடிப்புக்கு அங்கிருந்து தக்கயாகபரணி பாடி, அது செய்திருப்பதாகக்காட்ட அவர்கள் ஒருவாறு தணிந்து அவருக்கு முத்துச்சிவிகை யளித்தனரென்ப.

பின்னர் அவர்கள் நாட்டுக்கு ஒரு தலைவீதம் கொடுப்பவதன்மீதிருந்து ஈட்டி எழுபது என்னும் நூலைப்பாடி அவர்களை எழுப்பு எழுபது என்பது பாடி யெழுப்புவித்தனர். அக்காலத்து திருமருகல் நாட்டார் அதனிற் சேராததாலே, மற்றைய நாட்டாரோடு சேருவதில்லையென செங்குந்த மரபினர் சிலர் சொல்வதுண்டாயினும் உண்மையறியேம்.

கம்பரைச் சடைய வள்ளல் இராமாயணம் பாட அரசனைக் கொண்டு ஏற்பாடு செய்தபோது கூத்தரையும் பாட ஏற்பாடு செய்தார்கள். கம்பர் இராமாயணம் பாடாது காலஹரணஞ்செய்வதையறிந்த சோழன் கூத்தரைப்பாடியது எவ்வளவென்று வினவிவிட்டுக் கம்பரைப் பார்க்க, தாம் அதற்குமேல் கடல்தாவுபடலம் பாடுவதாகச் சொல்லி அப்படலத்தை மாத்திரம் அங்கு பிரசங்கம் செய்தார். கூத்தரும் முழுதும் பாடி அது பிரயோசனப்படாததுகண்டு, எழுதிய ஏட்டைக் கிழிப்பதைக்கண்ட கம்பர், தாம் உத்தரராமாயணம் பாடாததால் அதனை வைத்துக்கொள்ளலாமென்று கூற, அதுவே இராமாயணத்தின் கடைப்பாகமாயிற்று. அன்றி, கம்பர் பாடியது அவ்வளவேயாக, அதற்கு மேற்பட்டு கூத்தர் பாடி முடித்திருக்கலாம். (சதகம் 80) இவைகளையன்றி சதகம் 95-ல் கூத்தன் இலக்கணநூலொன்று செய்தமைத்தானென்றும் செந்தமிழ் 2-வது வால்யத்தில் சொல்

லப்பட்டிருக்கிறது. வேறு சிலர் தமிழ்க் கூத்தனென்பார் ஓர் இலக்கண வாசிரியர் உளரென்பர்.

65-வதுசெய்யுள். கும்பகோணத்துள்ள திருத்தங்கி மருத்தனென்பாருள் முன்னவன் உலோபியாயும், பின்னவன் கொடையாளியாயுமிருந்ததைப்பற்றி அவர்களைச் சிறப்பித்து ஔவையாரால் கூறப்பட்டது. இச்சரிதம் சங்ககாலத்து ... தமிழ்நாவலர் சரிதையால் அறியக் கிடக்கின்றது, இப்பொழுது கதை அறிவது சாத்தியமில்லை.

66, 75, 83-வது செய்யுள்கள் பொது வகையாக வேளாளர், காணியாளர்களது பெருமையை விளக்கும்.

67-வது செய்யுள். புங்கனூர்க்கிழவன்.—வைத்தீசுவரன் கோயிலுக்கு வடமேற்கில் இரண்டு மைல் தூரத்திலுள்ள புங்கனூர் என்னுமூரைத் தலைமையாகவுடைய நாயன்மார் ஒருவர் விசேஷ கீர்த்தியுடன் வாழ்ந்துவந்தார். அவர் தமது வீட்டில் நடந்த கல்லியாணத்திற்கு வந்த ஒரு வித்துவான் திண்ணையிலும் கனடை (சரிகை வேஷ்டி) புரட்டுமென்று பாட, அவருக்கு சரிகைச்சோமன் முதலியவை பரிசளித்தாரென்ப. இப்போது இந்தக் கிராமம் முக்கியமில்லாததாக இருக்கிறது.

74-வது செய்யுள். சேரர்கோனான பெருமாக்கோதையென்பார் தானரசுரிமை யெய்துவதற்குமுன் தெண்ணீர்முடியார் திருவஞ்சைக்களத்திற்புகுந்து, எம்பிரான் பணியே செய்து வருவாராயினர். சின்னாட்செல்ல அரசன் அரசைத் துறந்து வனம்புகுதலும், மந்திரிமார் பெருமாக்கோதையாரைச் சேர்ந்து அரசுகைக்கொள்ள வேண்டுதலும், அங்ஙனமாயின் சிவபெருமானைக் கேட்டு விடையளிப்பதாய்ச்செல்ல, சிவபெருமான், தமது அடியாருக்கு அவரவர் சொல்வது உண்மை விரோதம் என்பது அறியும் சக்தியை யீந்து கழறிற்றறிவாராக இராஜரீகம் செய்யக் கட்டளையிட்டனர். இவர் இவ்வாறு அரசுதாங்கு நாளிலும் நடராஜப்பெருமானடித் தொண்டுபுரிவதே முதற்றொண்டாய்ப் பூண்டு ஒழுகுநாளில் ஓர்நாள் எம்பெருமானது பாதச்சிலம்பொலி

கேட்காதவராய் வியாகுலமடைந்து அரிதுயிலமர, சிவபெருமான் தனது தொண்டன் சுந்தரனது பரவலைக் கேட்டு நின்றேம், நீ கவலற்க எனச் சாதித்தருள, அங்ஙனமாயின் அவ்வடிகளை யாமும் தரிசித்துய்வோமாகவென்று, நன்முகூர்த்தத்திற் பிரயாணப்பட்டு, காடு வனங்கள் கடந்து, சிதம்பரத்தை யடைந்து, ஆநந்தத்தாண்டவனைத் தரிசித்து, **பொன்வண்ணத்தந்தாதி** என்னும் அந்தாதிப் பாட்டு நூறையும் பாடி, சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தரிசித்து, அவரது தோழமையும் பெற்று, அவர் கைலாயத்திற்குச் செல்லுங்கால், அவரோடு கூடக் கைலாயஞ் சேர்ந்து, **திருக்கைலாய ஞானவுலா** முதலியன அரங்கேற்றினர்.

**76, 83-வது செய்யுள்கள். சேக்கிழார்.**—பாலாறு வளஞ் சுரந்து நல்கமல்கும் பாளைவிரி மணங்கமழ் பூஞ்சோலைதோறுங் காலாறு கோலி யிசை பாட, நீடுகயனின்றாடும் இயற்றொண்டை நாட்டிலே, புலியூர்க்கோட்டத்து சேலாறுகின்ற வயற்குன்றத்தூரிலே சைவசமயம் தழைத்தோங்குவது காரணமாக, நாடெங்குஞ் சோழன் முன்னந்தெரிந்தே யேற்று நற்குடிகள் பலவற்றுள் சேக்கிழார் கோத்திரத்திலே அருண்மொழித்தேவர் என்பார் ஒருவர் உதித்தனர். இவர் கல்வி கேள்விகளா னிறையப்பெற்று, சிவபக்தி சீல முதலியன மிக்குடையராயிருத்தலையறிந்த அநபாய னென்னும் ராஜராஜ சோழமன்னன் சேக்கிழார்குலத்துவந்த அருண்மொழித் தேவரை உத்தம பல்லவச் சோழனெனும் பட்டமுந் தந்து முதன் மந்திரியாக நியமித்து, அரசாண்டுவந்தனன். இவ்வாறிருக்கையில் சைவ சமயிகளிற் பலரும் அரசனும் ஆருகத சமயநூலான ஜீவக சிந்தாமணியைப் பெரிதும் பாராட்டுவதைக் கேட்ட சேக்கிழார் மனம் பொறாது சிவ கதைகளைக் கேட்காது, அருகக்கடவுளது பெருமை கேட்பது சைவ சமயிகட்கு அடாதென்றும், திருத்தொண்டர் மகிமையும், சிவபெருமானது அருளும் இவ்வாறாகுமெனச் சொல்லக்கேட்ட அநபாயன், அவரைக் கொண்டே திருத்தொண்டர் பெருமை நிறையப்பெற்ற பெரிய புராணத்தைப்பாட இசைவித்து, அவர் சிதம்பரம் சென்று சிற்சபேசனை வணங்கிப் போற்ற, 'உலகெலாம்' என்று சிவபெருமான்

அடியெடுத்துக்கொடுக்கப் புராணத்தைப்பாடி முடித்தனர். சோழமகாராஜன் அதனையறிந்து, பெரிய புராணத்தைச் செய்யத்தகு மரியாதை செய்து, யானையின்மீதேற்றிவைத்து, ஊர்வலஞ் செய்துகொணர்ந்து, குணத்திற் பெரியோரெல்லாம் பொலிந்த சபையிலே கனகசபையின்கண்ணே இருக்கும் பஞ்சாக்ஷரப்படியிலே ஏற்றிவைத்து, அரங்கேற்றினதுமன்றி 'தொண்டர்சீர் பரவுவார்' என்னும் பட்டமுந் தந்தார். சேக்கிழார் சுவாமிகள் சின்னாட் சிதம்பரத்திலே தங்கி, சிவபெருமானது திருவடிநீழலையடைந்தார்.

82-வது செய்யுள். குடிதாங்கி.—மன்னார்குடி தாலூகாவில் களந்தையென்னு மாதித்தேச்சரத்தில் குடிதாங்கி என்னுமோர் வேளாளப்பிரபு இருந்தார். அவரை ஒரு புலவன் போய் யாசிப்ப, அவன் வேண்டியபடி உதவி, முன்னாள் எறும்புக்குமொரு பருக்கை இல்லையென்றவிடத்து யானையுங் கவளங்கொள்ளாது தெவிட்டும்படி உதவினனென்ப.

இதுவன்றி, குடிதாங்கிவாழ்ந்தது பொற்களந்தை யென்பாருமுளரோரெனின் அது தொண்டைநாட்டு நிகழ்ந்ததொரு செய்தியாம். இது இங்கு நடந்ததென்பதற் கறிகுறியாக இன்னுங் களந்தைக்குத் தெற்கில் குடிதாங்கிச்சேரி யென்றொரு ஊர் இருப்பதே போதிய சான்றாம். அதுவன்றி சோழமண்டலசதகமுடையாரும், தொண்டைமண்டல சதகம் பாடிய படிக்காசற்குப் பிற்பட்டவராதலோடு, தொண்டைமண்டல சதகத்தையும் நன்கு ஆராய்ந்தவரெனத் தெரிதலால் அவ்விதம் கூறாரென்பது தெளியலாகும்.

84-வது செய்யுள். திருவேங்கிடநாதர், வைத்தியநாத தேசிகர்.-தேசிகர் இற்றைக்குச் சுமார் 280-வருடங்கட்குமுன் சப்தவிடங்க க்ஷேத்திரங்களி லொன்றான திருவாரூரின்கண் சுத்தாத்துவிதசைவ சித்தாந்தத்தைப்போற்றுபவர்களான பரம்பரைச்சைவ ஆசாரியர் பரம்பரையில் வன்மீகநாத தேசிகருக்கு மூத்த பனைவியின்பாலுதித்தவர். அக்காலத்து, திருவாரூர் ஸ்ரீ தியாகேசனது கோயில் நிர்வாகத்தை விசாரித்துவந்த ஸ்ரீ அகோரத்தப்பிரானால்

பெரிதும் அபிமானிக்கப்பட்டு, கல்வியும் பயிற்றப்பட்டவர். இவரது அறிவு முதிர்ச்சியை யறிந்த விசாரணைக்கருத்தர் தமது உடன் கற்ற மாணாக்கரொருவரிடம் தொல்காப்பியம் பாடஞ் சொல்லவும் ஏற்பாடு செய்து வைத்தனர். இவ்வாறு கற்று மேன்மை யடைந்தபோது, மாயூரத்துக்குத் தென்மேற்கில் சுமார் 10 மைல் தூரத்திலுள்ள மாதை (இப்பொழுது மாந்தை) யின்கண் வசித்து வந்த திருவேங்கடநாதருக்கு வித்தியாகுருவாயிருந்தபோது, அவர் பொருட்டு அன்றுடன் தாமே இலக்கணநூல் ஒன்றை யியற்றிப் பாடஞ் சொல்லிவருவாரென்பது ஐன்னபரம்பரைச்செய்தி. இதுவே இலக்கண விளக்கமாயிற்று. இந்நூலாசிரியரிடம் கல்வி பயின்றோர் பல்லோராவர்.

இவரது மாணாக்கரான திருவேங்கிடநாதரோ, அக்காலத்து மதுரையை யாண்ட நாயக்கவரசர்களால் பெரிதும் போற்றப்பட்டு, திருநெல்வேலிச் சீமையில் இராஜப் பிரதிநிதியாக கி. பி. 1682-ம் ௵ முதல் 1705-ம் ௵ வரையில் அரசாண்டுவந்தனர். இவரது ஆட்சியின் சிறப்பை பணவிடுதூது என்னும் ஒரு சிறு நூலில் வெகு அழகாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

85-வது செய்யுள். புத்தூர்வேள்.—புத்தூரிலிருந்தவேள் ஈகையுடையானும் கல்வி நிரம்பியவனுமாயிருந்தான். அவனைப் பலரும் பாடிப் பரிசில் பெற்றனர். ஓர் புலவன் பாடிய பாட்டு இனிமையாயிருந்ததைப் பற்றி அவன் பெரிதும் போற்றப்பட்டான். அந்தப் பாட்டினினிமையைக்கண்ட ஆசிரியர் அமுதசாகரர் தமது யாப்பருங்கலக்காரிகையில் இருகுறணேரிசை வெண்பாவிற்கு உதாரணமாகக் காட்டினர்.

86-வது செய்யுள். கருணாகரத்தொண்டன்.—திருவாரூரிலே அதி ஏழ்மையோடு கூடியிருந்த பூதமங்கலத்தான் என்னும் ஓர் வேளாளர் தனது மனைவியையும், கருணாகரன் என்ற மகனையும் விட்டு விண்ணடைந்தனர். கருணாகரன் வாலிபமாயிருக்கும்போது இவனது அதிர்ஷ்டத்தைத் தனது மந்திர சக்தியாலறிந்த ஒருவன் இவனிடம் வந்து தனக்கு இரண்டு கை பொன் கொடுக்

குப்படி சீட்டொன்று எழுதிக் கேட்டான். பையன் நகைத்து இஃதென்ன அதிசயம்! என்னிடம் ஒரு பைசாகூடக் கிடையாத பரம ஏழையாக யானிருக்க என்னைச் சீட்டுக் கேட்டீ—ன் பயனென்றனன். என்ன செல்லியும் கேளாது, வந்தவன் சீட்டெழுதி வாங்கிச்சென்று, இவனுக்காக ஏற்பட்ட திரவியத்தைக் காத்து நிற்கும் பூதத்தினிடைச் சென்று, சீட்டைக் கொடுத்துப் பொன் பெற்றுச் சென்றனன்.

இவனுக்கு வயது வரவே, பூதகணம், இவனை வந்து இவனது சொத்தை யொப்புக்கொள்ளும்படிச் சொல்ல, அவன் பக்கத்துள்ள கடாரங்கொண்டான் என்னுமூர் சென்று, திரவியத்தைக் கண்ணுற்றுத் தமக்கு வைத்துக் காப்பாற்றச் சக்தியில்லையென்றும், முன்னும் தன் சீட்டுக்குக் கொடுத்ததுபோல், இனியும் திரவியத்தைக் காப்பாற்றி அப்போதப்போது கொடுத்துவரவேண்டுமெனக் கட்டளையிட்டுத் திரும்பினன் செல்வன்

திருவாரூரையடைந்து, புற்றிடங்கொண்ட பிரானுடைய கோயில் சுற்று மதிலும், கீழக்கோபுரமும் கட்டிமுடித்து இன்னும் வேண்டும் திருப்பணிகளும் செய்தமைத்தான்.

இதனையறிந்த அரசன், அவனை வரவழைத்துத் தனது சிம்மாசனத் திருத்தி, அவன் செய்துள்ள தர்மத்தில் ஓர் பாகம் தானம் செய்யச்சொன்னதாயும், அவன் அதற்கு மறுக்க, அதனைப் பொறாத மன்னன் அவனைத் தனது உடைவாளால் விண்ணுக்கிரையாக்கினனென்றும், அச்சிரமூர்ந்து ஸ்ரீ கனகவசந்தத்தியாகேசனது சிம்மாசனத்திலுட்கார்ந்ததென்றும் அந்த அபராதக்ஷபணமாக, மன்னன் சிரமாலையொன்று செய்து சாத்தினனெனவும் ஒரு கதை வழங்கப்பெறுகிறது.

87-வது செய்யுள். சோழர் பெருந்தகை காவிரிப்பூம்பட்டினத்தை இராஜதானியாகக்கொண்டு ஆளும்போது, திருவாரூர் கோயிலின் கீழக்கோபுரம் கட்டி வேண்டிய திருப்பணிகளைச் செய்தானென்பர்.

88-வது செய்யுள். தியாகப்பளளு — திருவாரூரிலே, ஆவணிமாதத்தில் பவித்திரோத்ஸவமென்றொன்று நடப்பதுண்டு. அக்காலத்து, பத்துத்தினங்கட்கும், சாரங்கதரன், திரிபுரன், பாணாசுரன், மன்மதன், மநுநீதிகண்டசோழன், இவர்களது சரிதங்களும், பரவைகல்லியாணம், குறவஞ்சி, பள்ளு இவைகளும் நாடகமாக ஆடப்பெறுவது வழக்கம். தியாகபள்ளு பாடினார் ஞானப்பிரகாச கோத்திரத்து ஞானப்பிரகாசபட்டாரகர். இவரே புராணங்கள் பாடியவர். இவரது காலம் இற்றைக்கு 350 வருடங்கட்கு முன்னென திருமழுவாடிப் புராணத்தி லறியப்படுகிறது. இவரது சந்ததியார்கள் இன்றுமிருக்கின்றனர். அவர்கள் வீட்டிற்கு, பள்ளு ஆடுபவர் வருவது நானறிவேனாயினும், இப்பொழுது சுமார் 20 வருடகாலமாக அது நின்றுபோயிற்று. இதனையரங்கேற்றிவைத்தவர் 'நாலொத் தொண்ணூ' என்னு மூருக்குத் தலைவனான மல்லையபூபன் என்பது,

நற்கவிதைகொண்டு பள்ளின்வர்க்க முரைத்த ஞானப்பிரகாசன்வாழி, நற்புவிவாழி விற்குலவுமாரன்மிகு மாகந்திவாழிவித்தியாபதிமுதலாமெய்ப்புவிவாழி, நற்கமலைநகர்வாழிசாமந்தன்வாழி தானமும் பரிகலமுந் தழைத்துவாழி, விற்குலவுதிண்புயத்தான் மல்லையபூபன்வாழி புவியோரெந்நாளும் வாழிவாழியே.

என்பதனால் நன்குவிளங்கும். இதனிற் கூறப்பட்ட குடும்பங்கள் ஒன்றுமே இல்லையெனச் சொல்லலாம்.

89-வது செய்யுள். கணம்புல்லர்.—இருக்கு வேளூரிலே பிறந்த வேளாளரில் தலைமைவாய்ந்த கணம்புல்லர் என்பார் சிவபெருமானுக்கு விளக்கு எரிக்கும் தொண்டுபூண்டு செய்து வருநாளில், செல்வம் குறைவுபட அதனைவிட்டுச் சிதம்பரம் நண்ணி, அங்கு புல்லரிந்து விற்று, அதனால் திருத்தொண்டு செய்துவருவாராயினர். ஓர்நாள் புல்லும் விற்காது போக, அதனைக்கொண்டே விளக்கெரிக்கையில், வழக்கமாயுள்ள திட்டகாலத்திற்குக் குறைவுபட, அதனைக்கண்டு தலைமயிரினையுமரித்து விளக்கெரித்து முத்தி பெற்றார்.

90-வது செய்யுள். விண்ணன்.—பழையனூர் என்ற பழசை என்னும் ஊரின்கண்ணே பூர்வீக சோழர்களது தண்டத்தலைவனாய், மிக்கச் சிறப்புற்றோங்கிய விண்ணன் என்னும் வேளாளப்பிரபு, பழசைப்பிரானுக்குக் காவிரிநீர்கொண்டு அபிடேகம் பண்ணுதற்பொருட்டுத் தன் பெயரால் விண்ணனாறு என்று ஒன்று வெட்டினன். இவனது சிறப்பை ஆன்றோர்கள் 'முழங்கு கடல் யானை மூரிக்கடற்படை முறித்தார் மன்னர்—வழங்குமிடமெல்லாம் தன்புகழே வைவேல்விண்ணன்' என்றார். பின்னர் உலகெலாம் போற்று மொருதாயின் திருமுலைப்பாலுண்ட திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருக்கொள்ளம்புதூர் (இது கொரடாச்சேரி ரயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கு 4 மைலுள்ளது.) க்ஷேத்திர தரிசினமாக வருகையில் இவ்விண்ணனாறு நிறைந்துபோக, அதனைக் கடக்க ஓடமாத்திரங்கண்டு, ஓடத்தை விடுவாரைக் காணமையான், தான் பரிசனங்களோடு ஓடத்திலேறித் தனது நாவலமே கோலாகப்பதிகம் பாடி, அக்கரையடைந்து சிவபெருமானைத் தரிசனம் செய்தார்.

94-வது செய்யுள். பெருமங்கலமுடையான்.—காடவர்கோன் ஒருவன் தான் வடபுலத்தரசர்களை வென்றதாகச் சொல்லி இறுமாந்து சோழகோனை யலக்ஷியமாக நினைத்தபோது, சோழர் பெருந்தகை புள்ளிருக்குவேளூர்க்கு அணித்தான பெருமங்கலத்ததிபதியான பெருமங்கலமுடையானுக்குச் சொல்ல, அவன் வடநாடுபுக்கு அவனது குலதெய்வமான காளிகாதேவியினது பலத்தால் வடநாட்டரசர்களைக் கொன்று, அவர்களைப் போல் பொய்த்தலை யுருவங்கள் செய்து ஐயசீலனாய் மீண்டனன். அவனை யடுத்திருந்த வித்துவான்கள் பலர் களவழிப்புப் பாடினர். சோழர் பெருந்தகை அப்போது காடவனை யழைத்துக் காண்பிக்க, அவன் அதிசயமடைந்து பணிந்தனன்.

95-வது செய்யுள். புத்தமித்திரன்.—சோழர்குலபதியான வீரசோழனதுகாலத்தே கரைக்காலுக்குப் பக்கதிருக்கும் பொன்பற்றி என்னுமூரிலுள்ள ஜயினப்பள்ளியிலிருந்த புத்தநந்தியெனும் புத்தமித்திரன் ஓர் இலக்கணநூல் புதுவதாகச் செய்ய

அவனது அவையில் அரங்கேற்றிவைத்து அதற்கு அரசனது பெயரும் இட்டு அழைக்கச்செய்தவர்களுஞ் சோழியர்களாம். வரலாறு வீரசோழியப் பதிப்புரையிற் காண்க.

96-வது செய்யுள். **இந்திரன்.**—நூறு யாகங்களைச் செய்தவனே இந்திரன் என்னும் பெயருடையானும், தேவர்கட்கு யஜமானாக, சப்த ரிஷிகளாலும் இந்திராணி என்னும் தேவஸ்திரீயோடு போகிக்க, அவனது ஆணையைக்குறித் தூக்கிச் செல்லும் பாக்கியமுடையானும் வீற்றிருப்பவன். அவன் இவ்வளவு போக போக்கியங்களை யநுபவிக்கக்கூடியவனாயினும், ஜகத்காரணனான பரமேசுரனை யடையும் பெருமை பெறாதவனாகையால், மலை களுவக்கொரு பெருமானை நேரிற்கண்டு அவனது கிருபைக்குப்பாத்திரனானோர், இயக்கனாயினும், அசுரனாயினும், மானிடனாயினும் சரி அவனை வெல்வது அவனருளன்றி நடைபெறுவதில்லை. ஆகையால், ஒருகாலத்து காசிபரது புத்திரனான சூரபன்மன் தேவர்களை வெருட்டி தேவலோகத்தைப் பிடுங்கிக்கொண்டு, தான் அனுபவிக்குங்கால், அவனை வெல்வதற்கு வழி காணாது காழிப்பதியையடைந்து நந்தவனம் வைத்து, அது நீரின்றிக்காய, விக்னேசுரனது அருளால் காவிரி பெருகப்பெற்று, புஷ்பங்களை யெடுத்து சிவபெருமானை வழிபட்டு உய்ந்தனன். அதுவன்றி அக்காழிப்பதி பல்வேறு காரணங்களால், பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிவபுரம், புறவம், சண்பை, காழி என்னும் பன்னிரு திருநாமங்களையுடையது. இதன் விரிவையெல்லாம் காழிப்புராணத்திற் காண்க.

97-வது செய்யுள். **நெம்மேலித்தச்சன்.**—கல்வியிற் பெரியராய கம்பர் சோழநாட்டினின்றும் சோழனால் வெறுக்கப்பட்டபோது, வேற்றுநாடுபோகப் புறப்பட்டவர் செல்வதற்குமுன், நெம்மேலியிலுள்ள தச்சனைப் பாட அவன் ஆயிரக்கல நெல் கொடுக்கப்பெற்று, அதனைத் தன் குடும்பத்தாருக்கு அனுப்பிவிட்டு, தான் வேற்றுநாடு புக்கனன். இத்தச்சன் கருங்கல் வேலை செய்பவன். நெம்மேலி இரண்டுண்டு. ஒன்று ஆட்டூர் நெம்மேலியென மங்கநல்லூர் ஸ்டேஷனுக்குச் சமீபம். மற்றொன்று

திருநெல்லிக்காவுக்குச் சமீபம். முன்னதிற்றான் இவன் வாழ்ந்ததாகத் தெரிகிறது.

98-வது செய்யுள். கன்றாப்பூர் நடுதறி —திருநாட்டியத்தான்குடியிலுள்ள பரமவேளார் என்னும் பெயருடைய வேளாளருக்கு ஒரு பெண்ணிருந்தது அதனைக் கன்றாப்பூரிலுள்ள அரும்புடையான் என்னும் வேளிரது மகனாகிய ஆதிவராகனுக்குக் கலியாணஞ் செய்தனர். அவன் வைஷ்ணவ பக்தி மிக்குடையனாயிருக்க, இப்பெண்ணுக்குச் சிவபக்தி புகட்டப்பட்டிருந்ததனால், இவளது மனப்போக்கு வேறுவிதமாகவிருந்தது. ஆயினும், 'தெய்வந்தொழா அள் கொழுநற் றொழுதெழுவா' ளாகையான், வீடுவிட்டு வெளிச் செல்லாது, கொட்டிலிலுள்ள மாடு கட்டும் நடுதறியையிலிங்கமாகப் பாவித்து, கறக்கும் பாலில் கொஞ்சம் அபிஷேகம் பண்ணிப் பூசை செய்யும் முறையினைக் கையாண்டுவந்தாள். தினந்தோறும் மூலைக்கழியில் பால் சிதறுண்டிருப்பதை உளவாக அறியவெண்ணி, நடக்கும் விதத்தை யறிந்த அவளது கணவன், அவளை இம்சித்ததும், தான் சிவபிரானுக் கியற்றும் பூசையைத் தெரிவித்தனள். அங்ஙனமாயின், சிவபிரானை இத்தறியினிடமே காண்பிப்பாயாகவென்றலும், அங்ஙனமே சுயம்புவாகப் பெருமான் றோன்றி, இவனுக்கும் வீடு கொடுத்தனர். அதுவே சம்பந்தப்பெருமான் முதலியோரால் 'கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே' என்ற பாட்டு உரித்தாயது.

99-வது செய்யுள். அம்பலப்புளி.-ஹைதர், திப்பு சுல்தான் முதலியோருடைய கலக காலத்தில் நடராஜப்பெருமானை எடுத்துக்கொண்டு மேற்கி லோரூரில் போய் பெரியதாயிருந்த ஒரு புளியமரத்தில் வைத்து மூடிவிட்டனர். கலகங்க ளொழிந்த பிறகு, அப்பெருமானை எடுத்துவர முயற்சி நடந்தபோது, அவ்வூர் போய்த் தேடுதலும், வைத்தவிடம் தெரியாது ஒருவராலும் சொல்லுதற் கரிதாயிற்று. சென்றவர்கள் திகைத்து நிற்குங்கால், அங்கு ஏருழவந் உழுதபின் காளைகளை அவிழ்த்து விடுபவர்கள், அம்பலப்புளியடியில் விடுமெனப் பேசினார்கள். அத

னின்றும் அம்பலத்தானிட மறிந்து, நடராஜப்பெருமானைக் கொணர்ந்தன ரென்ப.

**100-வது செய்யுள். அருணாசலேந்திரன்.**—சித்தாய்மூரில் பெரிய மனிதனும், அவ்வூர்க் குடையானுமிருந்த நள்ளாறு வைத்தியலிங்கமகிபனது புத்திரர் அருணாசல வேளாம். இவர் சுத்த குல சைவராய், சிவபக்தியிற் சிறந்தவராய் மேன்மை பெற்று வாழுநாளில், பக்கத்தூரான வேளூரிலுள்ள **ஆத்மநாத தேசிகரை** வேளாளரென்ற பொதுப்பெயருள் அடங்கிய சோழியர், காணியாளர், முதன்மையார், கார்காத்தார் இவர்களுடைய பெருமையைக் கூறுஞ் சதகமொன்று பாட வேண்ட, அவ்வாறே பாடி, வேளாளரது பெருமை என்றென்றும் நிலை நிற்கும்படி அவ்வூர் பொன் வைத்தவர் சந்நிதியில் அரங்கேற்றிப் புலவருக்கு வேண்டிய சன்மானங்களும் செய்தார். இவர் சந்ததியார்கள் சித்தாய்மூரில் இருக்கின்றனர்.

தியாகேசன் றுணை.

உ

சிவமயம்.

# மேற்கோள் நூல்களும், பாடினோரும்.

| நூல். | நூலாசிரியர். | செய்யுளெண். |
|---|---|---|
| இராமாவதாரம் | கம்பர் | 73,74,77 |
| கஞ்சனூர்ப்புராணம் | தெரியவில்லை | 35-38 |
| கச்சியுலா | இரட்டையர் | 61 |
| கந்தப்புராணம் | கச்சியப்பர் | 1,3,51,52,97,98 |
| கபிலரகவல் | கபிலர் | 11 |
| ஞானப்பிரகாசமாலை | ஞானசம்பந்தர் (தருமை) | 24-26 |
| சங்கத்தாரகவல் | சங்க வித்துவான்கள் | 30 |
| சிறுபஞ்சமூலம் | | 78 |
| தக்கயாகப்பரணி | ஒட்டக்கூத்தர் | 66-69 |
| தனிப்பாடல் | அநதாரி | 55,56 |
| ,, | ஔவையார் | 29,44,61,70 |
| ,, | கம்பர் | 8,28,47,53 75,76, 80,89,99,100 |
| ,, | காளமேகப்புலவர் | 49 50 |
| ,, | சத்திமுற்றப்புலவர் | 65 |
| ,, | பரராஜசிங்கன் | 45,46 |
| ,, | பொய்யாமொழியார் | 57-59 |
| திருக்களிற்றுப்படியார் | உய்யவந்ததேவர் | 40 |
| திருவாரூர்ப்பன்மணி மாலை | வைத்தியநாததேசிகர் | 34 |
| திருக்குறள் | திருவள்ளுவர் | 71 |
| திருச்செந்தூர்பிள்ளைத் தமிழ் | பகழிக்கூத்தர் | 2 |
| திருவிளையாடல் | பரஞ்சோதிமுனிவர் | 4,5 |
| தியாகராஜப்பள்ளு | ஞானப்பிரகாசர் | 82,84 |

| | | |
|---|---|---|
| தேவாரம் | சுந்தரர் | 31 |
| ,, | திருஞானசம்பந்தர் | 62,63,87 |
| நாலாயிரக்கோவை | ஒட்டக்கூத்தர் | 84 |
| பழைய கவிகள் | தெரியவில்லை | 41-43,48,54 72, 79,81,82,84,91, 92,93,95,96,101 |
| பழையமாயூரபுராணம் | தெரியவில்லை | 7 |
| பெரிய புராணம் | சேக்கிழார் சுவாமிகள் | 6,12,23,32,33,39 |

## சிறப்புப்பாயிரம்.

கொண்டலங் கரத்தில் வேளாண் குலத்தில்வந் துதித்தகோமான்
கண்டலம் பொழில்சூழ் சித்தைக் கனவருணாசலேந்திரன்
அண்டலர் பரவுங் காளை யாத்மனா தன்செய்சோழ
மண்டல சதகங் கொண்டு வண்புகழ் நிறுத்தினானே.

உ

சிவமயம்.

# சோழமண்டல சதகம்.

## காப்பு.

திருவளர் வேளாண் செல்வச் செழுங்குடி யிருந்துநாளும்
வருவளந் தழைத்த சோழ மண்டல சதகம் பாடத்
தருகர மைந்து மைந்தந் தாழ்பத மூன்று மூன்று
முருவளர் முக்கண் ணல்வா யோங்கலை யுன்னி வாழ்வாம்.(க)

## அவையடக்கம்.

ஓருரைப் பாடுதலவ் ஆருடைய கோமா
னொருவனைப் பாடுதல்புல வோர்க்குரிமையது வல்லாற்
பாரூரும் பலவாயவ் ஆருடைய பலரும்
பல்கியவோர் மண்டலத்தைப் பாடுவது மெளிதோ
நேரூரும் பழையனவா யிருந்தசெய்யுள் வழக்கு
நிகழுலக வழக்கினிலை நின்றதுறை வழியே
சீரூருஞ் சோழமண்டல சதகந் தனைநான்
செப்புகின்றேன் விழுப்பொருளாய்ச் செய்வர்பெரியோரே.உ

## நூல்.

பொன்பூத் தமலர்க் கொன்றைமுடிப் பொழிமும் மதத்துப் பொலிமருப்பு, மின்பூத் தகரா சலமுகத்து மேலோன் சோழவிநாயகனே, தென்பூத் தருள்கா விரிபெருகச் செய்து நாளுஞ் செழிப்பேற, வன்பூத் தழைந்து வளர்வதன்றே வளஞ்சேர் சோழமண்டலமே. (க)

## விநாயக புராணம்.

செப்பரிய பகர்தரு பேரொளியே மேனி
 திகழ்தருமும் மதமிச்சை முதன்மூன் றாகி
யொப்பரிய நிட்களமாய் விளங்குஞ் சோதி
 யுகந்துலகந் தொழப்பரிவாச் சகள மேவித்
தப்பரிய வார்சித்தி முத்தி யின்பந்
 தருங்கருணை யாலுருவம் பதினா றுறா
ரப்படியே யெண்ணூரண்டைக் கடைந்த பேரு
 மத்திறனு முறுபயனு மறையக் கேண்மின். 1.

வெள்ளி வரையி லோர்சிகரம் விளங்குந் திருவே ரகமலையாய்த்
தெள்ளு தமிழ்க்கீ ரனும்புகழச் சிறந்தா யிடையே சிவன்றெளிய
உள்ள படியே மெய்ப்பொருளை யுணர்த்துங் குரவ னுயர்சாமி
வள்ளன் மகிழுந் திருவிருப்பு வளஞ்சேர் சோழ மண்டலமே 2.

## திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ்.

நீர்கொண்ட வாவிதனில் என்ற செங்கீரைப்பாட்டு........2.

## கந்த புராணம். (அயனைச் சிறைநீக்கு படலம்-39.)

என்றலு நகைத்து மைந்த வெமக்கருண் மறையி னென்னுத்
தன்றிருச் செவியை நல்கச் சண்முகன் குடிலை யென்னு
மொன்றொரு பதத்தி னுண்மை யுரைத்தன னுரைத்த லோடு
நன்றருள் புரிந்தான்ப ஞான நாய கமா மண்ணல். 3.

எல்லா வுயிர்க்குஞ் சிவகலைக்கு மெய்து மொடுக்கஞ் சிதம்பரமே
யல்லா தில்லை யத்தலமே யவனி தாங்கு மருட்புருடன்
சொல்லா ரிதய கமலமெனத் தோன்ற விருந்த தொன்மையினல்
வல்லார் பணியத் தக்கதன்றோ வளஞ்சேர் சோழ மண்டலமே.(௫)

## பரஞ்சோதி திருவிளையாடல்-6.

திருவள ராரூர் மூலந் திருவானைக் காவே நாபி
மருவளர் பொழில்சூ ழண்ணா மலைமணி பூர நீவி
ரிருவருங் கண்ட மன்ற மிதயமாந் திருக்கா ளத்தி
பொருவருங் கண்ட மாகும் புருவமத் தியமாங் காசி 4.

'காவே குய்ய' மென்பர் மதுரை இ இராமசுவாமிப் பிள்ளை.

தக்கவி ராட்புருடன் மனத்தல மெனுமோர் தலமுளதத் தலத்தின்மீதே, முக்கணா ரடிபரந்த மூர்த்தியி லாயிரத் திலொ ருமூர்த்தி தானே, யிக்கயிலை யிடத்துறைவ தென்னி லதன்பெரு மை பெம்யா லியம்பலாமோ, அக்கனக சபைகண்டா ரரியயன் கா ணாதமுத்தி யடைவர் தாமே. 5.

௯ அந்நாட் டமிழ்க்குத் தூதுசென்ற வாதிக் கடவு ளணியாரூர், பொன்னாட் டினுக்கு மதிகமென்று போந்தா ரிதன்மேற் புகழு முண்டோ, எந்நாட் டினுக்கு மதிகமென்று மிதற்கா ருளரேற் றமென்று, மன்னாட் டியசீர் பெற்றதன்றோ வளஞ்சேர் சோழ மண்டலமே. (௯)

## பெரிய புராணம்.

ஐயரங் கணைந்த போதி லகிலலோ கத்துள் ளாரு
மெய்தியஞ் சலித்துசூழ வெதிர்கொண்ட பரவை யாரு
மெய்யுறு நடுக்கத் தோடு மிக்கெழு மகிழ்ச்சி பொங்கச்
செய்யதா ளிணைமுன் சேர விரவினர் சென்று வாழ்ந்தார். 6.

கரங்க ளாபிச் செழுங்கமலங் காட்ட வடிவங் கார்காட்ட
வரங்க நகர்வாய் நம்பெருமா னமர்ந்தா ரென்ப தறியாரோ
தரங்க வேலை யிலங்கையர்கோன் றனக்கும் புவியோர் தங்கட்கும்
வரங்க டரும்வைகுந்தமன்றோ வளஞ்சேர் சோழ மண்டலமே.(௰)

பூமா திருக்கும் பசுந்துளவப் புயமா லுந்தி பூத்தமறைக்
கோமான்றிருத்தாண்மலருதித்தகுணத்தோர்சற்சூத்திர குலத்தோ
ராமா றுலகிற் பல்லுயிர்க்கு மனைய தொழுமீ தியினளிக்கும்
மாயா துறைசோ ழியர்வாழ்வு வளஞ்சேர் சோழ மண்டலமே.(௧௧)

நீதி தழைத்த மனுவரி னெடிய சோழ னிறைந்தகொழு
மீதி தழைத்த மனைவாழ்க்கை வேளாண் குடியார் சோழியரே
பூதி தழைத்த பலநதியிற் பொன்னி நதியே பூமியிற்பூ
மாது தழைத்த மண்டலத்தின் வளஞ்சேர் சோழ மண்டலமே. (எ)

எந்த நதியைப் புகழ்ந்தாலு மிதுகா வேரிக் கிணையென்பார்
எந்த வரசைப் புகழ்ந்தாலு மிவனே சோழற் கிணையென்பார்
எந்தநாட்டைப் புகழ்ந்தாலு மிதுவே சோணா டெனவியம்ப
வந்த விசிட்ட மோங்கியது வளஞ்சேர் சோழ மண்டலமே (அ)

அங்கார் பொழிய வருஞ்செழுநீ ரநந்த கோடி நதிகளுக்கு
ளிங்கார் நதிக ளோரேழு மிசைக்கி லதிக மேழினுக்குங்
கங்கா நதியே யதிகமதன் கன்மந் தொலைக்குங் காவிரியே
மங்கா வதிக மெனுநாடு வளஞ்சேர் சோழ மண்டலமே. (கூ)

## பழைய மாயூரப்புராணம்.

அளிக்கு மைப்பசிசா விரிநதி படிந்தோ ரரும்படி யேறவுமறு லின், வெளிப்படு கரும வினையெலாங் கரிந்து மீண்டுறுந் தொழி லற விளையுந், தளக்க ழுந்தமரிற் பொருசிலை நிரம்ப சுரநதி யருள்சர சுவதியும், விளக்கிய யமுனைத் திருநதி யினைய காவிரிப் பெருமையை வியக்கும். 7.

செல்லுங் குணபாற் றிரைவேலை தென்பாற் செழித்த வெள் ளாறு, வெல்லுங் கோட்டைக் கரைவிளங்கு மேல்பால் வடபால் வெள்ளாறே, யெல்லை யொருநான் கிறுக்காத மிருபா னைந்து மிடப்பெரிதா, மல்லல் வாழ்வு தழைத்தோங்கும் வளஞ்சேர் சோழ மண்டலமே. (௧௦)

## கம்பர் வாக்கு.

கடல்கிழக்குத் தெற்குக் கரைபுரள் வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணாட்டு வெள்ளா றிருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல். 8

தொண்டை நாட்டி லாறைந்து தொடர்ந்த பாண்டி பதினான்கு
கொண்ட லீழந் தனிலிரண்டு கொங்கி னேழு துளுவொன்றே
தண்டு பூராயின் பசுந்தொடையார் தவள விடையார் தலம்பலவும்
மண்டு பாதி நெடுங்கோயில் மருவுஞ் சோழ மண்டலமே. (சக,

ஈரொட்டி ரண்டு மலை நாட்டி லொன்று கொங்கேழு வையை
வாரொட் டீரேழு மகதை யைந்து வடக் கைகதிபூஞ் [தொன்று
சோணாட் டொரு நூற்றுத் தொண்ணூ றென்றோர்வர் துளுவத்
காணாட்டு தொண்டை யிரண்டோ டாறைந்து நன்னகரே. 9

பொறையார் தில்லை வாழ்முனிவர் புகலிப் பெருமான் சண்டேசர்
நிறையார் கலையார் பூசலையார் நீல நக்க னிகழ்ச்சோமன்
முறையார் ஞானத் திருவகவல் மொழிந்த கபிலர் முதலாய
மறையோ ரவரு மிமையோராய் வாழுஞ் சோழ மண்டலமே.

முன்னூல்.

மாமறையோர் பன்னிருவர் சிவமறையோர் நால்வர்
மருத்துவரி லொருவர்மன் னவர்களிலோ ரறுவர்
கோமுறைமைக் குறுநிலமன் னரிலைவர் வணிகர்
குலத்தைவர் வேளாளர் குலவர்பதின் மூவர்
தாமுறுகுய வர்வேடர் பாணர்செக்கார் சடையர்
சாணார்வண் ணார்பரவர் சாலியரி லொருவர்
ஆமருவு மிடையிரண்டோ டறுவர்மட பதிமா
ராகவறு பத்துமூன் றுநியமா தவரே. 10

நான்முகன் படைத்த நானுவகை—கபிலரகவல். 11

சேணார் பரியே றும்பெரியோர் தெய்வப் படிமப் பதம்வைத்தோர்
கோணா நிலைமை மாணிக்கக் கூத்தர் காளைக் குருநாயர்

* மாணிக்கவாசக சுவாமிகளைத் தடுத் தாட்கொண்டபோது, திருவடி தீக்ஷையின்பொருட்டு, நீநுவிடமருது சென்றுய் இடைமருது க்ஷேத்திரத்திற்கு வரக் கட்டளையிட அங்கு வந்தகாலை மருதவாணர் திருவடிதீக்ஷை செய்திட்டாரென்பர். இதனையே நமது மாணிக்கவாசகப்பெருமானும் 'இடைமருதுதனி லீண்ட விருந்து படிமப் பாதம் வைத்த வப்பரிசும்' என்று கூறியதைச் சுட்டினன்றனர். பெருமானுடன் உடன்வாத பெரியோர்கள் 'தெய்

ரூர் சைவ ராயருள்ளார் பொன்னங் கிரியிற் புரிமடமு
மாணுக் கருஞ்சூழ் திருவிருப்பு வளஞ்சேர் சோழமண்டலமே.(கங

எந்தக் குலத்திற் பிறந்தோரு மிரப்போர் கரத்தி லீவதல்லா
லந்தக் கடவுண் யானைந்து மங்கை யேற்ப வளித்ததுண்டோ
சிந்தைக் கினிய சோழியரே சிவன்பா லளித்த சீர்த்தியினால்
வந்தித் திடும்பேர் பெறுந்தேசம் வளஞ்சேர் சோழ மண்டலமே.
(கச)

அஞ்சா தடிகள் பஞ்சவடிக் காமென் றுரைப்ப வடிவணங்கி
நஞ்சார் விழிப்பெண் புதுமணத்தி னன்றேண் முடித்த நறுங்கூந்த
னெஞ்சார் மகிழ்ச்சி யுடனரிந்து நீட்டி யுலகி னீண்டகொடை [ல்
மஞ்சார் மானக் கஞ்சாறன் வாழ்வாஞ் சோழ மண்டலமே. (கரு)

பெரியபுராணம், (மானக்கஞ்சாறநாயனார் புராணம்-30, 31.)

அருள்செய்த மொழிகேளா வடற்சுரிகை தனையுருவி
பொருள்செய்தா மெனப்பெற்றே னெனக்கொண்டு பூங்கொடித
இருள்செய்த கருங்கூந்த லடியிலரிந் தெதிர்நின்ற [ன்
மருள்செய்த பிறப்பறுப்பார் மலர்க்கரத்தி னிடைநீட்ட. 12.

வாங்குவார் போனின்ற மறைப்பொருளா மவர்மறைந்து
பாங்கின் மலை வல்லியுடன் பழையமழை விடையேறி
யோங்கியவிண் மிசைவந்தா ரொளிவிசும்பு நிலநெருங்கத்
தூங்கியபொன் மலர்மாரி தொழும்பர்தொழு தெதிர்விழுந்தார் 13

---

வப்படி மேற் பாதம் வைத்த பரியேறும் பிரகாசர், தெய்வ
... ....பரியேறும் சிவ தேவர், தெய்வ..............சிவஞானர்
என மூவராவா'. இவர்களை வெகுநாள்வரை மருதவாணரது கோ
யிற்காரியங்களை ஐந்து பிரிவாகப் பிரிந்து நிர்வகித்துவந்ததாகவும்,
அதனால், ஐந்து கோத்தார் என்னும் பெயருடையராய் திருவிட
மருதூரிலிருக்க, இவர்களது விசாரணையிலிப்பொழுதும் தெற்குவீ
தியில் படியப்பாதமும், பெருயானுமிருக்கின்றன. இவர்களுக்கு
மருதவாண ஆலயத்திலும் சில மரியாதைகளேற்பட்டிருக்கின்ற
ன. குருராயரும் இவ்வூரிலேயேயிருந்து வமிசமற்றதாகக்கேள்வி

இளையா னிளையான் குடிமாற னிரவிற் றெளித்த முளைவாரி
முளையா வமுதி னமுதளிப்ப முக்கட் பெருமான் பசிதீர்ந்தே
இளையார் விடைமேற் றோன்றுதலுங் கேடி லாத பதஞ்சேர்ந்தோன்
வளையா மகிமை படைத்ததன்றோ வளஞ்சேர் சோழ மண்டலமே.
(கசு)

பெரிய புராணம். (இளையான்குடிமாறர் புராணம்-24.)

அழுந்திய விடரும் நீங்கி யடியனே னுய்ய வென்பா
லெழுந்தருள் பெரியோ யீண்ட வமுதுசெய் தருள்க வென்று
தொழுப்பணு ருரைத்த போதிற் சோதியா யெழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாருந் தொண்டருந் திகைத்து நின்றார் 14.

கூலிக் கறுத்த நெல்லரிசி குழர்தைக் கீரை மாவடுவுஞ்
சாலக் கமரி னிடைக்கவிழ்த்த தாயு ஞாட்டி தனையரிவாண்
மேலிட் டறுப்ப மாவடுவின் விடேல் விடேலென் றொலிமுழங்க
மாலுக் கரிய பதஞ்சேர்ந்தோன் வளஞ்சேர் சோழ மண்டலமே.

அரிவாட்டாயநாயனார் புராணம்-18.

மாசறு சிந்தை யன்பர் கழுத்தரி யரிவாட் பற்று
மாசில் வண்கையை மாற்ற வம்பலத் தாடுமையர்
வீசிய செய்ய கையு மாவடு விடேல் விடேலென்
னோசையுங் கமரி னின்று மொக்கவே யெழுந்த வன்றே. 15.

ஆய நீதிச் சுந்தரனா ரடுத்து வரலு மாங்கிறந்த
தூய வுயிரும் படைத்தெழுந்து சூலை தவிர்ந்து தோழமைசே
ரேயர் கோனங் கலிக்காம னில்வாழ்க் கையி னீ டெழினாடு
வாயி னீடு மணிமாட வளஞ்சேர் சோழ மண்டலமே. (கஎ)

ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம்-405, 406.

கோளுறு மனத்த ராகிக் குற்றுடை வாளைப் பற்ற
வாளுடைத் தம்பி ரானா ரருளினா லவரு முய்ந்து
கேளிரே யாகிக் கெட்டே னெனவிரைந் தெழுந்து கையில்
வாளினைப் பிடித்துக் கொள்ள வன்றொண்டர் வணங்கி வீழ்ந்தார்

மற்றவர் வணங்கி வீழ வாளினை மாற்றி யேயர்
சொற்றவ னாரு நம்பி குரைகழல் பணிந்து வீழ்ந்தா
ரற்றைநா ணிகழ்ந்த விந்த வதிசயங் கண்டு வானோர்
பொற்றட மலரின் மாரி பொழிந்தனர் புவனம் போற்ற. 17.

துதிக்கும் பரமன் பொருள்கவர்ந்த சுற்ற மனைத்துஞ் சுடர்வாளாற்
கதிக்கும் படிமே லறக்கண்டார் கயிலைக் கிரியுங் காணிகொண்டார்
குதிக்கும் புதுநீர் நாட்டிபதான் குடிவே ளாளர் கோட்புலியா
மதிக்கு மரபோர் பெறுங்காணி வளஞ்சேர் சோழ மண்டலமே.

## கோட்புலிநாயனார் புராணம்-10,

பின்னங்குப் பிழைத்ததொரு பிள்ளையைத்தம் பெயரோனவ்
வன்னநதுப் திலதுருநுக் கொருபுதல்வ னருளுமென
விச்சொல்லுங் டாண்முலைப் பா லுண்டதெனு வெடுத்தெறிந்து
மின்னல்ல வடிவாளா லிருதுணியாய் விழவேற்றார். 18.

உரைசெய் கோடி கிர்த்தியிறு மொன்றே யடையு முயர்சீர்த்தி
தரைசெய் நீதி கோட்புலியார் தந்த மகனே தன்மகவாய்ப்
பரசு மூரன் றேவாரப் பதிகந் தோறும் பதித்தபுகழ்
வரிசை யுடைய சிங்கடியார் வளஞ்சேர் சோழ மண்டலமே. (௨௦)

## ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம்-42.

சிறப்பித் தருளுந் திருக்கடைக்காப் பதனி லிடைச்சிங்கடியாரைப்
பிறப்பித் தெடுத்த பிதாவாகத் தம்மை நினைந்த பெற்றியினுன்
மறப்பில் வகைச்சிங் கடியப்ப னென்றே தம்மை வைத்தருளி
சிறப்பொற் புடைய விசைபாடி நிறைந்த வருள்பெற் றிறைஞ்சு
[வார் 19.

வீடார் தொடைக்குந் படைக்குமிவன் மேலோ னென்ன வேந்தருக்குத், தேடார் வலியா ரெண்ணுரைச் செகுத்துப் படைத்த செழும்பொனெலா, நீடா தளித்து முனையடுவார் நிரேமர்த்து நெறிசேர்ந்தார், வாடா திருக்கு மரசிருப்பு வளஞ்சேர் சோழ மண்டலமே. (௨௧)

## முனையடுவார்நாயனார் புராணம்-5.

மறமிக் கிலைமை பன்னொருவன் வைய மிகழச் செய்துவழி
யுற்ற வன்பின் செந்நெறியா லுமையாள் கணவன் றிருவருளாற்
பெற்ற சிவலோ கத்தமர்ந்த பிரியா வுரிமை மருவினோர்
முற்ற வுழந்த முனையடுவா ரென்னு நாம முன்னுடையார். (௨0)

தஞ்சைப் பதிவாழ் செருத்துணையார் தடந்தேர் வளவன் றன்மனையாள், கொஞ்சத் தொருத வந்தெடுப்பக் குறைத்தார் நாசிக் குணமன்றே, மிஞ்சப் படைவா ளாண்மையினும் வேளாண் மையினு மேம்படு, மஞ்சிற் குலவு மிளஞ்சோலை வளஞ்சேர் சோழ மண்டலமே. (௨௨

## செருத்துணைநாயனார் புராணம்-5.

கடிது முற்றி மற்றவடன் கருமென் கூந்தல் பிடித்தீர்த்துப்
படியில் வீழ்த்தி மணிமூக்கைப் பற்றிப் பரமர் செய்யசடை
முடியி லேறுந் திருப்பூ மண்டபத்து மலர்மோந் திடமூக்கைத்
தடிவனென்று கருவியினு லரிந்தார் தலைமைத் தனித்தொண்டர். 21.

பரிஞ்ச வேடந் திருநீறு தரித்தோர்ப் புகழ்ந்து பணியாமற்
றெரிஞ்ச வஞ்சை யடியாரைச் சிறி யிகழ்ந்த செங்காலை
யரிஞ்ச வீர விரதமுற்று மடலார் சத்தி யாரமர்ந்த
வரிஞ்சி யூருந் தழைத்துளது வளஞ்சேர் சோழ மண்டலமே.(௨௩)

## சத்திநாயனார் புராணம்-4, 3.

திங்கு சொற்ற திருவிலர் நாவினை
வாங்க வாங்குதண் டாயத்தி னல்வலி
தாங்கயிற் கத்தி யாலரிந் தன்புட
னோங்கு சீர்திருத் தொண்டி னுயர்ந்தனர். 22.

அத்த ராகிய வங்கண ரன்பரை
யித்தலத் திலிகழ்ந் தியம்பும் புறை
வைத்த நாவை.வரிந்தரிச் சத்தியார்
சத்தி யாரெனு நாமந் தரித்துளார். 23.

பகர்ந்த கமலைத் தியாகேசர் பஞ்சாக் கரத்தின் பயனறிந்த
இகந்த குருவா யிரப்பிரபந்தஞ் செய்த குரவன் றிருவாரூ
ருகந்த ஞானப் பிரகாச னுன்னங் குருவி னுயர்குலத்தோர்
மகிழ்ந்த வாழ்வு பன்னுறும் வளஞ்சேர் சோழ மண்டலமே. (உ௪)

பண்டாரக்கலித்துறையென்னு ஞானப்பிரகாசமாலை-5, 19, 13:

ஆய்வார் பசுபதி பாசத்தி னுண்மையை யாய்ந்தறிந்து
சாய்வார் பிரபஞ்ச வாழ்க்கை யெல்லாங் கல்விகேள்வியல்லு
லோய்வார் சிவானந்த வாரியுள்ளே யொன்றி யிணைமெறத்
தோய்வார் கமலையுண் ஞானப் பிரகாசன் றெப்தொண்டர்களே
24.

கவுரிப மார்க்கங் கலந்தளிததேன் கடலா லயத்தோ
னிவுளி நரிததிர ளாக்கிவைத்தோ னிசைப்பா ணருக்கா
பவுளி யுரைத்தருள் ஞானப்பிரகா சன்பயின் மடத்தின்
கெவுளி யுரைத்திடும் பதிபசுபா சத்தின் கேள்விகளே. 25.

ஆரார் பகைக்கினு மாரார் நகைக்கினு மாவதுண்டோ
சீரார் கமலையுண் ஞானப் பிரகாசனென் சிந்தையுள்ளே
பேரா திருந்து சிவானு பவந்தரப் பெற்றதினால்
வாராது சென்மமும் போகாது பேரின்ப வாரியுமே. 26.

பள்ள மலியா கலிபுலத்திற் பரம குருவாய்ப் பணிந்தோருக்
குள்ள படியீ தெனவுணர்த்தி புலவா முத்தி யுறக்காட்டிக்
கள்ள மதவல் லிருள்கடிந்து காணுங் காழிக் கண்ணுடைய
வள்ளல் கருணை செயுஞ்சூழல் வளஞ்சேர் சோழ மண்டலமே.
(உ௫)

ஒருவா மழுமா னிடமொருவி யொருமா னிடமெய் யுருத்தாங்கு
மருளா கரணம் பலவாணற் கன்பு பெறுமா வடுதுறைசூழ்
தருவார் கொடைசே ரிராமலிங்க சாமி தழைத்த சந்நிதியான்
மருவார் பணிபூங் கயிலாயம் வளஞ்சேர் சோழ மண்டலமே.
(உ௬)

## தனிக்கவி.

பொற்பொதுவி னடங்காட்டி யிருவரை யாண்டருளு மொரு நிருபதி தன்பின்னுஞ், சிறுபெருந் தொகைகாட்டி நால்வருய்ய வாலநிழற் கீழ்ச்சேர்ந்தார் பின்னு, நற்புவனத் துயிரையெல்லாந் திருநோக்குப் பரிசமொழி நலத்தாளுண்ட, வற்புதனம் பலவாணர் சற்குருவாய்த் துறைசையில்வாழ் தருளினரே. 27.

உடையார் குலத்திற் பலவகையு முயர்வேளாளர் பலவகையுங் குடையார் குலத்திற் பலவகையுங் கோனார் குலத்திற் பல்வகையு மடையா வாயி லுடையாரா யனகே சனைப்போ லருங்கடலின் மடையார் செல்வம் பெரிதா வளஞ்சேர் சோழ மண்டலமே. (உஎ

### சம்பர் தனிப்பாடல்.

மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே— நாட்டில்
அடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லும்
உடையான் சரராம னூர். 28.

வேழ முடைத்து மலைநாடு மிகுமுத் துடைத்துத் தென்னாடு, தாழ்வில் தொண்டை வளநாடு சான்றோ ருடைத்தென் றுரைத்த தல்லார், சோழன்புவி சோறுடைத் தென்னுந் துதியா லெவர்க்கு முயிர்கொடுத்து, வாழும் பெருமைத் திருநாடு வளஞ்சேர் சோழ மண்டலமே. (உஅ)

### ஔவை தனிப்பாடல்—வெண்பா.

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
றென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து. 29.

கண்டன் கரிகா லனுக்குமுடி கவித்துக் காணி படைத்தோ ருர், தொண்டை நாட்டி னற்குடியாய்ச் சூழ வமைந்த தூயோரும், பண்டை மநுநீதி யைத்தொகுத்துப் பயின்று வருஞ்சோ ழியரெ னவே, மண்டு கீர்த்தி படைத்தோரும் வளஞ்சேர் சோழ மண்டலமே. (உகூ)

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY 23515
BESANT NAGAR MADRAS-90

பயந்த மழைநீர் பெய்யாது பன்னீ ராண்டு பஞ்சமெல்லாம்
வியாத சங்கத் தமிழோர்க்கு வெவ்வே றுதவி விடுந்தவுடன்
நயந்த காலை யெனுந்தமிழை நாட்டுந் துரையா லஞ்சேரி.
மயிந்த னுயர்பாண் டியன்புகழு வந்தோன் சோழ மண்டலமே.(௩௦)

## சங்கத்தாரகவல்.

கார்லை ஞாயிறு கடுங்கதிர் பரப்பி
வேலையுங் குளனும் வெடிபடச் சுவறி
விழித்த விழியெலாம் வேற்றுவிழி யாகித்
தந்தையர் மக்கள் முகம்பா ராமே
வெந்த சாதம் வெவ்வே றருந்திக்
குணமொரு நான்குங் கொடுத்தற வாண்ட
கணவனை மகளிர் கண்பா ராமல்
அறவுரை யின்றி மறவுரை பயின்று
உறைமறந் தொழுகு மூழிக் காலத்தில்
தாயில் லவர்க்குத் தாயே யாகவுந்
தந்தையில் லவர்க்குத் தந்தையே யாகவு
மிந்த மாநிலத் திடுக்கண் டீர
வந்து தோன்றினன் மாநிதிக் கிழவன்
நீலஞ் சேர்ந்த நெடுமால் போல்பவன்
ஆலஞ் சேரி மயிந்த னென்போன்
*ஊருண் சேணி நீரொப் போனே
தன்குறை சொல்லான் பிறர்வசை யுரையான்
மறந்தும் பொய்யான் வாய்மையுங் குன்றான்
யிறந்தும் போகா தெங்களைக் காத்தான்
வருந்த வேண்டா வழுதி
யிருந்தன மிருந்தன மிடர்கடீர்ந் தனமே. 30.

---

*½-ம், 14,16-வது அடியும் சில பிரதிகளில்லை. 6. குணமுள தனையும். 9. உறைமறந் தொழிந்த.

*தருப்போர் வளவன் பெருந்தாகந் தணிப்பா னுழவன் றன்னகத்திற், கருப்பார் சாறு தெண்டியினிற் கவிழுந் தாரைக் காட்டுதலா, விரும்பார் புகழ்சீ கருப்புடையா னென்று சோழன் முடியசைப்ப, வரும்பேர் பெறுமுத் தமர்வாழ்வும் வளஞ்சேர் சோழமண்டலமே. (௯௧)

*அண்டமேரு வென்மலைக ளனந்த கோடி பொன்மலைபோற்
குண்டையூர னாரனுக்குக் கொடுத்த பெருமை குறியாரோ
தொண்டர் நீள நினைந்தவென்று திகிக்கும் கீர்த்திச் சோழியராய்
மண்டி வாழுங் குடியிருப்பு வளஞ்சேர் சோழமண்டலமே. (௯௨)

## சுந்தரமூர்த்திசுவாமிகள் ஏழாந் திருமுறை.

### (திருக்கோளிலிப்பதிகம்.)

நீள நினைந் தடியே னுமைநித்த லுங்கை தொழுவேன்
வாளன கண் மடவா ளவள் வாடி வருந்தாமே
கோளிலி யெம் பெருமான் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றே
னாளிலை யெம் பெருமா னவை யட்டித் தரப்பணியே. 31.

## ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம்-19.

விண்ணினை யளக்கு நெல்லின் வெற்பினை நம்பி நோக்கி
யண்ணலைத் தொழுது போற்றி யதிசய மிகவு மெய்தி
யெண்ணில் சீர்ப்பரவையில்லத் திந்நெலை யெடுக்க வாளும்
தண்ணில வணிந்தார் தாமே தரிலன்றி யொண்ணா தென்று. 32.

*வீடு தோறுந் தெருக்கடோறும் விரிநீ ரெல்லை மேடைதொறு
நீடு பூத கணஞ்சொரிந்த நெற்போ ரெல்லா நேர்ந்தவரே
கூடி வாரு மெனப்பரவை கூற முழங்குங் கொடைமுரச
மாடு லாவு நிலைமையது வளஞ்சேர் சோழ மண்டலமே. (௯௩)

## ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம்-28.

வன்றொண்டர் தமக்களித்த நெற்கண்டு மகிழ்சிறப்பா
யின்றுங்கண் மனையெல்லை யுட்படுநெற் குன்றெல்லாம்
பொன்றங்கு மாளிகையிற் புகப்பெய்து கொள்கவென
வென்றிமுர சறைவித்தார் மிக்கபுகழ்ப் பரவையார் 33.

## திருவாரூர்ப் பன்மணிமாலை.

தென்மலைத் தமிழாரூர்த் தியாக னென்பதுதான் வீறு
பொன்மலை போலுங்கோயிற் பூவைய ரெண்ணிலாருண்
மின்மலைமருங்கு லானோர் மெல்லியல் வீதிதோறு
நென்மலை கொள்வீ ரென்ன நிறைமூர சறைவித்தாளே. 34.

*பாதிச் சுரைக்காய் கறிக்கொரு பாதிச் சுரைக்காய் விரைக்கு
வாதிக் கடவுள் பசிதீர வளித்தா ளாங்கே யறவரிந்தக் [பெண
காதற் கணவன் மனைவியொடுங் கயிலை காணுங் கதைசூத
னுதி புகலுஞ் சுரைக்குடையான் மரபோர் சோழ மண்டலமே.
(ரு.ச)

## கஞ்சனூர்ப்புராணம்.

சீர்க்குடி தன்னிற்சுரைக் குடையானென்று தேசமெங்கும்
பேர்க்கொளும் வாழ்வுடை வேளாண்குலத் தொருபெண்
பாற்கறி பாதிவிதைக் கொருபாதி பகுந்தளித்த
நீர்ச்சுரைக் காயுதவுங் கஞ்சனூர்வரு நிமலனுக்கே. 35.

இந்த விதைமுளை யாதே யினிமே லிப்படித் தருமம்
நொந்திடச் செய்திடு நீயு நோவ வுன்றன் மணிக்கட்டு
சிந்திட நானறுப் பேனெனத் திரிசூரிக் கத்தி கொண்டு
வந்த றுக்கத் துணிந்தா ராய்மறித் தாலு மறிபடார் 36.

காட்டி வைத்த காரியத்தைத் தாழ்ச்சி செய்தா யேயெறிந்து
போட்ட வளே தருமத்தின் பொழிலின் வழியே கெடுத்தாயே
நீட்டு மிந்தக் கொடிவிதைதா னீணி லத்திற் கிடையாதே
கூட்டி விளைவாக் குசுரைக்கொடி விதைக்கே யென்செய் வேனுள்.
37.

காய்கறி மாத்திர மல்ல கடைந்த சுரைக்கீ ரையுடன்
வாய்க வரும்சுரைக் கொழுந்தும் வன்பா குமிளந் தண்டுடன்
வாய்க்கித மாயிருக் கரால் வலைக்கறி யாய்ச்சமைத் தன்பாய்
தாய்க்களை யகலி யாண சவுந்தரி யேதர வேண்டும். 38.

*கன்னி பாகர் வீழியினிற் கனிவா யப்பர் சம்பந்தர்க்
கன்ன தானஞ் செயவேண்டி யளித்த படிக்கா சதற்குவிலை
செந்நெல் மாரி கொடுப்பதற்காச் செழுநீ ரிறைத்துச் செய்துநல
மன்னி வாழுங் குடியிருப்பு வளஞ்சேர் சோழ மண்டலமே. (௬௫)

## திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்-566.

காதலொடுந் தொழுதெழுந்து கண்டுநின்று கைகுவித்துப் பெருமகிழ்ச்சி கலந்துபொங்க, நாதர்விரும் படியார்க ளனைவோரு நல்விருந்தா யுண்பதற்கு வருகவென்று, நிதிபறை நிகழ்வித்துச் சென்றதொண்டர் *திருவமுது கறிநெய்பால் தயிரென்றின்ன, வேதமுறை யினிதுண்ண வூட்டியங்க ணிருதிறத்துப் பெருந்தவரு மிருந்தநாளில். 39.

*ஆய்ந்த முறையி னவிழ்ந்ததுணி யவிழ்ந்தவமுதையவிழ்த்துமனஞ்
சார்ந்து செலுத்தி விடையேறுஞ் சடையா னுரிமைத் திறம்பூண்ட
சேந்த னிடத்திற் குலோத்துங்கன் சென்று பணிந்த தெய்வீகம்
வாய்ந்த மகிமை யோங்கியது வளஞ்சேர் சோழ மண்டலமே. (௬௬)

## திருக்களிற்றுப்படியார்-53.

அவிழ்ந்த துணியி லவிழ்ந்த வவிழை
யவிழ்ந்த மனத்தா லவிழ்க்க— அவிழ்ந்தசடை
வேந்தனுற் கின்னமுத யாயிற்றே மெய்யன்பிற்
சேந்தனுர் செய்த செயல். 40.

*முட்டி லாத கடாக்களொடு முதிருங் கவளக் கடாக்களிறுங்
கொட்டி லூடு கட்டிவிடுங் கோமா னதையுங் கொடைகொடுத்
பட்ட மேறும் புகழானைப் பாக்க முடையான் பசுங்குடிகள்[தோன்
மட்டி லாம லீடியது வளஞ்சேர் சோழ மண்டலமே. (௬௭)

*செல்லார் பணியுஞ் செம்பியர்கோன் செழுங்காவிரியின்சிறந்தக
கல்லா லணைகட் டெதற்கேவு கரும முடித்த சோழியர்கள் [ரை
பல்லார் மேழி நெடுங் கொடியைப் பாயும்புலியி னுடுபதித்த
வல்லாண் மையினுர் குடிவாழ்வு வளஞ்சேர் சோழ மண்டலமே.)
(௬௮

## விடுகவி-வெண்பா.

1*தொக்க கலியின்மூ வாயிரத்துத் தொண்ணூற்றில்
மிக்க கரிகால் வேந்தனுந்தான்—பக்க
மலைக்கும் புகழ்ப்பொன்னி யாறுகரை யிட்டான்
மலைக்கும் புயத்தா னுவந்து. 41.

*புனையுங் குழலாள் பரிந்தளித்த பொங்க லமுதும் பொரிக்கறியு
மனைய சவுரி ராசருக்கே யாமென் றருந்து மாதரவின்
முனைய தரையன் பொங்கலென்று முகுந்தற் கேறு முதுசீர்த்தி
வனையும் பெருமை யெப்போதும் வழங்குஞ் சோழ மண்டலமே.
(௩௯)

## முன்னூல்.

2*இன்றுவரி லென்னுயிரை நீபெறுவை யின்றைக்கு
நின்றுவரி லன்னதவு நீயறிவை—வென்றி
முனையா கலவி முயங்கியவா றெல்லாம்
நினையாயோ நெஞ்சத்து நீ. 42.

குலகுலப் பனையிலேயோலை குலாவிநின் றாடுமோலை
அளவுள்ள பனையிலேயோலை நாதா வெழுதுமோலை
யெழுதிய வோலைகண்டு மிந்தநாள் வாராவிட்டால்
யெழுந்தபோர் தனமும்யானு மெரிதனி லேகுவேனே. 43.

*தண்ணீர் விரவுங் காவேரி தார்வேந் தனுமே தகுஞ்சோழன்
பெண்ணு னவளாம் பற்சிலம்பி பிறங்கு மலையோ மேருவென்றே
யெண்ணு ரெளவை யுரைத்தமுறை யேழு புவியி லெண்டிசையின்
மண்ணு வதுதண் டலைவேலி வளஞ்சேர் சோழ மண்டலமே.(௪௦)

---

1*பி-ம். 'தொக்க சகனிற் ருளாயிரத்துத் தொண்ணூற்றில்' என்று சில பிரதிகளி லிருப்பினும், பரம்பரையாக எழுதிவந்த பிரதிகளில் கலியுகமென்றே காணப்படுகிறது.

2*பி-ம். பின்வரிலோவதுவும் .. .........,யென்றும் 4-வது அடி நினையாயோ நீ பிரிந்தக்கால்.

## ஔவையார் பாட்டு-வெண்பா.

தண்ணீருங் காவிரி தார்வேந்த னேசோழன்
மண்ணாவதுஞ் சோழ மண்டலமே—பெண்ணாவாள்
அம்பர்ச் சிலம்பி யரவிந்தத் தாள்மலருஞ்
செம்பொற் சிலம்பே சிலம்பு. 44.

*மேழிக் கொடிசேர் கருங்கண்ணி வேளாண்முகப்புடனிலமேற்
கேழிற் பயிலு முத்திரத்திற் கிளரா டரவக் கிண்கிணிக்கால்
சூழப் பணிந்த தியாகருக்குச் சொல்லுந் தியாகஞ் சொரிந்தோங்கும்
வாழ்விற் பெரியோன் குடிவாழ்வு வளஞ்சேர் சோழ மண்டலமே.
(சுக)

*தேனார் தொடையார் பரராச சிங்கப் பெருமான் செந்தமிழ்க்குக்
கானார் நெல்லின் மலைகோடி கண்டி நாடு கரைசேரக்
கூனார் கப்ப லாயிரத்திற் கொடுபோ யளித்த கொடைத்தடக்கை
மானா கரன்சங் கரன்சடையன் வளஞ்சேர் சோழ மண்டலமே.
(சுஉ)

## ஈழத்துச்சிங்கப்பெருமான் பாடல்-தாழிசை.

இரவுநண்பக லாகிலென்பக லிருளாகிர வாகிலென
னிரவியெண்டிசை மாறிலென்கட லேழுமேறிலென் வற்றிலென
மரபுதங்கிய முறைமைபேணிய மன்னர்போகி லென்னாகிலென் [ன்
வளமையின்புறு சோழமண்டல வாழ்க்கைகாரண மாகவே
கருதுசெம்பொனி னம்பலத்திலோர் கடவுணின்று நடிக்குமே
காவிரித்திரு நதியிலேயொரு கருணைமாமுகில் துயிலுமே
தருவுயர்ந்திடு புதுவையம்பதி தங்குமன்னிய சேகரன்
சங்கரன்றரு சடையனென்றொரு தருமதேவதை வாழவே.
45.

பழுத்துடைந்தகனி நெக்குநெக்குருகிச் சாறுவிழவடி சேறெழும்-பலபெருஞ்சுளையை யமுதமென்றுவெயில் படவொணாதென மறைப்பபோல், பொழிற்புறஞ்சொரியு முகிலினந்தழுவு புதுவை வாழ்சடைய னுதவுசேய்-பூதலம்பரவு சேதிபன்றனது பொன்னி நாடனைய பூவையாள், விழித்தனந்தலோ டெழுந்திருந்துதவ மெய்த்துவட்சியுமகிழ்ச்சியு-மென்மருங்கினிலெடுத்தெடுத்தணுவுமேக

லைத்தலை யணைத்ததும், வழுத்துநின்று திருநீறுதந்த விடைதந் தபாாவையை மறப்பினும்-வாசலின்படி பிடித்துநின்ற நிலையனம றபபதில்லை காணுமே. 46.

*விருந்து நுகர்வோர் கைகழுவ விளங்கும் புனற்கா விரியென்றார் தருந்தாயனையபுகழ்ப்புதுவைச்சடையன்கொடையார்சாற்றவல்லா பரிந்தா ரெவர்க்கு மெப்போதும் பாலுஞ் சோறும் பசிதீர [ர் வருந்தா தளிக்க வல்லதன்றோ வளஞ்சோ சோழ மண்டலமே. (சரு)

## கம்பர் பாடிய தனிக்கவி.

மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவ நீரபோதுங் காவிரியே—பொய்கழுவும்
போர்வேள் சடையன் புதுவையாள னில்லறத்தை
யார்போற்ற வல்லா ரறிந்து.* 47.

*குணகதின் மலைபோற் பதினறு கோடி செம்பொன் கொடுத் தவிலை, யிணைக்கு பொருபட் டினப்பாலை யெவரும் புகழ்தற் கெ ளிதாமோ, பணக்குன் றனந்த மேருவெனப் பயில்கா விரிப்பூம் பட்டினம்போல, மணக்கும் பதிகள் பலகாணும் வளஞ்சேர் சோழ மண்டலமே. (சச)

## மேற்கோள் வெண்பா.

வையந் தகளியாய் வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டுவென் சொன்மாலை
யிடராழி நீங்குகவே யென்று. 48

*இசைக்கார் தமிழுக் கெல்லாரு மீந்தா ரீந்தா ரென்பதல்லாற் றிசைக்கா விருது கொடிகட்டிச் செலுத்துங் கீர்த்தி சகத்துளதோ வசைக்காயிரம்பொன்கொடுத்ததல்லாறுகைப்பதிவாழ்வேளாளர் வசைக்காயிரம்பொன் கொடுத்ததன்றோ வளஞ்சேர் சோழ மண் [டலமே. (சரு)

*இப்பாட்டு மூவலூரில் சிலாசாசனமாக வெட்டியிருக்கிறது.

## காளமேகப்புலவர் வசை-தாழிசை.

உள்ளிநாறுவாயரு முவட்டெடுத்ததலையரு
மொருவரோடொருவர்சற்று முறவிலாதநெஞ்சருங்
கொள்ளிபோலமுகத்தருங் கொடுக்குவிட்டுடையருங்
கோளுநாளுமேபடைத்த குணமிலாதமடையரும்
பள்ளிவாசமேருநம்ப வுக்கரைச்சவுக்கரைப்
பதைத்திடப்புதைத்துவைத் தகப்படப்பிடித்துமூர்
கள்ளிராவடங்கலு நடுக்கமுற்றுவாழுமூர்
காலுமூலையுங்கடந்து நாய்க்குலைக்குநாகையே. 49.

குடக்கினிற்கலிங்கமுங் வடக்கினிற்றுரங்கமுங்
குணக்கினிற்பசும்பொன்னுங் குளிர்ந்ததெற்கிலாரமும்
படைப்பரையுடைக்கவந்த வனேகவண்ணமாகவந்த
வருசுவண்ணமுந்தழைத் தறத்தின்வண்ணமானவூர்
கடற்கரைக்குவித்தசந் தனத்தையிந்தனத்துடன்
கலாதிறைக்குமந்தியைக் கனன்றுமுற்கவிக்குலம்
புடைப்பதற்கெழுந்துகை முறுக்கினுமுறுக்குவாய்
புதைக்குமுத்தலைவிட்டெறிந்துபூகமேறுநாகையே. 50.

*பேசும் பெருமாள் தமிழறியும் பெருமா ளொருத்தி யுறையூரில்
வீசுந் தமிழ்நக் கீரனையும் வென்றே விருதுக் கொடிகட்டித்
தேச முழுதுங் கீர்த்திகொண்ட தெளிந்த புலமைத் திறத்தோர்
வாச மலியுந் தமிழெளிதோ வளஞ்சேர் சோழ மண்டலமே. [கள்
(சுசு)

*செறியான் மதிக்கு மறுவுமுண்டு செய்யா ளிடத்து மறுவுமுண்டு
பெறுமா லிடத்து மறுவுமுண்டு பெம்மா னிடத்து மறுவுமுண்டு
குறியா லுயர்ந்த சோழியர்தங் குலத்திற் கூற வொருக்காலு
மறுவே யில்லை யெனுநாடு வளஞ்சேர் சோழ மண்டலமே. (சஎ)

## கந்தபுராணம் தக்ஷகாண்டம்.

கடித்தன னெயிறுசெந்தீக் கான்றனன்கனன்றுகையிற்
பிடித்தது மேருவென்னப் பெருந்திருக்கதையதொன்றுற்
றடித்தனன் கமல்மார்பத் தடவரைப்பகசாய
வடித்தனன் பதகனுள்ளம் வெருவரவரி முன்வீழ்ந்தான். 51.

விட்டுமுன் வீழ்தலோடும் வீரருள் வீரவண்ணல்
மட்டுறு கமலப்போதில் வான்பெருந் தவசின்லைகும்
சிட்டனை நோக்கியன்னுன் சிரத்திடை யுருமுற்றென்ன
குட்டினனொருதன்கையான் மேல்வரும் குமரனேபோல் 52.

*ஓதுமாணிக் திரங்குறியா ருலக்கை தீண்டார்குலக்கொழுந்தா
யாதிகாலங் கற்புடைமை யளகாபுரியி லறியசின்றூர்
காதலரூர்கடந் துசெல்லார் கரைசேராறு கடவாத
மாதர் வாழு மும்மாரி வளஞ்சேர் சோழ மண்டலமே. (சஅ)

*தரிசித் தறியுங் கவுதமனூர் தெய்வச் செயலாய்த் தேஞரி
லரிசிக் கதிரின் பொலிவிளைந்தே யன்ன தான மளிப்பதற்காய்ப்
பரிசித்திடும்பொற்கலப்பையினூற்பண்ணை யுழுதுபயன்படைத்தோ
வரிசைக் குடிவே ளாண்பெருமான் வளஞ்சேர் சோழ மண்டல [ன்
மே. (சகூ)

## தனிக்கவி-வெண்பா.

அரிசி விளைத்தன் றமுதளிக்குந் தேவைப்
புரிசிறக்கு மீசரிரு பொற்றாள்—தரிசித்தோர்
வேண்டும் வரமனைத்து மேவுவார் பார்மீதில்
மீண்டுபிற வார்பெறுவார் வீடு. 53.

*நூறு தொண்ணூ றெனமேலோர் நுவலுந் தலங்க ளெவற்றி னுக்கும், வீறு சேர்ந்த தானிகமும் விளங்கு நிலைமைக் காணிகளு, மாறி லொன்று பெறும்வேந்த னருகி லிருப்பும் வரிசையுஞ்சேர், மாறி லாத சோழியரே வளஞ்சேர் சோழ மண்டலமே. (௬௦)

*ஆக்க மிகுந்த வோர்புலவ னூரோ லைக்கு மடங்கானென்
றூக்க மிகுந்த தமிழ்ப்பாட லுரிந்து கொடுத்தா னுள்ளதெல்லாம்
பாக்க முடையா னெனும்வார்த்தை பலரு மறிவா ரவன்வாழ்வு
வூாய்க்குஞ் செழுங்கா விரிபாயும் வளஞ்சேர் சோழ மண்டலமே.
(௬௧)

## முன்னூல்-கட்டளைக்கலித்துறை.

*காரோலைசேவப்பநாயக்கரோலைகருப்புக்கட்டி*
*நீரோலைதிம்மப்பநாயக்கரோலைநிலத்தின்மற்றப்*
*பேரோலைபாக்குமுடையான்செவிக்குப்பிடிபடுமோ*
*ஆரோலைக்குமடங்கான்காலனோலைக்குடப்படியே.* 54.

**எட்டிற்பொலிய வான்பசுவொன் றெழுதுங் கன்னூப்புடைராயன்*
*சீட்டுக் கவிதை யகதாரி செப்புந் தமிழின் றிறனறிந்தோன்*
*நாட்டிற் புகழ்கன் னைக்குடையா னூங் தண்டா யுதன்பெருமை*
*வாட்டுப் படுமோ வவன்காணி வளஞ்சேர் சோழ மண்டலமே.*
(௫௨)

## சிங்கப்பெருமான் சீட்டுக்கவி-வெண்பா.

*திரம்பெறுகன் னூப்புடைய சிங்கப் பெருமா*
*னூரப்பெறுதண் டாயுதனுக் கோலை—பெரும்பகலே*
*யந்திவரு நீநினைந்தாலல்லவென்று னுங்காலம்*
*பிந்திவரு முந்திவரும் பேச்சு.* 55.

*கனைத்திருந்த கடல்புடைசூழ் கன்னைத்தண் டாயுதனைக் கன்னூப்புடையா னினைத்திருந்த தன்மையினாற் குறைவில்லை யென்றெழுது நிருபருக்கு, முனைத்திருந்த வாணியய னகதாரி யான்சிவன்றுன் முகுந்தன்று, னைத்திருத்த நினைத்திருந்து மடப்புறத்துத் தித்தனையெனுபாதிதானே.* 56.

**இறையின் முறையென் றுலகறியச் செப்பும் பொய்யா மொழிதமிழ்க்காத், துறையின் னனகை ராசேந்திர சோழன் வரிசை தொகுத்தளித்தே, யறையும் பெருடைச் சிநக்க ரரசூர் முதலா யெழுரும், மறவி லாது விளங்கியது வளஞ்சேர் சோழ மண்டலமே.*
(௫௩)

## பொய்யாமொழியார் பாட்டு.

*இறையின் முறைகொணர்ந்து தெவ்வேந்த ரெல்லாம்*
*மிறையு முறைகழிக்க வொண்ணூர்—அறைகழற்காற்*
*போர்வேந்தர் போய்மடியப் போர்வா ளுறைவிடுத்த*
*ேசர்வேந்தன் றஞ்சைத் தெரு.* 57

*பொய்யா மொழியார் பசிதீரப் புளியஞ் சோறு புகழ்ந்தளித்த
செய்யா ரரசூர்ச் சீநக்கர் செய்த தெவருஞ் செய்தாரோ
கையா ருதவி பொறையுடைமை காணி யாளர் கடனன்றோ
மையார் புவியின் முதன்மைபெற்ற மரபோர் சோழ மண்டலமே.
(௫௪)

பொய்யாமொழியார் பாட்டு.

அளிகொளுந் தொடை யானர சைக்குமன்
னொளிகொள் சீநக்க னின்றுவந் திட்டசீர்ப்
புளியஞ் சோறுமென் புந்தியிற் செந்தமிழ்
தெளியும் போதெலாந் தித்தியா நிற்குமே. 58.

*புரைதீ ரரசைப் பதிபுகுந்த பொய்யா மொழியார் புகழ்தமிழ்க்கா
அரசூர் முதலா யேழூரு மழலிற் புகுந்த தரிதாமோ
தரைசூழ் மதிய மறுவாற்றுஞ் சான்றோ ரஃதாற் றுரெனுஞ்சொல்
வரையா துலகிற் பெற்றோரும் வளஞ்சேர் சோழ மண்டலமே.
(௫௫)

பொய்யாமொழியார் பாட்டு.

அன்றுநீ செல்லக் கடவென்று யாருயிர்விட்
டின்றுநீ வானுலக மெய்தினை—நன்றுநன்று
வானக்க பூண்மடவார் மாரனே கண்டியூர்ச்
சீனக்கா செல்லக் கிட. 59.

சிற்றரசூர் பேரரசூர் தென்மாலை பூந்துருத்தி
கொற்றமலி கண்டி குருகாவூர்—இத்தனையும்
வாய்ப்பா யமர்ந்தருளு மன்னுகுடி யத்தனையுந்
தீப்பாய்ந்த நல்ல திறம். 60.

*நல்லம் பருபோ நல்லகுடி நாளு முடைத்துச் சித்தன்வாழ்
வில்லந் தொறுமூன் றெரியுடைத்தென் றிசைத்தாளவ்வையீதேயோ
சொல்லுட்பெரியோர்வாழ்வுடைத்துத்துலையாதளிக்குஞ்சோறுடை
வல்லட்பெரியோரவையுடைத்துவளஞ்சேர்சோழமண்ட [த்து
[லமே. (௫௬)

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

## ஔவை பாடல்.

நல்லம்பர் நல்லகுடி யுடைத்துச் சித்தன்வாழ்
வில்லர் தொருமூன் றெரியுடைத்து—நல்லரவப்
பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின்
னாட்டுடைத்து நல்ல தமிழ்.

*வித்தா ராவி விடுத்தாலு மேலோர் கருமம் விடுப்பாரோ
கத்தூர் தரங்க மிரங்குபுனற் கறங்கூர் கழிவாய்க் கரைநீடு
புத்தூ ரமர்ந்த வேளாளர் புரிகோ புரமும் பொன்மதிலும்
வைத்தார் நந்தி காட்டியது வளஞ்சேர் சோழ மண்டலமே. (ருஎ)

*யோகாம் பெரிய சோழியர்வாழ் வுடையா ரீகை யுடையாராய்ப்
பாகாம் பழைய கல்வியினும் பயின்றோ ரென்னும் பரிசறிந்தோ
மேகாம் பரனூர் கச்சியுலா விசைக்கும் புலவ ரிரட்டையர்கள்
வாகாம் பதியா மிலந்துறையால் வழங்குஞ் சோழ மண்டலமே.
(ருஅ)

## கச்சியுலா.

ஓதுதிரு நகரிலோ ரேழினுஞ் சிறந்த
யாதி நகர்காஞ்சி யந்நகரில்—போதுநலம்
மன்னி வளர்வதோர் மாவுண் டதன்கீழ்
கன்னி யெமையுமை காணலாய்-சொன்னபடி. 61 a

*எரி னுழவர் நெடும்பெருமை யெமையா ளுமையா ளிளமுலைப்பா
லூரும் பவளக் கழுமலத்தா ருரைத்தா ரிதன்மே லுயர்ச்சியுண்
ஆர மணியுந் திருமார்ப னன்னு ரறஞ்செய் தருமநாடு [டே
வார மூகிழும் மணிமாட வளஞ்சேர் சோழ மண்டலமே. (ருகூ

## திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.

வாளார்கண் செந்துவர்வாய் மாமலையான் றன்மடந்தை
தோளாகம் பாகமாப் புல்கினான் றொல்கோயில்
வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்குந்
தாளாள ராக்கூரிற் றான்றோன்றி மாடமே. 62

நன்மையாய நாரணனு நான்முகனுங் காண்பரிய
தொன்மையான் றோற்றங் கேடில்லாதான் றொல்கோயி
லின்மையாற் சென்றிரந்தார்க் கில்லையென்னா தீந்துவக்குந்
தன்மையா ராக்கூரிற் றான்றோன்றி மாடமே. 63.

*தாளூர் மலரான் மனைப்படைப்பைத் தனிக்கத் தரிமூட்டகைந்திழுப்பக், கேளூர் மூந்தானையைவிடுவாய் கெடுவா யென்ற இனிமொழியாள், வேளூர்க் கிழவன் றன்மகளை வெந்தீப் புகுத விடுத்தகதை, வாளூர் சாப மோங்கியது வளஞ்சேர் சோழ மண்டலமே. (௬௰)

*எல்லா விளக்கும் விளக்கல்ல இதுவே விளக்காய் முக்குளத்தின்
நில்லா ரவியா விளக்குடனே நிரையாய் மூழ்கி நிலைநின்றார்
பல்லா ரறுபா னான்குகுடிப் பழையோர் கரிகாற் பார்த்திபர்க்கே
வெல்லாமகுட முடிசூட்டும் வளஞ்சேர் சோழ மண்டலமே.(௬௧)

*தேங்கூ ரிதழிச் சடைக்காடர் திருவெண் காடர் திருவருளால்
ஆங்கூர் மலர்க்கைத் தளைதளையு மாசைத் தளையு மறவிடுத்த
நாங்கூ ரறிபன் சேந்தபிரா னலங்கூ ரவனி நாடாண்மை
வாகூர் பெருமை நெடுந்தோற்றம் வளஞ்சேர் சோழ மண்டல
[மே. (௬௨)

## பட்டினத்தடிகள் தனி-10.

மத்தளை தயிருண்டானும் மலர்மிசை யயனுந்தேடி
பித்தனை யின்றபோது பிரானடிக்கள் புனைத்து
செய்த்தனை வயலூர்நாங்கூர் சேந்தனை வேந்தனிட்ட
கைத்தளை நீக்கியிக்கே காட்டும்வெண் காட்டனாரே. 64.

பி-ம். மத்தளை தயிருண்டானு மலர்மிசை மன்னினானும் 1
நித்தமுந் தேடிக் காணாநிமலனே 2 யமலமூர்த்தி
செய்த்தலை கயல்பாய் 3 நாங்கூர்ச் சேந்தனை வேந்தனிட்ட
கைத்தளைநீக்கியென்முன்காட்டுவெண்காட்டனாரே.

---

1. யேகினானும் 2. நீயினைறெய்தி 3. செய்த்தளைத் திருநாங்கூரிற்.

*வினையுங் கழற்காற் சிலம்பலம்ப நின்ற பெருமா னிலைபாடிப்
பனையின்கிழங்குபிளந்ததனைப்பவளக்கூர்வாய்நாரையென்றே
புனையு முதலூற் சத்திமுற்றப் புலவ னமுது புசித்தூற
வனையு மதுரத் தமிழ்வாடை மணக்குஞ் சோழ மண்டலமே. (௬௫)

## சத்திமுற்றப்புலவர் பாட்டு-அகவல்.

நாராய் நாராய் செங்கா னாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கா னாராய்
நீயுநின் மனைவியுந் தென்றிசைக் குமரியாடி
வடதிசைக் கேகு வீராயினைப் போது
யெம்மூர் சத்தி முற்றமவ்வூர்க்
காவினிற் புகுந்து வாவியுட் டங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி
வரவுபாத் திருக்குமெம் மனைவியை நோக்கி
யுன்கோ மாறன் வழுதி கூடலில்
ஆடை யில்லாமல் வாடையான் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு தோளுற வளைத்து
யலகு சிறந்த பல்லனு மாகி
பேழையு ளடைத்த பாம்பது போல
யேழை யாளனிருக்கக் கண்டனு மெனுமே. 65.

*ஒத்த துணர்ந்த காடனைத்து மொருங்கே கூடி யுயர்கூத்தன்
கத்தி யலையத் தூரத்துதலுங் கசிந்து காழிக் கவுணியர்கோன்
பத்தி யுடனே தக்கன்மகப் பரணி பாடப் பணித்துமுத்தின்
வைத்த சிவிகை மகிழ்ந்தேற வைத்தார் சோழ மண்டலமே. (௬௬)

## தக்கயாகப்பரணி.

ஞாயில்கொண்ட மதிற்புறம்பர சமயகோளரிகண்ணுமுன்
கோயில்கொண்ட மடத்தைவெங்கனல் கொண்டுகுண்டர் கொளு
[த்தவே. 66.

திருமடந் தெரியிட்ட குண்டர்கிடக்க வவ்வெரி தென்னரிற்
பெருமடந்தரு சைச்சுடத்திரு வாய்மலர்ந்தது பிள்ளையே. 67:

பிள்ளைகொண்ட கனல்சென்று தென்னர் பிரானுயிர்
கொள்ளைகொண் டுடலங் கொதிப்பவெந்து கொளுத்தவே. [68.

நாணீரறியீரு றிவல்லமணீர்மதுரேசனை யெங்குலநாயகனைக்
காணீரவர்தந திருநீறிடுவீர் முகிலூர்திபெருத கவின்பெறவே. 69.

*தாழப் புதைக்குந் திருத்தங்கித் தடங்கா வாழை தனிபழுப்பப்
பாழிப் புயமா மலைமருதன் பலர்க்கு முதவும் பான்மையினாற்
காழிற் பொலியு மிலையரிதாய்க் காயு மரிதாய்க் கனியுமின்றி
வாழைக் குருத்துங் கிடையாத வளஞ்சேர் சோழ மண்டலமே.
(சுு)

## ஔவை தனிக்கவி—வெண்பா.

திருத்தங்கி தன்வாழை தேன்பழுத்து நிற்கும்
மருத்தன் றிருக்குடந்தை வாழை—குருத்தொன்றிலை
யிலையுமில்லை பூவுமில்லை காயுமில்லை யென்று
முலகில்வரு விருந்தோ டுண்டு. 70.

*உறுந்தென் புலத்தார் தெய்வம்விருந் தொக்க றுனென்
றோரைந்தும், பெறுந்தென் புவியி லெட்டிலொன்று பெற்று
ரிதுவே பெற்றதன்றோ, சிறந்த சோழன் பெருமையினுஞ் சிறந்
தோர் வேளாண் றருமரபோர், மறந்தும் பொய்யா தவர்வாழ்வு
வளஞ்சேர் சோழ மண்டலமே. (சுக)

## திருக்குறள்.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லுனென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை. 71.

*அறங்கூர் பெரியோ மரசுவரி லாற்ற தந்தே யமைகவினிக்
கறங்கூர் கண்டை புரட்டுமெனக் கலியா ணத்திற் கவிகேட்டு
புறங்கூர்பவளக்கடாமுழுதும்பொன்னங்கலத்திற்புடைசொரிந்த
மறங்கூர் புக்க ளூர்க்கிழவன் வளஞ்சேர் சோழமண்டலமே (௬௭)

## தனிக்கவி.

வெண்ணெயும் பார்த்தன்னே கண்ணெயுங்பாாத்துத் தம்மெய்யிற்ப்
புண்ணெயும் பார்க்குந் திருநெடுமால் புங்களூர்க்கிழவன் [ட்ட
பண்ணெயுஞ் சேல்களும் வாவியுமோர்கயல் பாயுமவன்
திண்ணெயுங் கண்டைபுரட்டுங் கல்யாணத்திற் சென்றவர்க்கே. 72.

*திண்மை யேறுங் கம்பனிடஞ் செய்யத் தகுமென் சிறப்பீந்து
நன்மை யேறு மிராமகதை நற்பேர் புவியிற் றழைத்தேற
வுண்மை யேறுந் திருவரங்கத் தொருவன் சபையி லுத்தரநாள்
வண்மையேற வரங்கேற்றி வைத்தார் சோழ மண்டலமே. (௬௮)

## இராமாவதாரம்.

எண்ணிய சகாத்த மெண்ணூ ற்றேழின்மேற் சடையன்வாழ்வு
நண்ணிய வெண்ணெய்நல்லூர் தன்னிலே கம்பநாடன்
பண்ணிய ராமகாதை பங்குனி யுத்ரநாளிற்
கண்ணிய வரங்கர்முன்னே கவியரங் கேற்றினானே. 73.

*எட்டுத் திசையும் பரந்துகிலா வெறிக்குங் கீர்த்தி யேருழவர்
சட்டப் படுஞ்சீர் வெண்ணெநல்லூர்ச் சடையன் கொடிலன் சரிதமெ
மெட்டிப் புகழ வாயிரநா வுடையார்க் கன்றி யொருநாவின் [ல்லா
யட்டுப் படுமோ வவன்காணி வளஞ்சேர் சோழ மண்டலமே.
(௬௯)

## இராமாவதாரம்.

வண்ணமாலை கைபரப்பி யுலகைவளேத் தவிருளெல்லா
முண்ணவெண்ணித் தன்மதிய மொத்துமிர்ந்த நெடுகிலரி
விண்ணுமண்ணுந்திசையனைத்தும்விழுங்கிக்கொண்டவிரிநன்னீர்ப்
பண்ணைவெண்ணைச் சடையன்றன் புகழ்போலெங்கும் பரந்துள
தால். [74.

*நீரம் பெரிய தென்னர்பிரான் சிங்கா தனத்திற் சேருமிவ
னூரென் றுரைப்ப நம்பியினை யார மார்ப னடியோர்க்குஞ்
சாருஞ் சரரா மனுக்குமொரு தம்பி யெனக்கம் பன்புகழும்
வாரம் பெறுவெண்ணெயர்பெருமான் வளஞ்சேர் சோழ மண்டல
[மே. (எ0)

## கம்பர் பாட்டு-வெண்பா.

என்னுடைய தம்பி சரராமனுக் கிளையோன்
கன்னல் மதயானைச் சங்கரன்மகன்—முன்னங்
கனையாழி முத்துதிர்க்குங் காவிரிசூழ் நாட்டுக்
கிளையான் மார்ப னிவன். 75.

*தனதா னியத்தி லுயர்ந்தோர் கடாமே யென்றுந் தருக்கேயோ
வினவா திரவி செற்கதிரான் வேய்ந்தார் வல்லி வீடதல்லாற்
கனிசேர் தமிழ்க்குப் பன்னிரண்டு கடகம் யானைக் காடளித்த
மனைவாழ் வுடையான் வெண்ணெய்நல்லூர் வாழ்வான் சோழமண்
டலமே. (எக)

## கம்பர் பாட்டு.

பொதுமாதர் வீடதனைப் புகழ்பெறவே செற்
கதிரானே வேய்ந்தருளுங் கங்கை—பதிநேர்
வருவெண்ணை நாடன் வருநாவ லருக்குத்
தருவானவன் சடையன் றான். 76

*எண்ணத் தரும்பா ருள்ளளவு மிரவிமதிய மெழுமளவுங்
கண்ணற் கினிய சயராம கதையி லொருபான் கவிமுழுதும்
வெண்ணைச் சடையன் சடையனென விறலார் கம்பன் விளங்க
வண்ணத் துரைவே ளான்பெருமான் வளஞ்சேர் சோழ [வைத்த
[மண்டலமே. (எஉ)

## இராமாவதாரம்,

மஞ்செனத் திகழ்தரு மலையை மாருதி
யஞ்செலிற் கடிதெடுத் தெறியவே தனன்
விஞ்சையிற் றுங்கினன் சடையன் வெண்ணெயிற்
றஞ்சமென் றோர்களைத் தாங்குந் தன்மையே. 77.

---

†இதுமுதற் பத்துச் செய்யுட்களும் இராமாவதாரத்திலும், கம்பர் சரிதத்திலுங் காண்க.

*விள்ளு மதுரை யலங்கரித்த வீம்புநோக்கி வெண்ணெய் நல்லூர்
உள்ளு மிடமொ டொக்குமென வுரைத்தான் கம்ப னுரைத்தமுறை
யள்ளு மணியார்ப் பசும்பொன்னு லமரா பதிபோ லலங்கரித்தே
வள்ளல் வழுதி யதிசயிப்ப வாழ்ந்தோன்சோழமண்டலமே.(எங)

*பொன்றாப் புகழோன் றில்லைவண்ணம் புகன்றோன் வெண்
பாவொன்பதுபொ, னொன்றாற் றியபொன் னூறுவண்ணம் நாட்டி
விருது நாட்டியகோன், கன்றாப் புடையான் பேருடையான் கல்வி
யுடையான் கனவாழ்வு, மன்றாப் பொலியுந் திரள்வீதி வகித்தார்
சோழ மண்டலமே. (எச)

*தரைமே னாவ லூரிறைவன் றடுத்தாட் கொண்ட தற்பரனைக்
கரைசேர் பித்தா வெனவோதிக் காட்டும் பவளக் கனிவாயா
னுரைசூழ்திருத்தொண்டத்தொகையி னெருங்குமடியாருடனிகழ்
வரையா தளித்த கொடைவேளாண் மரபோர் சோழமண்ட[த்த
[லமே. (எரு)

*காக்கு நீதி யிரவிகுல கழற்கால் வளவன் கனிந்தேவ
சேக்கி ழார்தந் திருவாயிற் றெளிந்த முதனூற் செழுங்கதையின்
மேக்கு லாவுந் திருவேட மெய்யே பொருளா வீடுபெற்றோர்
வாய்க்கு லாவும் புகழ்வேளாண் மரபோர் சோழமண்டலமே.
(எசு)

*பெற்று வளர்த்தும் வித்தைதனைப் பேணிக் கொடுத்தும் பெயர்
கொடுத்தும், பற்ற வரும்பா லமுதளித்தும் பசைத்த வறுமைப்
பயந்தீர்த்தும், கற்ற முதனூற் றிருவழுந்தூர்க் கம்பன் றழையக்
கருணைசெய்தோர், மற்றும்புலவோரையும்வாழ வைத்தார் சோழ
[மண்டலமே. (எஎ)

## சிறுபஞ்சமூலம்.

பிறப்பித்தோன் வித்தைதனைப் பேணிக் கொடுத்தோன்
சிறப்பினுப தேசஞ் செப்பினோன் — அறப்பெரிய
பஞ்சத்தி லன்னம் பகர்ந்தோன் பயந்தீர்த்தோ
னைஞ்சும் பிதாவென் றறி. 78

*குணங்கொள்சடையன்புதுச்சேரிக்குடையான்1 சேதிராயன்முத
கணங்கொள் பேர்யோர் பலாகூடிக் கம்ப நாடன் களிகூர [ற்
யிணங்கும் பரிசி லீந்துபுவி யேழும் புகழே ழெழுபதெனு
மணங்கொள் பெருங்காப் பியப்பனுவல் வகுத்தார்சோழ மண்ட
[லமே. (எஅ)

மேற்கோள்.

வேதநூல் முதலாய் விளங்குகின்ற கலையனைத்து
மோதுவா ரெல்லா முழுவான் றலைக்கடைக்கே
கோதிலா மன்னவர்தங் கொடைவளமுங் கொழுவனத்தா
லாதலா லிவர்பெருமை யாரறிய வல்லாரே. (79)

*ஆன்பா லறுந்தேன் முக்கனிநீ டமுதின் சுவையா றுடனருந்தித்
தான்பா லணைய மறப்பதிலைச் சடையா வென்று தமிழோதுந்
தேன்பா யலங்கற் கம்பனுக்குச் செழும்பா ரிடத்திற் செய்தநன்றி
வான்பா லிருக்கச் செய்துநலம் வைத்தார் சோழ மண்டலமே.
(எகூ)

ஆன்பாலுந் தேனு மரம்பைமுதன் முக்கனியுந்
தேன்பாய வுண்டு தெவிட்டுமனக் — தீம்பாய்
மறக்குமோ வெண்ணை வருசடையா கம்ப
னிறக்கும்போ தேனு மினி. 80.

*பூணி லாவுங் கம்பனலம் பொலியுந் தமிழாற் பொலிவெய்திக்
காணு மாறு காண்டமுறுங் கதையிற் பெரிய காதையெனுந்
தாணி லாவுங் கழலபயன் சபையிற் பயிலுத் தரகாண்டம்
வாணி தாச னரங்கேற்ற வைத்தார் சோழ மண்டலமே. (அ0)

---

(1) பாடப்பட்டோர் வரலாறு அச்சேறியபின்னர் புதுச்சேரிக்குடையான் என்ற வகுப்பார் நாயனாருள் ஒருவரிருப்பதாகவும், அவர் வேறு, சடையன் வகை வேறு வகையெனவும், முன்னவர்களே இப்பொழுது நாயன்மாருள் தலைக்குடியாகக் கருதப்படுவதாகவும் அறிகிறேன்.

*ஈழ நீத்தோ னவனைத்திசை யிருப்பார் பூட்டும் வரம்படிக்கு†
காழில் வெறித்த கார்முழுதுங் கரத்தின் மேலாங் கவிமுழுதுஞ்
சூழுப்பொதுவிற் சிறப்பாகத்தொடுக்கப்புனைந்ததொன்மையினோர்
வாழு மறுபா னுங்குடி வளஞ்சேர் சோழ மண்டலமே.
(அக)

*உலகி லிலமென் றுரையாமே யுதவல் குணத்தோர்க் குளதாமே
யிலகு மெறும்புக் காற்பதம் வேறில்லை யெனயா வதுமீந்தான்
புலவன் மகிழ்ந்து பிற்பாதி புகலக் கேட்ட புகழாளன்
மலைகொள் புயத்துக் குடிதாங்கி வளஞ்சேர் சோழ மண்டலமே.
(அஉ)

## தனிப்பாடல்.

வெறும்புற் கையுமரிதாம் பிள்ளைசோறுமென் வீட்டில்வரு
மெறும்புக்கு மாற்பதமில்லை முன்னுளென்னி றுங்கலியாங்
குறும்பைத் தவிர்த்தகுடி தாங்கியைச்சென்று கூடியபின்
தெறும்புற் கொள்யானைகவளங் கொள்ளாமற் றெவிட்டியதே.81.

*குலத்திற் பெரியோர் பேர்படைத்த குணத்திற் பெரியோர் கொடைப்பெரியோர், தலத்திற்பெரிய வாபாயன் றழைத்த சமூகந் தனிலேறிப், பலத்திற் பெறுபஞ் சாக்கரீன் படியிற் பெரியபுரா ணத்தை, வலத்திற் குலவ வரங்கேற்றி வைத்தார் சோழ மண்ட
[லமே. (அங)

*ராமே வியசொல் லிலக்கணமாம் நன்னூ லகத்து நாட்டிவைத்த
பூமே லெனும்பா டலுக்களித்த பொன்னு யிரமும் போதாதோ
தேமே விமா லையுக்கொடுத்த சிலம்பன் றிருவேங் கடன்வாழ்வு
மாமே வியபூம் பொழில்வாவி வளஞ்சேர் சோழ மண்டலமே.
(அச)

*இடமண் டியயாப் பருங்கலநூ லெனுங்காரிகையிற்பதித்தமணித்
தடமண் டியதா மரையினெனுந் தமிழ்போலுலகந்தனிலுண்டோ
திடமண்டியவத்தமிழ்க்குதவுஞ்சிமான் செழுந்தென் மண்டலமும்
வடமண் டலமும் பரவுபுத்தூர் வளஞ்சேர் சோழ மண்டலமே.
(அரு)

---

† இப்பாட்டு விளங்கவில்லை.

## முன்னூல்-வெண்பா.

†தடமண்டு தாமரையின் றாதா டலவன்
திடமண்டிச் செல்வதனைக் கண்டு—பெடைநண்டு
பூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்கடிந்
தாழி நடாயினா னூர். 82.

*பூதம் பணியச் சீட்டெழுதிப் பொருளாய் லட்சம் பொன்கொ
வோதும் பூத மங்கலவாழ் வுடையா னீத லுடையானே [டுத்த
காதல் சேருங் கடாரமெலாங் கண்ட கருணா கரப்பெருமான்
மாது பாகன் றிருப்பணிக்கே வைத்தார் சோழ மண்டலமே.(அசு)

*கோட்ட முடையான் கிழக்கோ புரமு மதிலுங் குறித்தமைத்தே
முட்ட முடையான் மகபூசை முழுது முடையான் மொய்ம்புடைமா
பட்ட முடையான் காவிரிப்பூம் பதியு முடையான் பரிந்தகுடை[ன்
வட்ட நிழலிற் குளிர்ந்ததன்றோ வளஞ்சேர் சோழ மண்டலமே.
(அஎ)

*கருணா கரன்செய் திருப்பணியைக் கருதி நலமாய்க் கண்டுசெய்த
பொருளீ ராலத் தொன்றுடையான் பூமி யானைப் போலாரோ
திருவா ரூரில் வன்மீகத் தியாக ராசப் பள்ளுகந்தும்
மருவார் பணிய வரங்கேற்றி வைத்தார் சோழ மண்டலமே.
(அஅ)

### தியாகப்பள்ளு 58-வது.

மங்கைபாடக் கமலைச்சடிலர் மருவுமாவை மாடவே
மார்பிற்செங் கழுநீரும்பைந் தொடைமணிப்பொற் றேடுமாடவே
கங்கையாடத் திங்களாடக் கனகதண் டினிலாடுவார்
கமலைவாழு மமலர்மேவுங் கயலுலாவும் வயலுளே. 83.

† இது காரிகையில் இருகுற ணேரிசை வெண்பாவிற்குதார
ணமாகக் காட்டப்பட்டுளது.

செங்கையாட வளைகளாடத் திரளுந் தாளமாடவே
சேலையாட மாலையாட சேலனேர் விழியாடவே
கொங்கையாடக் குழைகளாடக் கொடியிடை துவண்டாடவே
கொந்தளாட விழவாடிக் கூடிநட வாரும்பள்ளீரே. 84.

*பொற்று மற்பெண் ணாரழலிற் புகுந்தா ளதினுப்புதுமையிது
முற்று வெழுந்த கணம்புல்லால் மூடிப் பாத முடியளவாய்
பற்று வுடலை விளக்கேற்றிப் பரனுக் கேற்பப்பதித்தபுரி
வற்று நிலைமைக் கணம்புல்லன் வாழ்வாஞ் சோழ மண்டலமே.
(அசு)

## கணம்புல்லநாயனார் புராணம்-7.

முன்புதிரு விளக்கெரிக்கு முறையாமங் குறையாமன்
மென்புல்லும் விளக்கெரிக்கப் போதாமை மெய்யான
வன்புபுரிவா ரடுத்த விளக்குத்தந் திருமுடியை
யென்புருக மடுத்தெரித்தா ரிருவினையின் றொடக்கெரித்தார். 85.

*கண்ணா ருலகிற் பகீரதனுங் கண்டு கொணர்ந்தான் கங்கை யென்பார், விண்ணா றெளிதோ வாறுதந்த வேளாண்குரிசில் விண் ணனன்றோ, தண்ணார் முள்ளி யோடம்வரச் சம்பந் தனுஞ்செந் தமிழ்பாட, மண்ணாள் செல்வம் பெருங்கீர்த்தி வகித்தார் சோழ மண்டலமே. (கூ௦)

## பழைய பாட்டு-ஆறடி வெண்டுறை.

முழங்கு கடல்யானை மூரிக் கடற்படை முறித்தார் மன்னர்
வழங்குமிடமெல்லாந் தன்புகழே போக்கிய வைவேல் விண்ணன்
செழுந்தண்பூம் பழைசையுட் சிறந்துநா ளுஞ்செய
எழுந்தசோ திகத்துளே யிருந்தவண்ண லாரடி
விழுந்தண்பூ மலர்களால் வியந்துநா ளுந்தொழத்
தொடர்ந்துநின்ற வெவ்வினை துறந்துபோ மாலரோ 86.

## திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.

கொட்டமே கமழுங் கொள்ளம் பூதூர்
நட்ட மாடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தையார் தொழ
நல்கு மாற ருணம்பனே. 87.

## பெரிய புராணம். 898.

தேவர்பிரா னமர்ந்ததிருக் கொள் ளம்பூதூ
ரெதிர்தோன்றத் திருவுள்ளம் பதியச்சென்று
மேவுதலா லோடங்கள் விடுவாரின் றியொழிந்திடவு
மிக்கதோர் விரைவார் சண்பைக்
காவலனா ரோடத்தின் கட்டவிழ்த்துக் கண்ணுதலார்
திருத்தொண்டர் தம்மை யேற்றி
நாவலமே கோலாக வதன்மே னின்று
நம்பர்தமைக் கொட்டமென நவின்றுபாட 88.

அளிக்கும் படைமூ வேந்தருங்கொண்டாடும் விருந்தா லதிசயமாய்த், திளைக்குந் திரிகர்த்த ராயனெனச் செப்பும் வரிசைத் திறஞ்சேர்ந்தோன், விளைக்கு மரிசி மாற்றியநீர் வெள்ளங் கிழக்கு விளையுமென, வளைக்கும் பெருமைப் புதுவையர்கோன் வளஞ்சேர் சோழ மண்டலமே. (௯௧)

## மேற்கோள்.

புரந்தரா தாரு புதுவைச் சடைய
னிருந்தவிய லூர்தெற்கு மேற்கு—பரந்தபொன்னி
யாற்றுநீ ராவிளையு மப்பாற் கிழக்கரிசி
மாற்றுநீ ரால்விளையு மாம். 89.

பொய்யா மொழிதமிழ்க் கேழூரவரெரி புக்கிலரோ
ஐயா வென்பதுபே ரல்லவோமுகிலுஞ் சத்தரும்
கையான் சடையன் புதுச்சேரிகாவலன் காங்கயனென்னும்
துய்யார் புகழ்ப்பொன்னி நாடற்கொப்போ தொண்டைநாட்டவ
[தே. 90.

யாமார் புகழ வியற்கம்ப நாடனிராமனெனும் *
பாமாலை சூட்டுங் குலமுடையானைப் படிப்புரக்கக்
கோமாற னிட்டபொற் சிங்காதனப்பெற்ற கொற்றவனைத்
தேமாலை மச்சக்தவிர்ப்பான் வெண்ணைத்திரி கர்த்தனையே. 91.

தண்ணார் கமலச்சதுமுகத் தோனையுந் தப்புவதோ
பண்ணா மணித்தலைக்கட்செவி யானது பாரிலுள்ளே
கண்ணாக வாழும்வெண் ணைத்திரிகர்த்தன் கலைத்தமிழ்கேட்
டெண்ணா முடியசைத் தாலுலகேழு மிறக்குமன்றே. 92.

*ஒத்தார் காரைக் காடர்குடி யொன்று கெடுத்தே யுயர்மாறன்
கொத்தார் கொடைவே ளாளர்குடி கொண்டே மதுரை குடியேற்
பத்தார் திசையி லிருங்களெனப் பாண்டி நாடன் பட்டமிட்டேறிப்
வைத்தார் †வேளூர்க்கிழவனதுமரபோர் சோழ மண்டலமே (கஉ)

*கோலா கலமன் னரிலவன்போற் கொடுத்தே புகழுங் கொண்டாரார், மேலார் கவுடப்புலவனெனும் விழுப்பேர்கூத்தன் முழுப்பேராய், நாலா யிரக்கோ வையும்புனைய நவில்கென் றிசைத்து நாட்டுபுகழ், மாலா மெனுங்காங் கயன்வாழ்வு வளஞ்சேர் சோழமண்டலமே. (கங)

அகவல்.

புதுவைச் சடையன் பொருந்து சங்கரனுக்
குதவித் தொழில்புரி யொட்டக் கூத்தனைக்
கவிக்களி றுகைக்கும் கவிராக்ஷ தனெனப்
புவிக்குயர் கவுடப் புலவனு மாக்கி
வேறுயங் கலநான் வியந்துகாங் கயன்மேற்
கூறுநா லாயிரக் கோவைகொண் டெயர்ந்தோன் 93.

நாலாயிரக்கோவை—துறை சுரம்போக்கு.

மதிநோக்கி யன்னையைத் தண்டனிட்டே னெனும்பாங்கியரை
யெதிர்நோக்கிநின்று தழுவுமின்றே னெனுமென்றுபொன்னி
நதிநோக்கி வாழுநன புதுச்சேரிநன் னாட்டிலென்றன்
விதிநோக்கிக் காளைபின் மேவுகின்றே னெனும் வேதியரே. 94.

---

†பாண்டிநாட்டில் சோழியர் மிகுதியென்பது நிதர்சனம்.

*களத்திற் பொலிகா டவன்பணியக் கண்டான் கொண்டான் களவகுப்புத், தளத்திற் பெரியவடவரசர் தாமேலிடும்பொய்த்தலை கொண்டான், உளத்திற் பரவு காளியரு ளுடையான் சோழ னுவ ப்புடையான், வளத்திற் பெருமங் கலமுடையான் வளஞ்சேர் சோழ மண்டலமே. (கூ௪)

## அகவல்.

கோட்டை வாசலிற் கூளிதன் பலத்தால்
காட்டமில் வளவனை மலைவறப் பொருதிடும்
வடவா சரைப்பெரு மங்கல முடையீர்
படைபொரு தவசயப் படுத்துமென் றேவலுங்
காத்தெழு பத்திர காளியா லந்தப்
பேய்த்தலை கொண்டு பெரும்படை சயித்தோம். 95.

*ஆர வார விலக்கணநூ லேத்து முழங்க வதிர்கெதிர்நூல்
பாரின் மீது தமிழ்க்கூத்தன் பாடியமைத்தான் பயனோர்ந்தே
†வீர சோழ னுடனிருந்து வியந்தே வீர சோழியநூல்
வார மேற வரங்கேற்றி வைத்தார் சோழ மண்டலமே. (கூ௫)

## பழைய பாட்டு

வஞ்சியேனென் றவன்றனூ ருரைத்தான் யானுமவன்
வஞ்சியா னென்பதனால் வாய்நேர்ந்தேன்—வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியே னென்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ. 96.

*எந்த நாடு தளர்ந்தாலு மிதுவே தாங்கு மின்னமின்னம்
புந்தி நாடிப் பொன்னூடு புரந்தார் குடியும் புறப்பட்டார்
சொந்த நாடாய் வந்திருந்து சூர னெனிக்ச் சுகமாகி
வந்து வாழுங் குடியேற வைத்தார் சோழ மண்டலமே. (கூ௬)

---

†That the patron whose name has been associated with the grammar is none other than VIRARAJENDRA (1063 to 1070) is borne out by references to and quotations of the inscriptions of Rajendra Chola I and those referring to the battles of Koppam and Kudalsangamam. No inscription of a later time is mentioned and the name of Virarajendra as the author's patron is found in the text of the graammar itself. This makes another landmark in Tamil Literary History and gives the clue to many a knotty point in the Literary Chronology of Tamil. (Ancient India 127.)

## சந்தபுராணம் மகேந்திரகாண்டம்.

மெய்த்தரு நிழல்வைகும் வெறுக்கையை வெறுத்துப்பாரில்
சித்திர மனைவியோடீண்டு தக்கண தேயம்புக்குப்
பத்துட னிரண்டுநாமம் படைத்ததோர் காழிமண்ணி
யித்தல மினிதேயென்று விருந்தன னிமையோர்கோமான். 97.

இந்திர னனையகாலை யெம்பிரான் முன்னரேகி
வந்தனை புரிந்து போற்றி வளமலி துறக்கநாட்டு
முந்துள வரசுஞ்சீரு முழுதொருங் களித்தாயேதா
யுய்ந்தன னிதன்மேலுண்டோ ஆதியொருவர்க் கென்றான் 98.

*மிச்ச முறவே நெற்பயிராய் நீளுந் தமிழ்க்கு நெய்மேலித்
தச்சன் பொலியா யிரக்கலநெற் றந்தா னுலகிற் காதரவாய்
மெச்சு பவன தாண்மையினால் வென்றே கொடியின் விருதுகட்டி
வைச்சகொடையின் றிறமெளிதோ வளஞ்சேர்சோழமண்டலமே.
(௪௭)

## கம்பர் தனிப்பாடல்.

நெற்பயிர் விளைகழனி நெய்மேலி[1] வாழ்தச்சன்
[2]கற்படு திண்டோளன் கங்கண கணகணவன்
விற்புரை விழிநுதலாள் மின்மினி மினுமினுவை
சொற்படி வேலைசெய்வான் துர்துமி துருதுருவை. 99.

அலங்குபுகழ் படைத்த வாடரவக் கோமான்
விலங்கெடுத்து வாவென்று விம்மினான்—விலங்கென்
சேரர்க்கோ சோழர்க்கோ தென்பாண்டி நாடர்க்கோ
ஆர்க்கோ வென்றறியே னான். 100.

---

பிரதிபேதம். 1, நெல்விளையுமெல்லி 2, கற்பணி வேலை செய்வான்

*தோளார் தொடையா னருப்புடையான் றேன்ற திருநால் தொண்டனுமாய், வேளாண் மகளை மணம்புணர்ந்து விழைந்தா னவளும் விடையூர்திக், காளா யன்பி னேதறியை யருச்சித திலிங்கமாக வைத்து, மாளா நிலைகை கரபுடையாண் மரபோர சோழ மண்டலமே. (௯௮)

## பழைய பாட்டு.

நாளார் பெரும்புகழ் நாட்டி யததான்குடி நம்பரம
வேளார் மகளை யரும்புடை யான்மகன் வெண்ணைக்கள்வற்
காளாம் பனசையி லாதி வராகன்கொண்டம்புவியில்
நீளாத வீடு குடிபுகுந் தானவள் மேன்மைகொண்டே. 101.

*தெளிவர தயன்மா லறியாத தில்லைப் பதியம் பலவாணர்
புலியம் பொந்திளிடமவாழும் புதுமை காட்டிப் பொருள்காட்டி
யெளிதிற் புளியங் குடியானென் றிசைக்கும் பெருமை பேருழவர்
வளருங் குடியிற் பொலிவாழ்வு வளஞ்சேர் சோழ மண்டலமே.
(௯௯)

*சுத்த குலசோ ழியருமுடி சூட்டுங் காணி யாளர்களுங
கத்த ரெனவே வரவழைத்துக் கவிக்குக் கனக மழைபொழிந்தே
நித்த ரெனும்பொன் வைததவர்சந் நிதியிற் சதக மரங்கேற
வைத்த வருணை சலராயன் வாழ்வாஞ் சோழ மண்டலமே. (௧௦௦)

## அளிக்குந்தானை என்ற சதகம்-௯௧. 102.

*நிதிநிகர் வெண்ணைச்சடைய னிராமகதை யரங்கேற்றி நிறுத்திக்கொண்டான், துதிபெறு கோமான் கருப்பன தொணடை மண் டலசதகந் துலங்கச்செய்தான், மதிதவழ் கோபுரசிகர மண்டபஞ்சூழுஞ்சோழ மண்டலததின், சதகமரங் கேற்றி வைத்தான் சித்துடையான் புகழருணை சலமென்பாரே. (௧௦௧)

*அளகை ராசன் வாழிபொன்னி யாறு வாழி முகில்வாழி
புளக மிகுஞ்சோ ழியர்வாழி பொன்வைத் தவஞ்சக் கிநிவாழி
தமிழுஞ் சதக வாழிகொழு மீதி வாழி சோணாட்டில்
வளருங் குடிகள் மிகவாழி வாழி சோழ மண்டலமே. (௧௦௨)

*சத்திரபதியாஞ் சகசிமகராசன்வாழி தஞ்சைநகர்வாழி சரபோஜி தானம்வாழி, அத்தர்பொன்வைத்தவரு மகிலாண்டமும்வாழி யருள்வாழி யிசைந்தராமப்பர்வாழி, உத்தமவேளாளர்குல முயர் சித்தாமூரிலுள்ளோர்க ளனைவர்களுமுவந்துவாழி, வைத்த சோழியர் குடிக ளனைத்தும்வாழி வையகமெலாந்தழைத்து வாழிதானே. (௧0௩)

முற்றும்.

ஆகச் செய்யுள் ௧0௫.

---

நூல் இயற்றிய காலம்.

சீர்கொள் பிரபவ வருடந் திகழு மிடபத் திங்கண்
நார்கொள் ளிருபான் றேதி நவிலும் பானு வாரம்
கார்கொள் ளமர பக்கங் கருதுந் தசமி திதியே
ஏர்கொண் டிலங்கு மிருபத் தேழா நக்ஷத்திரமே.

இன்னண வாய நாளே யெழுதினன் கன்னல் வேளூர்
மன்னிடு மான்ம நாத மாப்பெருங் குரவ னவான்
மன்னிய வளஞ்சூழ் சோழ மண்டல சதகந் தன்னைச்
சொன்ன நூற்றைந்து பாவாற் சொல்லினிற் றுலங்க மாதோ.

தருமை ஸ்ரீ சொக்கலிங்க சுவாமிகள் சொல்லியது.

தூய வின்னூலை யச்சி லியற்றி யுலகெங்கும்
மீக்கொண்டு விளங்கச் செய்தான் திருவாரூர்
வேதே சிகனூர் பெற்ற பிறங்கலையாம்
... ன் றுலகி லுதித்தவனே.

# பரிசோதனை பத்திரம்.

குறிப்பு:—தெரிந்த பிழைகள் திருத்தப்படவில்லை.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 15 | | 10 | இவர்களுக்கு, | இவர்களை, |
| 16 | | 20 | மண்டபத்தையும், | மண்டபமும், |
| | | 21 | வந்தனனென்ன, | வந்தனனென்ன |
| 49 | | 31 | பாட்டு, | பாட்டுக்கு, |
| 54 | 3 | 4 | புரிந்தான்ப | [illegible] |
| 56 | அ | 1 | புழைந்தாலும் | புகழ்[illegible] |
| 58 | 13 | 2 | மழைவிடை | மழவிடை[illegible] |
| 62 | உக | 2 | காணம் | கரணம் |
| 63 | உஎ | 4 | பெரிதா | பெரிதாகும் |
| | உஅ | 2 | ஒருண்டை, | தொண்டை |
| 66 | 35 | 2 | [illegible] | பெணடயலை |
| | 37 | 1 | [illegible] | யேயரித்து |
| | | 2 | [illegible]ன் வழியே | பொழிவினை[illegible] |
| | | 4 | விதைக்கேயென் | விதைக்கென் |
| | 38 | 4 | தண்டுடன் | தண்டும் |
| 70 | * | * | இப்பாட்டு | இப்பாட்டை |
| [illegible] | ௫0 | 4 | சோழியரே | சோழியரேய் |
| [illegible] | 56 | [illegible] | கன்றுப்புடையான் | [illegible] |
| [illegible] | | [illegible] | [illegible] | [illegible] |
| | | 5 | [illegible] | |
| [illegible]8 | அயவந்தி [illegible] | | | |
| | சாத்தப்[illegible] | | | |
| 17 | [illegible] | | | |

23515

கல்வி பயில்வதற்குக் கால வரையறைதான
செல்வராஜேந்திரனே செப்பக்கேள் - மெல்லக்
குடிக்குங் கடிக்குமிரு கொங்கைகளி னூடே
படித்தாற் படித்த படி.

(வேம்பத்தூர்ப் பிச்சுவையர் பாடல்)

வீடுபெற்ற வாதவூர் வித்தகர்போ மைச்சுமக்கும்
மாடுபெற்ற பேறுபெற மாட்டுவனோ - நாடரிய
வித்தை பயிலாமல் வீணுவி லேயுழல்தே
கித்தைச் சுமந்துழுத்தார் கள்.

(ஔவையார் பாட்டு)

விறகு தறிக்கக் கறி நறுக்க
வெண்சோற் றுப்புக் கடகுவைக்கப்
பிறகு பிளவு கிடைத்ததென்றல்
நாவாற்குப் பிளந்துகொள்ளப்
பறகு பறகென் றேசொறியப்
பதமா யிருந்த பாக்குவெட்டி
இறகு முளைத்துப் போவதெங்கே
எடுத்தீ ராகிற் கொடுப்பீரே.

[signature]

நட்ட வரமளிக்கும் கீர்த்தியுள்ள தெய்வங்கள்
ட்டோடு வெங்கே ழுவோனி - வேட்டிடையோ
ங்கால் மெல்லாந் தெருத்தினும் அல்லவும்
ல்லாதேனும் செம்பானும் காண்.

ஒன்று வந்தவன் தாளிமிர்க் கோடக்
குடேன் கொம்புக்
நன்று காட்ட முடைவன் குடங்கொண்டுத்
தேன் [redacted] பழியத்
நானின்ற உரிமை தனக்கென்று
கேட்டுத் தருவர்வரம்
பானின்ற சோலை புடைசூழ்
வடமலை மாதவரே.

ாயவ ஞய நமனென்று நில்வுதிர்
மாளும் பாதம் பணிந்தேத்து மறந்தியேன்
ராகு மேனிக் கருணை கூர்மேத்தி
ாரா தனையன் அறியாமை பென்றுமே

Dr. U. V. S. IYER LIBRARY
MADRAS-90